28·c
கூடிய வெப்பநிலை 32 c
குறைந்த வெப்பநிலை 26 c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 ■ கதிர்: 168 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 30, செவ்வாய் 13.05.2014

13 MAY ... சபை ... நூலகம் ... ஞானை

# ஆளும்கட்சியின் உறுப்பினர் பட்டப்பகலில் சுட்டுக் கொலை

## -பேலியகொடையில் பயங்கரம்; விசாரணைக்கு 5 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, மே 13

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேலியகொடை நகரசபை உறுப்பினர் ஒருவர் நேற்று முற்பகல் நடுவீதியில் வைத்து கொடூரமாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சினிமாப் படப் பாணியில் பட்டப்பகலில் அரங்கேறிய இந்தக் கொடூரச் சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிசைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.


கூட்டணி அரசின் ஆளுகைக்குட்பட்ட பேலியகொடை நகர சபை உறுப்பினரான சாமில சந்தருவான் என்பவரையே மர்மக் கும்பலொன்று சுட்டுப் படுகொலை செய்துள்ளது. திட்டமிட்ட அரசியல் படுகொலையாக இது இருக்கலாம் என பல கோணங் களில் சந்தேகங்கள் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், படுகொலைக்கான உண்மைக் காரணம் என்ன? கொலை சூத்திரதாரிகள் யார்? இதன் பின்னணி என்ன? என்பவை உள்ளிட்ட தகவல்களை கண்டறிவதற்காக பொலிஸார் விசேட விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். அதற்கென ஐந்து விசேட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. அத்துடன், பேலியகொடை பகுதியில் தேடுதல் வேட்டையும் ஆரம்பமாகியுள்ளது.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் துருப்புகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண நேற்று மாலை தெரிவித்தார்.

பேலியகொடை, நுங்கம் கொட எனும் பிரதேசத்திலுள்ள தனியார் கொள்கலன் களஞ்சிய சாலைக்கு அருகில் நேற்று மு.ப. 11.25 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், நகரசபை உறுப்பினருடன் காரில் பயணித்த 19வயதுடைய பிரபாத் மதுஷங்க என்ற இளைஞரே படுகாயமடைந்து கொழும்பு தேசியவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

21ஆம் பக்கம் பார்க்க



தடயங்களை ஆராயும் பொலிஸார்

## கட்டுத் துவக்கு வெடித்ததில் சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 13

கட்டுத் துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாள் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாயான டபிள்யூ. ஜி.எஸ்.தர்ஷன (வயது-25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

21ஆம் பக்கம் பார்க்க

## பயன் ஏதுமின்றி முடிந்தது இரு நாட்டு மீனவர் பேச்சு



யாழ்ப்பாணம்,மே.13

வெவ்வேறு கோரிக்கைகளை இரண்டு நாட்டு மீனவர்களும் நிராகரித்தனர். இதனால் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்திய இலங்கை மீனவர்களுக்கிடையிலான பேச்சு நேற்று எந்த முடிவுகளும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பான இரண்டாம் சுற்றுப் பேச்சு நேற்று கொழும்பில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30 மணிவரை இந்த பேச்சு நீடித்தது. ஆனாலும் 11 மணி நேர பேச்சுக்களின் போது இரு தரப்பு மீனவர்களிடையே எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

இந்த பேச்சில் இலங்கை மீனவ சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 20 உறுப்

21ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக் கழகத்தை உடன் செயற்படுத்த வேண்டும்

### கோருகின்றது பல்கலை மாணவர் பேரவை

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பாதுகாப்புத் தரப்பினரின் முடிவின்படியே மூடப்பட்டுள்ளது. போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளுக்குத் தமிழ் மாணவர்கள் அஞ்சலி செலுத்துவதைத் தடுப்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக யாழ்.பல்கலைக் கழகத்தை மட்டுமன்றி, ஏற்கனவே மூடப்பட்டுள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தையும் உடனடியாகத் திறந்து கற்றல் நடவடிக்கைகயை முன்னெடுக்க வழிவகுக்க வேண்டும்- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது அனைத்துப் பல்கலைக்

21ஆம் பக்கம் பார்க்க

## தென்னிலங்கை அமைப்புகளுடன் கலந்துரையாடியது கூட்டமைப்பு

### எதிர்கால போராட்டங்கள் குறித்து

யாழ்ப்பாணம், மே. 13

இராணுவ ஆக்கிரமிப்பு, மதங்கள் மீதான தாக்குதல், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், தென்னிலங்கை மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்துள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை, அவர்களது யாழ்.மாவட்ட அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரை

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வரும் பாப்பரசர் கூட்டமைப்பை சந்திக்கலாம்



யாழ்ப்பாணம், மே. 13

எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு வரவுள்ள பாப்பரசர் பிரான்ஸிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார் என்று தெரியவருகின்றது.

வத்திக்கானுக்குச் சென்றிருந்த இலங்கையின் 12 மறை மாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் கர்த்தினால்களுடன் பாப்பரசர் பிரான்ஸிஸ் சந்திப்பு நடத்தியிருந்தார். தற்போது சந்திப்புக்களை முடித்துக்கொண்டு மறை மாவட்டங்களின் ஆயர் மற்றும் கர்த்தினால்கள் இலங்கை திரும்பியுள்ளனர். சந்திப்பின் போது இலங்கை ஆயர்கள்

21ஆம் பக்கம் பார்க்க

## கொன்று குவித்துவிட்டு அதற்கு கொண்டாட்டமா

### வெற்றிவிழா அழைப்பு குறித்து சீறுகின்றார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, மே 13

தமிழ் உறவுகளைக் கொத்துக் கொத்தாகக் கொன்றுவிட்டு அரசு நடத்தும் போர் வெற்றி விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு வேறு விடுத்துள்ளார்கள். அந்தக் கொண்டாட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ள மாட்டார்கள் - என்று சீற்றமாகத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

மாத்தறையில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசின் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்

04ஆம் பக்கம் பார்க்க

## ‘விடுலைப் புலியா நீ?’

### வடமாகாண சபை உறுப்பினரிடம் துருவியது பயங்கரவாத தடுப்புப் பிரிவு

யாழ்ப்பாணம், மே. 13

வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனிடம் ‘நீ விடுதலைப் புலியா?’ என்று கேட்டு நேற்றைய தினம் விசாரணை செய்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே விசாரணைகளை மேற்கொள்கின்றோம் என்றும் அவரிடம் தெரிவித்துள்ளனர். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்கள் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்காக,

21ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சாவுடன் கைதான பெண்ணுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 13

வேலணையில் 4 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று உத்தர

21ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு காணி சுவீகரிப்பு தொடர்பில் அவற்றின் உரிமையாளர்கள் ஆலோசனை

யாழ்ப்பாணம், மே 13

வலி.வடக்கில் தமது தேவைக்காக 186 ஏக்கர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்படவுள்ளது என்று தெரிவித்து கடற்படையினர் அறிவித்தல் விடுத்துள்ள நிலையில், அதற்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது தொடர்பாக நாளைய தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. குறித்த காணிகளின் உரிமையாளர்களே இது தொடர்பான கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளனர்.

வலி.வடக்கில், உயர் பாதுகாப்பு வலயப் பகுதி முழுவதும் இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்படும் என்று கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி சுவீகரிப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. அதற்கு எதிராக அந்தப் பகுதி மக்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு,

21ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் உரிமைக்கு மதிப்பளிப்பதே பௌத்தர் உரிமைக்கு உத்தரவாதம்

## அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 13
தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து அவற்றைப் பாதுகாத்தால்தான் பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும் என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அரச தாதியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்க வேண்டுமாயின், அதற்கு வைத்தியர்களும், தாதியர்களும் ஒன்றிணைந்த சேவையை வழங்கவேண்டும். தாதியர்களுக்கு சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வைத்தியர்கள் மறுக்கின்றனர். வைத்தியர்கள் உலகை திறந்த மனதுடன் பார்க்கவேண்டும். தாதியர்களின் உரிமைகளை வைத்தியர்கள் வழங்க வேண்டும். அவர்களின் உரிமை களை முடக்கும் செயலில் வைத்தியர்கள் ஈடுபடக்கூடாது.



குறிப்பாக நாட்டிலுள்ள சிங்கள மக்கள் தமது உரிமைகளுடன் சிறப்பாக வாழவேண்டுமாயின், அவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

அதுபோலவே, வைத்தியர்கள் தமது உரிமைகளுடன் சிறந்த சேவையை வழங்க வேண்டுமாயின், அவர்கள் தாதியர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

எனவே, பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சேவையாற்றும் நிலை தாதியர்களுக்கு இனியும் ஏற்படக்கூடாது. அடுத்த வருடம் தாதியர் தினத்தைக் கொண்டாடும்போது, அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு சிறந்த நிலையில் இருக்க வேண்டும்" - என்றார்.

## சிறுவன், சிறுமி மீது துஷ்பிரயோகம்

*முதியவர் கைது*

நெடுந்தீவுப் பகுதியில் 10 வயதுக்குட்பட்ட சிறுவன் மற்றும் சிறுமி ஆகிய இருவரையும் கடந்த 5 மாதங்களாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 69 வயது முதியவர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் நெடுந்தீவுப் பொலிஸார்நேற்று கைதுசெய்துள்ளனர்.

சிறுவனும் சிறுமியும் அயலிலுள்ள முதியவரின் வீட்டுக்கு விளையாடச் செல்லும் போது அவர்களை முதியவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்தார். இதனை அடுத்து பெற்றோர் நெடுந்தீவு பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் முதியவரைக் கைது செய்துள்ள பொலிஸார் அவரை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (ஜ-4-400)

## மத்திய வங்கியின் நிரந்தர அலுவலகம் கிளிநொச்சியில்



யாழ்ப்பாணம், மே. 13
இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையின் நிரந்தர அலுவலகம் அடுத்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

போர் முடிவடைந்து சில மாதங்களிலேயே வடபகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பிராந்தியக் கிளை திறந்து வைக்கப்பட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில், வடபிராந்தியக் கிளை செயற்பட்டு வருகின்றது. நிரந்தரக் கட்டிடம் இன்றி தற்காலிக கட்டிடத்திலேயே அது செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில், நிரந்தரமாக வடக்கு மாகாண பிராந்தியக் கிளையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் நகரில் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் மற்றும் அதனோடு இணைந்த நவீன நகரிலேயே மத்திய வங்கியின் கட்டடமும் அமையவுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. அடுத்த வருட முற்பகுதியில் பிராந்தியக் காரியாலயம் திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தமிழகத்துக்கு அகதியாக சென்றவர் பலரின் பணத்தை ஏப்பமிட்டவராம்

### இன்ரபோல் உதவியை நாடுகின்றது சாவகச்சேரி நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மே 13
தமிழகத்திற்கு கடந்த வாரம் அகதிகளாகச் சென்றவர்களில் ஒரு தம்பதியினர் பல மோசடிகளில் ஈடுபட்டவர்கள் என்றும் அவர்களுக்கு எதிராக வடக்கு மாவட்ட நீதிமன்றங்களில் 11 வழக்குகள் பதிவாகி அவ்வழக்குகள் தொடர்பாக அவர்கள் தேடப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவைச் சேர்ந்த பத்து பேர் கடந்த வாரம், தமிழகத்தின் கரையோர மாவட்டமான தனுஷ்கோடிக்குபடகுமூலம்அகதிகளாகச் சென்றனர். இலங்கையில் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், அதனாலேயே அகதிகளாக இந்தியாவுக்கு வந்தோம் என்றும் அவர்கள் அங்கு கூறியிருந்தனர்.

அவர்களில் கதிரவேலு தயாபரராஜா மற்றும் அவரது மனைவியான உதயகலா தயாபரராஜா ஆகியோரே பல்வேறு மோசடிகள் தொடர்பாக இலங்கையில் தேடப்பட்டு வருபவர்கள் என்று தெரியவருகின்றது. இத்தம்பதியினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல்வேறு இடங்களில் மோசடிகளை மேற்கொண்டு பல மில்லியன் ரூபாவைச் சுருட்டினர் எனப் பொலிஸ்நிலையங்களில்முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸாரினால் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டபோதிலும் வழக்குகளுக்கு சமுகம் கொடுக்காததால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நீதிமன்றங்களால் இவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, அவர்கள் தேடப்பட்டும் வந்தனர்.

குறித்த தம்பதியர் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்று, அங்கு அகதிகளாகத் தஞ்சம் கோரியமை தொடர்பில் ஊடகங்களில் படங்கள் வெளியாகின. அதைப் பார்த்த - அவர்களினால் பாதிக்கப்பட்ட - சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் அது குறித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிட்டுத் தகவல் தெரிவித்தனர். அதனையடுத்தே சாவகச்சேரிப் பொலிஸார்நீதிமன்றில்அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

தற்போது அந்தத் தம்பதியரை சர்வதேச பொலிஸ் (இன்ரபோல்) உதவியுடன் கைது செய்து இலங்கைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையின் முதற்கட்டமாக இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றத்தினால் நீதி அமைச்சின் செயலாளருக்குத் தெரியப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (ற-5-9)

## குருநகர் யுவதி வழக்கில் மதகுருக்கள் சாட்சியம்

யாழ்ப்பாணம், மே 13
குருநகர் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் சாவு தொடர்பான வழக்கில், சாவுக்குக் காரணமாக இருந்தனர் என்று யுவதியின் உறவினர்களால் குற்றஞ்சாட்டப்படும் இரண்டு மதகுருமாரும் யாழ்.நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தனர். பின்னர் வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது சாட்சியமளித்த மதகுருக்கள் இருவரும், "நாம் பெரியகோயிலில் பாதிரியார்களாக உள்ளோம். அங்கு மறைக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. அங்கு சுமார் 500 வரையான மாணவர் கள் கற்கின்றனர். சுமார் 30 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். அவ்வாறுள்ள ஆசிரியர்களில் கொன்சலிற்றாவும் ஒருவர். அவர் உயிரிழப்பதற்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இருந்து மறைக்கல்விக்கு வருவதில்லை. சக ஆசிரியர்கள் போய் விசாரித்தனர். அவரது தாயார் சுகவீனம் காரணமாக கிளிநொச்சியில் உள்ளார் என்றும் அவரே தாயாரைப் பார்ப்பதாகவும் அவரது வீட்டிலிருந்தவர்கள் கூறினர். மறைக்கல்வி தொடர்பான விடயங்களுக்கு மாத்திரமே தாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம்." - என்று தெரிவித்தனர்.

அதன்பின்னர் வழக்கு எதிர்வரும் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-4)

## முல்லைத்தீவில் வெற்றி சின்னத்துக்கு அஞ்சலி

### படைத்தரப்பால் நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 13
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று போர் வெற்றிச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு படைத்தரப்பினரால் நடத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர், போரால் பொருளாதார சேதம் ஏற்பட்டது. உயிரிழப்புக்கள் நேர்ந்தன. உடைமைகள் நாசமாகின. அதற்கும் மேலாக பலரும் மன வேதனைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எமது தாய் நாட்டில் அத்தகையதொரு நிலைமை மீண்டும் உருவாகுவதற்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது என குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கைக்காகவும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்."- என்றும் தெரிவித்துள்ளார். (ற)



இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பில் உடன் படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து கடந்த 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் இரு தரப்பிற்கும் இடையில் சீனாவில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ற)

## தடைகளைத் தகர்த்து மே 18இல் உறவுகளை அஞ்சலிப்பர் தமிழர்

கொழும்பு, மே 13
தமிழ் உறவுகளைத் திட்டமிட்டுக் கொன்றுவிட்டு அதை போர் வெற்றி விழாவெனக் கொண்டாடும் ராஜபக்ஷ அரசு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடக்கில் அனுஷ்டிப்பதற்குத் தடை விதிப்பது அடக்குமுறை ஆட்சியின் உச்சக்கட்டமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மாத்தறையில் பெருமெடுப்பில் போர் வெற்றி விழாவைக் கொண்டாடவுள்ள அரசும், அதன் படைகளும் வடக்கில் தமிழ் மக்கள் வீடுகளில் மாத்திரம் தமது உறவுகளை நினைவுகூர வேண்டும் என்று கட்டளையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள் ளது.


அரசும் அதன் படைகளும் எந்தத் தடைகளைப் போட்டாலும் அதனைத் தகர்த்தெறிந்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் மரணித்த தமது உறவுகளை மே 18 இல் தமிழ் மக்கள் நினைவுகூருவர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில், உயிரோடிருக்கும் தமிழ் மக்களின் மனதை நோகடிக்கும் விதத்திலும், தமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்ற ஆணவத்துடனுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிங்கள இனம் போர் வெற்றி விழாவைக் கொண்டாடி வருகின்றது. இந்நிலையில், போரில் மரணித்த தமது பெற்றோர், பிள்ளைகள் மற்றும் உறவினர்களை பொது இடங்களில் நினைவுகூர அரசும், அதன் படைகளும் தடை விதித்துள்ளன. இது மிகவும் மோசமான மனித உரிமை மீறலாகும்.

முள்ளிவாய்க்காலில் எமது தமிழ் உறவுகள் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலிலும், துப்பாக்கிச்சூட்டிலும், சித்திரவதைகளிலும் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டார்கள். இந்நிலையில், கூட்டமாக அவர்களுக்கு அஞ்சலி செய்ய முடியாது என்று அரசும் அதன் படைகளும் தடைபோடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது காண்டுமிராண்டித்தனமானது.

ராஜபக்ஷ அரசும் அதன் படைகளும் எந்தத் தடைகளைப் போட்டாலும் அதனைத் தகர்த்தெறிந்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் மரணித்த தமது உறவுகளை மே 18 இல் தமிழ் மக்கள் நினைவுகூருவர் - என்று தெரிவித்தார். (ற-சி)

# வன்னி முருங்கைக்காய் வருகையால் விலை வீழ்ச்சி



யாழ்ப்பாணம், மே 13
வன்னிப் பிரதேசத்தில் இருந்து பெருமளவில் முருங்கைக் காய்கள் குடாநாட்டுக்கு வியாபாரத்துக்கென எடுத்துவரப்படுவதால் அவற்றின் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது.
திருநெல்வேலி, சாவகச்சேரி, மருதனார்மடம் ஆகிய பிரதான சந்தைகளுக்கே வன்னி முருங்கைக் காய்கள் அதிக அளவில் வந்து சேர்வதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.
தற்போது இந்த முருங்கைக் காய்கள் கிலோ 50 ரூபாவுக்கு விற்கப்படுகின்றன.
குறிப்பாக குடாநாட்டிலும் இம்முறை கூடுதலான மக்கள் கறிமுருங்கைச் செய்கையில் ஈடுபட்டும் வருகின்றனர்.
எனவே முருங்கைக் காய் விலை வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. (வ-17)

# சாவகச்சேரி நகரசபைக்குரிய காணி; யாருக்கு வழங்குவது என முடிவில்லை


தென்மராட்சி, மே 13
சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான காணித் துண்டை யாருக்கு வழங்குவது என்று நீண்டநேரம் விவாதித்த போதும் கடைசியில் முடிவு எடுக்க முடியாத நிலையில் விடயம் குறித்து முடிவெடுப்பது அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

> கடந்த 2000 ஆம் ஆண்டு போர் வேளையில் மடம் முற்றாக அழிந்த போதிலும், அது புனரமைக்கப்படாமல் காணப்பட்டது.

சாவகச்சேரி மடத்தடிச் சந்தியில் உள்ள சபைக்குச் சொந்தமான காணியில் மடமொன்றும் கிணறொன்றும் இருந்தன. மாட்டுவண்டியில் பயணிப்போர் மற்றும் நடந்து வருவோர் இளைப்பாறுவதற்கு வசதியாக மடமும் தொட்டியுடன் கூடிய கிணறும் காணப்பட்டன. வியாபார நோக்கில் மாட்டு வண்டில்களில் வருவோரும் தூர இடங்களுக்கு நடந்து செல்வோரும் இந்த மடத்தில்சமைத்து உணவருந்தி இளைப்பாறிச் சென்றதாக முதியவர்கள் பலரும் கூறுவர்.
இந்த நிலையில் கடந்த 2000 ஆம் ஆண்டு போர் வேளையில் மடம் முற்றாக அழிந்த போதிலும், அது புனரமைக்கப்படாமல் இருந்து வந்தது.
இந்த நிலையில் இந்தக் காணியைக் குறிவைத்து யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்போர் சங்கம், கிளை அலுவலகம் அமைக்கவும், பொலிஸ் திணைக்களத்தினர் தென்மராட்சி பிரதேசத்துக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தை அமைப்பதற்கும் இடம் வழங்குமாறு நகர சபையைக் கோரிய கடிதங்கள் நேற்றைய கூட்டத்தில் ஆராயப் பட்டன.
இது தொடர்பில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்ட போதிலும் யாருக்கு அக்காணியை வழங்குவது என்று முடிவு எடுக்கப்படாத நிலையில் விடயம் குறித்து முடிவெடுப்பது அடுத்து கூட்டத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## ஓட்டோவை மோதியது பஸ்

வரணி, மே 13
கொடிகாமம் சந்திக்கு அண்மையில் பயணிகள் பஸ் ஒன்று அதே வழியில் முன்னால் சென்று கொண்டு இருந்த ஓட்டோ ஒன்றுடன் மோதியது. இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்றது.
இந்த விபத்தில் ஓட்டோ சேதத்துக் குள்ளாகியது. தெய்வாதீனமாக விபரீதம் ஏதும் ஏற்படவில்லை.
கொழும்பு - யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ்ஸே கொழும்பில் இருந்து யாழ். நோக்கி பயணித்த வேளை இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.
உசன் பிர தேசத்தில் பேக்கரி ஒன்று நடத்தி வரும் நபர் ஒருவரின் ஓட்டோ ஒன்றே இந்தச் சம்பவத்தில் சிறு சேதங்களுக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ-122)



கடந்த வாரம் திடீரென வீசிய சுழல்காற்றால் ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி மாதா கோவில் சேதமடைந்துள்ளது. அதன் மெழுகுதிரி விற்பனை நிலையம் முழுமையாக சேதமடைந்துவிட்டது. சுழல்காற்றால் ஆலயத்தின் சீற்றுக்கள், ஓடுகள் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்டு சிதைவடைந்துள்ளன. அவ்வேளையில் கோவிலில் வழிபாடுகள் எதுவும் இடம் பெறாமையால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன என்று ஊர்மக்கள் தெரிவித்தனர். (ஓ)

# கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவம்

கொழும்பு, மே 13
கதிர்காமம் முருகன் ஆலயத்தின் இந்த வருட வருடாந்த உற்சவம் தொடர்பான விவரங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியமையை அடுத்து கதிர்காமம் முருகன் ஆலய நிர்வாகச் செயலாளர், குறிப்பிட்ட திணைக்களத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.
இந்த வருடத் திருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் எனவும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீர் வெட்டுடன் நிறைவுபெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இத்திகதிகளுக்கு அமைய கதிர்காம பாதயாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் தமது பயண ஒழுங்குகளை ஒழுங்கு செய்து கொள்ளுமாறும் ஏனைய பக்தர்கள் குறித்த உற்சவ காலத்தில் பூசைகளில் கலந்து கொள்ள தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் திணைக்களம்விடுத்துள்ளசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# குடாநாட்டில் தற்போது மீன்பாடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 13
தற்போதைய பருவப்பெயர்ச்சிக் காற்றைத் தொடர்ந்து மீன்களின்பாடு குடாநாட்டில் அதிகரித்துள்ளது.
கூடுதலான மீன்கள் மீனவர்களின் வலையில் சிக்குவதால் அவற்றின் விலை திடீரென சரிவடைந்துள்ளது. பாஷையூர், குருநகர், கொட்டடி ஆகிய மீன் சந்தைகளில் கடந்த தினங்களாக அதிகமான மீன்கள் வந்து



சேர்கின்றன. மீன்கள் அதிகளவில் சந்தைகளுக்கு வந்ததால் அவற்றின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.
பாரை, விளைமீன், கட்டா மற்றும் கணவாய் போன்றவை அதிகளவில் சந்தைக்கு வருகின்றன. அதில் பெரிய அளவிலான மீன்கள் கிலோ 350 ரூபாவாக விற்கப்படுகின்றன. (வ-17)

# பஸ்ஸில் பயணித்த பெண்மணியின் கைப்பைக்குள் இருந்த பணம் மாயம்

தென்மராட்சி, மே 13
பளையிலிருந்து பஸ்ஸில் வந்த பெண்ணின் கைப்பைக்குள் வைத்திருந்த 15 ஆயிரம் ரூபா பணம் மாயமாக மறைந்துள்ளது.
சாவகச்சேரியில் உள்ள ஒருவருக்கு கொடுக்கவென பணத்துடன் வந்த குறித்த பெண்- பூனை கடித்த மகனுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றுவதற்காக மருத்துவமனைக்கு வந்து அதற்கான துண்டை எடுத்தபோது அதனுடன் வைக்கப்பட்டிருந்த பணத்தைக் காணாமல் தவித்ததைக் காணமுடிந்தது.சனக்கூட்டம் நிறைந்த பஸ்ஸில் பயணித்ததாகவும் தோளில் போடப்பட்டிருந்த கைப்பைக்குள் வைத்த பணத்தை சனநெருக்கடியைப் பயன்படுத்தி எவரோ திருடியிருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கலைஞர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 13
வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் கலை, பண்பாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்ள விரும்பும் வடமாகாணக் கலைஞர்கள் தங்களது வரவை பிரதேச செயலகத்திலுள்ள கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
அத்துடன் கலந்துரையாடலில் பங்குபற்றி கலாசாரம் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஓ)

# கொக்குவில் புதிய சந்தையில் மீன் வியாபாரிகள் திண்டாட்டம்

## இடநெருக்கடி; காற்றோட்ட வசதியும் இல்லை

கொக்குவில், மே 13
நல்லூர் பிரதேச சபையினால் பல மில்லியன்ரூபா செலவில் பல வசதிகளுடன் நவீனமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கொக்குவில் பொதுச் சந்தையில் கடலுணவு வியாபாரிகளுக்கு இடநெருக்கடியும் அசௌகரியங்களும் ஏற்படுகின்றன.
சுற்றிவரக் கண்ணாடிகளினால் மூடப்பட்டுள்ள இந்தக் கட்டடத்துக்குள் காற்றோட்ட வசதி இல்லாததனால் வியாபாரிகள் மட்டுமல்ல பொது மக்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.
காங்கேசன்துறை வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சந்தை வளாகத்தில் மரக்கறி விற்பனைக்கு ஒரு பகுதியும் கடலுணவு விற்பனைக்கு ஒரு பகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.
மரக்கறி விற்பனை செய்யும் பகுதி திறந்த வெளி அரங்கு போல் காற்றோட்ட வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு வியாபாரிகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவு.
சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு கடலுணவு விற்பனைப் பகுதி கண்ணாடிகளால் மூடி மறைக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகள் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகிறார்கள். கடலுணவு விற்பதற்குப் போதிய இடவசதி இருக்கின்ற போதிலும் ஒரு வியாபாரிக்கு 2½ அடி நீளம் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதால் இவர்கள் இடநெருக்கடி மத்தியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.
இதேநேரம் காற்றோட்ட வசதியில்லாமையினால் பொது மக்களும் பெரும் அவஸ்தைக் குள்ளாகிறார்கள். (ஓ-115)

# சாவகச்சேரி நகரில் ஏ-9 வீதியின் மருங்கில் வாகனங்களை நிறுத்தலாம்

## ஜூன் மாதம் நடைமுறைக்கு

தென்மராட்சி, மே 13
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியின் இரு பக்கங்களிலும் குறித்த கிழமைகளில் வாகனங்களை நிறுத்துவது ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட் டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நவீன சந்தை தொடக்கம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வரையான பகுதியில் ஒன்றுவிட்ட ஒரு நாள் ஒரு பக்கத்தில் வாகனங்களை நிறுத்துவது தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் உப தலைவரால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. வாகனங்கள் தினமும் இரு பகுதிகளிலும் நிறுத்தப்படுவதால் பொது மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும், இதனால் வீதி விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவித்த உப தலைவர் இது தொடர்பாக பொலிஸார் மற்றும் வர்த்தகர்களுடன் கலந்துரையாடி முடிவொன்று எட்டப்பட்டதாகத் தெரிவித்தார்.

> **வீதி விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவித்த உப தலைவர் இது தொடர்பாக பொலிஸார் மற்றும் வர்த்தகர்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப் பட்டுள்ளது.**

இதன் பிரகாரம் சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையங்களின் முன்புறம் வீதியின் மறு பக்கத்தில் தினமும் நிறுத்தவும், கொமர்ஷல் வங்கி தொடக்கம் ஆதார மருத்துவமனை வரையான ஏ-9 வீதியில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு பக்கமாகவும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் மற்றைய பக்கமாகவும் வாகனங் களை நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உப தலைவர் கு.சதாசிவமூர்த்தி சபையில் தெரிவித்தார்.
இது தொடர்பான அறிவிப்பு பலகைகளை நட்டபின்னர் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டதாக தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## சைக்கிளில் வந்தவர் மயங்கி வீழ்ந்து சாவு

வலி.வடக்கு, மே 13

விறகு கட்டிக் கொண்டு சைக்கிளில் வந்தவர், திடீரென சையிக்கிளில் இருந்து வீழ்ந்து மயங்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மல்லாகம் மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் நேற்று நடந்துள்ளது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் வசந்தராஜா (வயது 62) என்பரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தற் போது உடல் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-86)

# ‘இந்த நிலம் ராணுவத்துக்கு சொந்தமானது’ ஆவணப்படத்தின் தமிழ் பதிப்பு வெளியீடு

ஈரோடு, மே, 13

இலங்கையின் இன்றைய கள நிலையை மையமாகக் கொண்டு பத்திரிகையாளர் மகா.தமிழ்ப் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ‘இந்த நிலம் ராணுவத்துக்கு சொந்தமானது’ ஆவணப் படத்தின் தமிழ் பதிப்பு வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொளத்தூர் மணி,கி.வே. பொன்னையன்,மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் கண. குறிஞ்சி,கா.சு.நாகராஜ் என இன்னும் பல தமிழ் அமைப்புகளின் ஆர்வலர்கள் பங்கேற்றினர்.

நிகழ்வில் கலந்து கொண்ட கொளத்தூர் மணி உரையாற்றும்போது,

“இலங்கையில் 2009 வரை மட்டும் இனப்படுகொலை நிகழ்வில்லை, அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இப்படம் ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டுகிறது. இந்தப் படத்தில் இறுதியாக 2012 யில் தமிழ்ப் பிரபாகரன் இலங்கை சென்ற போது நான்கு மணிநேரம் இலங்கை ராணுவத்தால் விசாரிக்கப்பட்டதன் ஒலிச் சான்றை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஒருமுறை கைது செய்தாலே விட்டால் போதுமடா சாமின்னு தான் பலர் வருவார்கள். அங்குள்ள நிலைமைகளை மையமாக வைத்து 'புலித்தடம் தேடி' என்ற எழுதிவிட்ட பிறகும், 2013ஆம் ஆண்டு மீண்டும் தைரியமாக சென்று கைது செய்யப்பட்ட பல அழுத்தங்களுக்கு பிறகு திரும்பி வந்தார்.

இன்று சிங்கள மயமாக்கல் எப்படி நிகழ்கிறது என்று இதிலும் காட்டப்பட்டுள்ளது. இனப்படுகொலை என்பது வெறுமனே உயிர்களை கொல்வது மட்டுமல்ல, நிலங்களை பறிப்பதன் வழியாக இப்போது இலங்கையில் இனப்படுகொலை நிகழ்கிறது. இந்திய அனல் மின் நிலையத்துக்காக சம்பூர் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பறிக்கப்பட்டு இடப்பெயர்வு முகாம்களில் மக்கள் வாழ்கின்றனர். அந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களையும் 2011ஆம் ஆண்டுடோடு இலங்கை அரசு நிறுத்திவிட்டது. இப்படி இன்னும் ஏராளமான நிலப்பறிப்புகள் நடந்துக் கொண்டு உள்ளன.

தமிழ் பிரபாகரன் குறிப்பிட்டது போல நம் இனத்துக்கு அப்பால், இந்தபிரச்னைகளைபற்றி தெரியாதவர்களுக்கு இப்படம் கொண்டு சொல்லப்பட வேண்டும்' - என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி, “இப்படம் இந்தியாவின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பார்வைக்கும் கொண்டு செல்ல வேண்டிய படம். இன்னும் பல மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும். அதற்காகநிச்சயம்நான்துணை நிற்பேன்”- என்று தெரிவித்தார்.

கடந்த மே 4 ஆம் திகதி குறித்த ஆவணப்படத்தின் ஆங்கில பதிப்பு பெரியார் திடலிலும் மே 10 ஆம் திகதி மும்பையிலும் திரையிடப் பட்டிருந்தது. (ந-10)

## சித்திர புத்திரர் ஏடு நூலாக வெளியீடு

யாழ்ப்பாணம், மே 13

சுமார் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சித்திர புத்திரர் கதையின் ஏட்டுச் சுவடிகள் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் நூலுருவாக்கப்பட்டு நாளை வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

ஆலயங்களில் படிப்பதற்கு ஏற்ற வகையில் அந்தச் சுவடிகள் நூலுருவாக்கப்பட்டுள்ளன. வட்டு தெற்கு தெய்வன்பதி ராஜராஜேஸ்வரி அம்பாள் கோயிலில் நாளை புதன் கிழமை மதியம் 2 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ள இந்தநூலில் அமுதேஸ்வரன் கதை, நம்பிராட்டிகதை, செகதரராமன்கதை மற்றும் செட்டிச்சி அம்மன் கதை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ந-4)

## பொதுத் தேர்தலை நடத்தினால் அரசுக்கு ஆசனங்கள் குறையும்

கொழும்பு, மே 13

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையில், முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கும் 15 நாடாளுமன்ற ஆச னங்கள் குறையும் எனவும், அதனால் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட்டு பின்னர் பொதுத் தேர்தலை நடத்தினால் 10 ஆசனங்களே குறையும் என்று அரசியல் ஆய்வாளர்கள் அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அரசுக்கு மூன்றில் இரண்டு பெருபான்மை பலத்தைப் பெறமுடியாது போகும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உரிய காலத்துக்கு முன்னர் பொதுத் தேர்தலையோ ஜனாதிபதித் தேர்தலையோ நடத்தாது, அதனை ஒத்தி வைக்க வேண்டும் என்று அரசின் உயர் மட்ட அமைச்சர்களால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று தகவல் கள் வெளியாகியுள்ளன. முத லில் பொதுத் தேர்தலை நடத்தி விட்டு அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் எனச் சிலரும், முத லில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திய பின்னர், அடுத்து பொதுத் தேர்தலை நடத்தலாம் எனச் சிலரும் யோசனை முன் வைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட பேச்சு வார்த்தை ஒன்று நடைபெற விருந்ததுடன், திடீரென அது ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் தமக்கு சார்பான அரசு ஒன்றை ஏற்படுத்த முயற் சித்து வரும் சந்தர்ப்பத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவது அரசுக்குப் பாதிப்பாக அமை யும் எனவும் அரசியல் ஆய் வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். முதலில் மேற்குலக நாடுகளிடம் இருந்து வரும் தடைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவடையவுள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் இரண்டாம் தவணை பதவிக்காலமும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவடையவுள்ளது.

இந்த நிலையில், எந்த விதத்திலாவது இந்த இரண்டு தேர்தல்களையும் முன்கூட்டியே நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ந)

## இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் அடைப்பு

சென்னை, மே 13

இந்தியக் கடல் பகுதியில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகக் கடலோரக் காவல் படையினர் சனிக்கிழமை அபீக் கப்பலில், கேப்டன் ஜேடி தலைமையில் தமிழக- ஆந்திர கடல் எல்லை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது இந்தியக் கடல் பகுதியில் மீன்பிடித்து,கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 11 பேரைக் கைதுசெய்தனர். அவர்களிடம் இருந்து 2 படகுகளையும் கைப்பற்றினர்.

கைதான இலங்கை மீனவர்கள் 11 பேரும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் காசிமேடு பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு சென்னை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

துறைமுகப் பொலிஸார் அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள், இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்கள் நந்தில், பதுங்கா ஆகிய படகுகளில் இந்திய கடல்பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் ததும் தெரியவந்தது.

பின்னர் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார், நேற்றுமுன்தினம் மாலை 11 பேரையும் எழும்பூரில் உள்ள சென்னை பெரு நகர நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். (வ)

## இலங்கையரான ஹுசைன் அம.தூதரக அதிகாரிகளையும் உளவுபார்த்தாராம்

சென்னை, மே 13

இலங்கையில் உள்ள பாகிஸ்தானியத் தூதரக அலுவலகத்தால் இந்தியாவுக்கு அனுப்பி உளவுப் பணிகளை மேற்கொண்டதாக கூறப்படும் இலங்கையரான சகீர் ஹுசைன் சென்னையில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளின் நடமாட்டங்களையும் அவதானித்து வந்ததாக இந்திய விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்:-

குறித்த இலங்கையரிடம் இருந்து கொழும்பில் உள்ள பாகிஸ்தானிய தூதரகத்தின் வீசா அலுவலரான சித்தீக் மற்றும் ஷா ஆகிய இரண்டு அதிகாரிகளே தமிழகம் மற்றும் கர்நாடகா ஆகியவற்றின் தகவல்களைப் பெற்று வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் உட்பட்ட இடங்களில் புகைப் படங்களை எடுத்து இலங்கையில் உள்ள பாகிஸ்தானிய தூதரகத்துக்கு மின்னஞ்சலில் அனுப்பியதாக சகீர் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார். இதற்காக தமக்கு 20 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அமெரிக்கத் தூதரகம் உட்பட்ட இடங்களில் புகைப் படங்களை எடுத்து இலங் கையில் உள்ள பாகிஸ்தானிய தூதரகத்துக்கு மின்னஞ்சலில் அனுப்பியதாக சகீர் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார்.**

இந்த நிலையில் தமது மின்னஞ்சல் முகவரியில் யாரோ தாக்குதல் நடத்தியுள்ளமையால் தமக்கு அதனை திறக்கமுடியாதுள்ளதாக ஹுசைன் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அவரின் மின்னஞ்சலைத் திறக்க விசாரணை அதிகாரிகள் தொழில்நுட்ப அலுவலர்களின் உதவியை நாடியுள்ளனர்.

ஏற்கனவே ஒருமுறை போலியான கடவுச்சீட்டை வைத்திருந்தமை தொடர்பில் ஹுசைன் திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## கொன்று

பினர்களுக்கும் அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அதுகுறித்துக் கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ் வாறு சீற்றமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

“கூட்டமைப்பினருக்கு கோத்த பாய ராஜபக்ஷவால் நேற்று அனுப்பப்பட்டுள்ள மும்மொழி களிலான அழைப்பிதழில், 'சுதந்திர நாட்டின் உரிமையை, சுதந்திர தேசத்தின் அழகினை, சுதந்திர உள்ளத்தின் மகிமையை இலங்கை நாட்டின் இளைய தலைமுறையினருக்கு மீட்டுத் தந்த வெற்றித் தருணத்தின் தளபதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு எதிர்வரும் மே 18ஆம் திகதி காலை 7.30 மணிக்கு வரலாற்று சிறப்புமிக்க மாத்தறை நகருக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் உறவுகளைக் கொத்துக் கொத்தாகக் கொன்றுவிட்டு அரசு நடத்தும் போர் வெற்றி விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு வேறு விடுத்துள்ளார்கள். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் பங்கெடுக்க மாட்டார்கள்”- என்று தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்றுவந்த தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களைத் தோற்கடித்த மே 18 ஆம் திகதியை போர் வீரர்களின் தினமாக இலங்கை அரசு கொண்டாடி வருகின்றது.

கடந்த 5 வருடங்களாக மே மாதத்தைப் போர் வீரர்களின் மாதமாகப் பிரகடனப்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் இந்த ஆண்டு இலங்கை அரசின் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் மாத்தறையில் இடம்பெறவுள்ளன. இதற்குரிய ஏற்பாடுகள் யாவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முப்படைகளின் அணிவகுப்பு மற்றும் சாகச நிகழ்ச்சிகள் என்பனவும் இந்த வெற்றி விழாவில் இடம்பெறவுள்ளன.

ஆனால், வடபகுதியிலுள்ள தமிழ் மக்கள், இறுதிப் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர்ந்து பொது இடங்களில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடத்துவதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

(ந-சி)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அருளானந்தம்
தமிழ்விழி
(கேமா)

ஆண்டுகள் பல
கடந்தாலும் அழியாது
உன்நினைவு

த. முகவரி:
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

நி. முகவரி:
3ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

குடும்பத்தினர்

## காணவில்லை



தேவரன் புலோலி தெற்கைச் சேர்ந்த
பொன்னன் சிவஞானம் வயது - 64 மெலிந்த
தோற்றமுடையவர். சாரம் அணிந்துள்ளார்.
சேட் அணியவில்லை. 10.05.2014
சனிக்கிழமை 6 மணியிலிருந்து இதுவரையும்
காணவில்லை. மந்திகை சந்தைக்கு
செல்வதாகக் கூறிச் சென்றவர்.
இவர் சைக்கிளில் சென்றுள்ளார்.

தொடர்பு: 0772030659, 0767116650

# ட்ராக்டர், லொறியுடன் தண்ணீர் பவுசர்கள்

## வேலணை பிரதேச செயலகத்துக்கு 'வேள்ட்விஷன்' வழங்கியது

யாழ்ப்பாணம், மே 13

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் குடிதண்ணீர் விநியோகச் சேவையை இலகுவாக்கும் நோக்கில் 'வேள்ட் விஷன்' நிறுவனம், டிராக்டர்கள், லொறியுடன் கூடியதான இரண்டு பவுசர்கள் என்பவற்றை வேலணைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளதாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஷன் தெரிவித்தார்.

அவை மூலம் புங்குடுதீவு உட்பட அத்தியாவசிய குடி தண்ணீர் விநியோகம் தேவையான பகுதிகளுக்குத் தாமதமின்றி தண்ணீர் வழங்கப்படவுள்ளது. இதேவேளை மண்டைதீவுப் பகுதிக்கும் குடிதண்ணீர் விநியோகம் விரைவுபடுத்தப்படவுள்ளதாகவும் இதற்காக வேள்ட்விஷனுக்கு பிரதேச செயலகம் நன்றி தெரிவிப்பதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-7)

# ஒன்பது மருத்துவமனைகளுக்கு வடக்கில் உட்கட்டுமான வசதிகள்

வரணி, மே 13

வடக்கு மாகாணத்தில் இவ்வாண்டு 9 மருத்துவமனைகளுக்கு உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை என்பனவற்றுக்கு வைத்திய அதிகாரி விடுதிகள் நிர்மாணம், சாவகச்சேரி மருத்துவமனைக்கு சமையல் அறை நிர்மாணம், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு பிரசவப் பின் பராமரிப்பு விடுதி மற்றும் உடற்கூற்றியல் அலகு மீள்நிர்மாணம், பண்டத்தரிப்பு கிராமிய சித்த வைத்திய சாலைக்கு சமையல் அறை நிர்மாணம், கிளிநொச்சி பிரதேசத்தில் வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனைக்கு அவசர வைத்திய அதிகாரி தங்குமிட விடுதி அமைப்பு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை புனரமைப்பு வேலைகள், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை, பிரேத அறை நிர்மாணம் மற்றும் மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு அத்தியட்சகர் விடுதி நிர்மாணம் என்பன மேற்கொள்ளப்பட உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (வ-122)

# களவாடப்பட்ட ஆலய குத்துவிளக்குகள் மீட்பு

வலி. வடக்கு, மே 13

சுன்னாகம் ஐயனார் கோயிலில் களவாடப்பட்ட பித்தளை குத்துவிளக்குகளின் ஒரு பகுதி ஆலயத்துக்கு வந்த அடியவர்களால் ஆலயத்தின் பின்புறமாக உள்ள தாழம்பற்றையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சுன்னாகம் ஐயனார் ஆலயத்தில் இரண்டு தடவைகளும், ஐயனார் ஆலயத்துக்கு அருகில் உள்ள சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் ஒரு தடவையும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் சனிக் கிழமை பிற்பகல் குறித்த ஆலயத்தின் பின்புறத்தில் உள்ள தாழம் பற்றையில் களவாடப்பட்ட குத்துவிளக்குகள் சிலவற்றின் மேல் பகுதியும் அடிப்பகுதியும் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இரண்டு ஆலயங்களிலும் ஒரே மாதிரியான முறையில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதுடன் ஆலயத்தில் இருந்து பட்டுத் துண்டுகள் மற்றும் குத்து விளக்குகள் திருடப்பட்டு குத்துவிளக்குகளின் நடுப் பகுதிகள் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், கோயிலுடன் நெருங்கிய தொடர்புடையவர்களையும் சந்தேகத்துக்கு இடமானவர்கள் என்ற ரீதியில் அழைத்து விசாரித்துள்ளதாகவும் அந்தப் பகுதி பொது மக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# வேதாள வெங்காய உண்மை விதை செய்கை யாழ். குடாநாட்டில் ஆரம்பம்

அச்சுவேலி, மே 13

வேதாள வெங்காய உண்மை விதையைப் பயன்படுத்தி வெங்காயப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் யாழ். மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரை 200 கிலோ வெங்காய விதையை, கிலோ ஒன்று 10 ஆயிரத்து 400 ரூபா விலையில் கொள்வனவு செய்துள்ளனர்.

விதை வெங்காயத்துக்கான மூலதனச் செலவு குறைவு, நோய்த் தாக்கம் இன்றி பயிர்கள் வளர்வதோடு திட்டமிட்ட பிரகாரம் விளைச்சலைப் பெறக் கூடிய விதத்தில் இருப்பதால் விவசாயிகள் வேதாள வெங்காய உண்மை விதையைப் பயன்படுத்தி பயிர் செய்வதில் அதிகளவில் ஈடுபாடு கொண்டுள்ளனர். வேதாள வெங்காய உண்மை விதை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

> மரபுவழி வெங்காயக் குமிழ் விதை வெங்காயத்துடன் ஒப்பிடுகையில் விதைக்கான செலவு 75 வீதம் குறைவாக உள்ளது.


மரபுவழி வெங்காயக் குமிழ் விதை வெங்காயத்துடன் ஒப்பிடுகையில், உண்மை விதைக்கான செலவு 75 வீதம் குறைவாக உள்ளது.

நாற்று மேடையில் 40 தினங்கள் பராமரிக்கப்பட்டு பண்படுத்தப்பட்ட தோட்ட நிலத்தில் நடுகை செய்யப்பட்டு 70 தினங்களின் பின்னர் அறுவடை செய்யக் கூடியதாக இருப்பதால் பராமரிப்புச் செலவு மற்றும் உற்பத்திக் காலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு குறைவாக இருப்பதால் பலரும் வெங்காய விதை பயன்படுத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்புகின்றனர்.

மரபுவழி வெங்காயப் பயிர்ச் செய்கையில் மாற்றீடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள வேதாள வெங்காய உண்மைவிதை பயிர்ச் செய்கை முறை மூலம் வெங்காயப் பயிர் நாற்று மேடைத் தொழிலும் அறிமுகமாகியுள்ளது. இதுவரை காலமும் புகையிலை நாற்று, மிளகாய் - கத்தரி நாற்று வகைகளே நாற்று மேடை தொழில்முறையில் குடா நாட்டில் நடைமுறையில் இருந்து வந்துள்ளன. தற்போது வெங்காய நாற்று மேடைகளை தொழில் முறையும் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒரு கிலோ வெங்காய விதையில் ஆறு நாற்று மேடைகளை அமைக்கலாம். ஒவ்வொரு மேடையில் முளைக்கும் நாற்றுக்கள் 5 ஆயிரம் ரூபாவுக்கு குறையாமல் 6,500 ரூபா வரையிலும் கடந்த காலங்களில் விற்பனை செய்யப்பட்டதால் நாற்று மேடைத் தொழிலில் ஈடுபடுவோர் 40 தினங்களில் சுயமுயற்சி மூலம் கணிசமான அளவு வருமானத்தை ஈட்டக் கூடியதாக உள்ளது என்று கூறப்படுகின்றது.

சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, நவாலி உள்ளிட்ட பிரதேசங்களில் வெங்காய நாற்று மேடைத் தொழில் நடைபெறுவதால் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் அங்கு சென்று நாற்றுக்களைக் கொள்வனவு செய்து தமது தோட்டங் களில் நடுகை செய்கின்றனர். (வ-11)



கொழும்புத்துறை துண்டி இந்து மயானம் புனரமைக்கப்பட்டு சுற்றி பாதுகாப்பு மதில்கள் அமைக்கப்பட்டு நுழைவாயிலில் 'கேற்' போடப்பட்டுள்ளது. அங்கு வருபவர்களின் வசதி கருதி மடமும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ஒ-17)

# மின் மோட்டர் திருட்டு அதிகரிப்பு

## நீர்வேலிப் பகுதியில்

யாழ்ப்பாணம், மே 13

நீர்வேலி பிரதேசத்தில் நீர் இறைக்கும் மின்மோட்டர் திருட்டுக்கள் பரவலாக அதிகரித்துள்ளன. விவசாயத் தோட்டங்களில் பாதுகாப்பாக வைக்கப்படும் மின்மோட்டர்களை இரவு வேளைகளில் திருடர்கள் தந்திரமாகக் களவாடிச் செல்கின்றனர்.

தோட்டங்களில் மின்மோட்டர்களை வைப்பதற்கென பாதுகாப்பான அறைகள் அமைக்கப்பட்டு அவற்றுள் வைத்து மோட்டர்கள் பேணப்படுகின்றன. அந்த அறைகளின் கதவுகள் உடைக்கப்பட்டே அவை களவாடப்பட்டு வருகின்றன.

கடந்த வாரத்தில்கூட குறித்த பகுதியில் உள்ள விவசாயத் தோட்டம் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட நீர் இறைக்கும் மின்மோட்டர் ஒன்றைத் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். திருடர்களின் இந்தத் திருட்டு சம்பவங்களை அடுத்து விவ சாயிகள் தமது விவசாய நிலங்களில் இரவு நேர பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

# பிரதான வீதியில் மாட்டெரு குவிப்பு; போக்குவரத்துக்கு பெரும் இடையூறு

வலி.தென்மேற்கு, மே 13

பண்டத்தரிப்பு- மாதகல் பிரதான வீதியின் ஓரத்தில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் பல இடங்களில் மலை போல் குவிக்கப்பட்டுள்ள மாட்டெருவால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள் வாகனப் போக்குவரத்துக்கு வசதியாக வீதியோரத்தில் உள்ள எருக்குவியலை விரைவாக அப்புறப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து மாதகல் செல்லும் பிரத்தான வீதி திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் அவ்வீதியில் பயணம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

இந்த நிலையில் குறித்த பகுதியிலுள்ள வயல் நிலங்களில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிர்களுக்குத் தேவையான மாட்டெருவை வன்னியிலிருந்து லொறிகளில் ஏற்றி வந்து வீதியோரங்களில் குவித்துள்ளனர்.

ஏற்கெனவே வீதி புனரமைப்பின்றி இருப்பதால் பயணம் செய்வதில் சிரமத்துக்குள்ளாகி வரும் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் வீதியோரத்தில் பல இடங்களில் குவிக்கப்பட்டுள்ள மாட்டெரு குவியல்கள் காரணமாக மேலும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். (வ-115)

# வீதிப் புனரமைப்புக்கான மூன்றாம் கட்ட கொடுப்பனவை வழங்க உறுப்பினர்கள் எதிர்ப்பு

## வலி.தென்மேற்குப் பிரதேச சபைக் கூட்டத்தில்

வலி.தென்மேற்கு, மே 13

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 5 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ள ஐந்து வீதிகளுக்கான மூன்றாம் கட்டக் கொடுப்பனவை வழங்குவதற்கு உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். வீதிகளின் குறைபாடுகள் தரம் குறித்து தொழில்நுட்ப உத்தியோகத்தர், பொறியியலாளர் ஆகியோரின் அறிக்கை கிடைத்த பின்னரே கொடுப்பனவு வழங்குவது குறித்து ஆராயலாம் என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் வலி. தென்மேற்குப் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மே மாதத்துக்கான கூட்டம் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் மேற்படி வீதிகளுக்கான மூன்றாம் கட்டக் கொடுப்பனவு வழங்குவது குறித்து உறுப்பினர்கள் விரிவாக ஆராய்ந்தனர். இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டது போன்று மூன்றாம் கட்டக் கொடுப்பனவை இலகுவில் வழங்கிவிட முடியாதென்று கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், வீதிகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள், தரம் என்பன குறித்து தொழில்நுட்ப உத்தியோகத்தர், பொறியியலாளர் ஆகியோரின் அறிக்கைகள் கிடைத்த பின்னர் கொடுப்பனவு பற்றி ஆராயலாம் என்று தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை குறித்த 5 வீதிகளில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்குவது குறித்த ஏப்ரல் மாதக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது வீதிகளின் தரம் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்திருந் தனர். அதனால் இந்த நிலை குறித்து விரிவாக ஆராய்ந்த பின்பு இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்கலாம் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆயினும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு ஆட்சேபனை தெரிவித்திருந்த எதிரணி உறுப்பினர்கள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவை ஒப்பந்தக்காரருக்கு வழங்க வேண்டும் என்று வாதாடினர். அவர்களுக்குச் சாதகமாக ஆளும் கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் வாதிட்டதால் இதற்கான தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நான்கு அதிகப் படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் மே மாதக் கூட்டத்தில் மூன்றாம் கட்டக் கொடுப்பனவு வழங்குவது குறித்து ஆராயப்பட்டபோது ஏப்ரல் மாதக் கூட்டத்தில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்று வாதாடிய எதிரணி உறுப்பினர்கள் உட்பட 9 உறுப்பினர்களும் மே மாதம் நடைபெற்ற கூட்டத்தில் மூன்றாம் கட்டக் கொடுப்பனவை வழங்க வேண்டாம் என்று ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து கருத்து தெரிவித்திருந்தனர். (வ-115)

# கௌரவம் என்ற போர்வையில் காதலர்கள் வெட்டி படுகொலை

## இந்திய ஒடிசாவில் கொடூரம்

புதுடில்லி,மே 13
இந்திய ஒடிசாவில் குடும்ப கௌரவம் என்ற போர்வையில் காதலர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த 20 வயதுடைய பெண்ணுக்குத் திருமண ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிலையில் அந்தப் பெண் அதே ஊரைச் சேர்ந்த வேறு ஓர் இளைஞரைக் காதலித்து வந்தார்.


திருமணத்துக்கு முதல் நாள் வழங்கப்படும் விருந்துபசார நிகழ்வுக்கு அந்தப் பெண்ணின் காதலன் மற்றும் அவரது தாயும் வந்திருந்தனர். காதல் விவகாரம் தெரியாமல் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

விருந்துபசார நிகழ்வு முடிந்த பின்னர் அந்தப் பெண் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். ஹலாதிபதாராவில் உள்ள தன் காதலன் வீட்டில் அந்த பெண் தங்கியுள்ளார்.

இதனை அறிந்த பெண்ணின் சகோதரர்கள், குறித்த வீட்டுக்குச் சென்று அந்த இளைஞரை அச்சுறுத்தியுள்ளனர், பெண்ணைத் தங்களுடன் வீட்டுக்கு வர அழைத்துள்ளனர். பெண் மறுத்ததால், கோபமடைந்த சகோதரர்கள் இருவரையும் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலைசெய்துள்ளனர். கொலையாளிகள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ள தோடு, பெண்ணின் தந்தையிடம் இது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார். (கு)

## 3 லட்சம் கி.மீ. பயணம் செய்து பரப்புரை செய்த நரேந்திர மோடி

### 5,827 பொதுக்கூட்டங்களில் பங்கேற்றுச் சாதனை



*3 லட்சம் கிலோ மீற்றர் பயணம் செய்து, 5,827 பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுச் சாதனை படைத்துள்ளார்.*

*பாரதிய ஜனதா கட்சி குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைப் பிரதமர் வேட்பாளராகக் கடந்த ஆண்டு அறிவித்தது. இதையடுத்து, தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே அவர் நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் சூறாவளிப் பரப்புரை மேற்கொண்டார்.*

*அதாவது, ஹரியானாவின் ரெவாரியில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற முன்னாள் ராணுவ வீரர்கள் பேரணியில் தொடங்கிய இவரது பரப்புரைப் பயணம் உத்தரப் பிரதேச மாநிலம் பலியாவில் சனிக்கிழமை முடிவுக்கு வந்தது. இதுவரை 25 மாநிலங்களில் நடைபெற்ற 437 பொதுக்கூட்டங்கள், 3 டி தொழில் நுட்ப உதவியுடன் நடைபெற்ற 1,350 பேரணிகளில் மோடி பங்கேற்றுள்ளார்.*

*இதுதவிர, நாட்டின் பல்வேறு நகரங்களைச் சேர்ந்த சுமார் 4,000 (தேநீர் கடை) குழுவினருடன் வீடியோ உரையாடல் மூலம் மோடி கலந்துரையாடி உள்ளார். மேலும், தான் போட்டியிடும் வாரணாசி மற்றும் வதோதரா ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற பிரம்மாண்டமான சாலைப் பேரணிகளில் பங்கேற்றுள்ளார் மோடி. தவிர, தேர்தலுக்கு முன்பு 21 மாநிலங்களில் 38 பேரணிகளில் பங்கேற்றுள்ளார்.*

*இதன்மூலம், 5 கோடி முதல் 10 கோடி மக்களை மோடி சந்தித்துள்ளதாகவும் இந்திய தேர்தல் வரலாற்றில் அதிகப்படியான மக்களை சந்தித்த தலைவர்களில் ஒருவராக உருவெடுத்துள்ளதாகவும் பாஜக கூறியுள்ளது. அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கிய பகுதியான உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 8 பொதுக்கூட்டங்களில் மோடி உரையாற்றியுள்ளார்.*

*கர்நாடகாவில் 4, பிஹாரில் 3, தமிழகம், மகாராஷ்டிரா, அசாம், ஒடிசாவில் தலா 2 மற்ற மாநிலங்களில் தலா ஒரு பொதுக்கூட்டங்களில் மோடி பங்கேற்றுள்ளதாக பா.ஜ.க கூறியுள்ளது. (கு)*

## விழுப்புரத்தில் கைதி சாவு; 5 பொலிஸார் இடைநீக்கம்


சென்னை,மே 13
விழுப்புரத்தில் விசாரணைக் கைதி மரணம் தொடர்பாக விழுப்புரம் ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நான்கு பொலிஸார் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: விழுப்புரம் ரயில் நிலைய நடைமேடைகளில் புத்தகங்கள் மற்றும் செய்தித் தாள்களை விற்பனை செய்து வந்த கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சு.ஜெயவேலு, கடந்த 7ஆம் திகதி அசாரியா என்பவரின் பொருள்களை அபகரித்தமை தொடர்பாக பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

அப்போது அவருக்கு மயக்கம் மற்றும் நெஞ்சுவலி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் ஜெயவேலு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஜெயவேலுவின் குடும்பத்துக்கு ஐந்து லட்சம் ரூபா முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இது குறித்து குற்றவியல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்விசாரணை முடிவின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (கு)



இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலின் இறுதிக் கட்ட வாக்களிப்பு நிறைவடைந்ததை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. படையினர் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (கு)

## மேற்குவங்கத்தில் வன்முறை

புதுடில்லி,மே 13
இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதிக் கட்ட வாக்களிப்பு நேற்று நடைபெற்ற நிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

திரிணாமூல் காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையிலான இந்த மோதலில் 13 பேர் காயமடைந்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவித்தன.

வாக்குப்பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இரு தரப்பினரும் கல்வீச்சில் ஈடுபட்டதுடன் அதனையடுத்து ஏற்பட்ட மோதலின் சிலர் காய[illegible] [illegible]ந்துள்ளனர். (கு)

## மோடிக்காக வாரணாசித் தொகுதியை விட்டுக்கொடுத்ததில் வருத்தமில்லை

### முரளி மனோகர் ஜோஷி கருத்து

புதுடில்லி,மே 13
மக்களவைத் தேர்தலில் தான் போட்டியிடுவதாக இருந்த வாரணாசித் தொகுதியை பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்காக விட்டுக் கொடுத்ததில் வருத்தம் எதுவும் இல்லை என்று பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி கூறினார்.



இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி, பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக்கு நாட்டில் பெரும் அலை வீசுகிறது. வெற்றியை தாண்டிய அதிக பெரும்பான்மை கிடைக்கப்போவது உறுதியாகிவிட்டது என்றார்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க வெற்றி பெற்றால், அமைச்சரவையில் இடம் பெறுவீர்களா? என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்க ஜோஷி மறுத்துவிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், நான் போட்டியிடுவதாக இருந்த வாரணாசி தொகுதியை பா.ஜ.க பிரதமர் பதவி வேட்பாளர் நரேந்திர மோடிக்காக விட்டுக் கொடுத்துக் கான்பூரில் போட்டியிடுவதில் வருத்தம் எதுவும் இல்லை என்றார்.

முன்னதாக மக்களவைத் தேர்தலில், பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் போட்டியிடுவதாக முடிவான செய்திகளை அடுத்து, அந்த தொகுதியின் பா.ஜ.க மூத்த தலைவரான, முரளி மனோகர் ஜோஷி, அதிருப்தி தெரிவித்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. (கு)

## எனக்கும் மோடிக்கும் இடையேதான் போட்டி

### கெஜ்ரிவால் கூறுகிறார்

வாரணாசி,மே 13
வாரணாசி தொகுதியில் தனக்கும் பாஜக வேட்பாளர் நரேந்திர மோடிக்கும் இடையே நேரடிப் போட்டி நிலவுவதாக ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம், வாரணாசியில் பாஜக பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவாலும், காங்கிரஸ் சார்பில் அஜய் ராயும் போட்டியிடுகின்றனர்.

மோடிக்கும், கெஜ்ரிவாலுக்கும் இடையே கடும் போட்டி காணப்படுகிறது. இதனால், இத்தொகுதி நாடு முழுவதும் மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று வாரணாசி தொகுதிக்கு உட்பட்ட ஒரு வாக்குச் சாவடிக்கு அருகில் செய்தியாளர்களைச் சந்தித்த கெஜ்ரிவால்: தேர்தலில் மக்கள் பெருமளவில் வந்து வாக்களிக்க வேண்டும். வாரணாசி தொகுதியில் எனக்கும் மோடிக்கும் இடையேதான் நேரடி போட்டி நிலவுகிறது. காங்கிரஸ் வேட்பாளர் அஜய் ராயை ஒரு போட்டியாகவே கருதவில்லை என்றார்.

வாரணாசி போட்டியில் அஜய் ராய்க்கு பங்கு இல்லை என கெஜ்ரிவால் கூறியிருப்பது குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் வேட்பாளர் அஜய் ராய்: களத்தில் இருக்கும் வேட்பாளர்களில் நான் மட்டும் இம்மண்ணின் மைந்தன். தேர்தல் முடிவுகள் வந்த பிறகு தெரியும் மக்கள் தங்களுக்கு பணிபுரிய ஓர் உள்ளூர் வாசியையே தேர்வு செய்வார்கள் என்றார். (கு)

## சட்டையில் கட்சிச் சின்னம்: சிக்கலில் காங். வேட்பாளர்

வாரணாசியில் வாக்களிக்க சென்ற காங்கிரஸ் வேட்பாளர் அஜய் ராய் தனது சட்டையில் காங்கிரஸ் சின்னமான கை சின்னத்தை அணிந்து வந்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் அஜய்ராய் மீது வழக்குப் பதிவு செய்ய வாரணாசி தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

மக்களவைக்கான இறுதி கட்ட வாக்குப்பதிவு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், பிஹார் ஆகிய மாநிலங்களில் உள்ள 41 தொகுதிகளில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

வாரணாசி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் அஜய் ராய் வாக்களித்தார். வாக்குச்சாவடிக்குக் கட்சிச் சின்னத்தைச் சட்டையில் அணிந்து சென்றார்.

இந்நிலையில் இது குறித்து வாரணாசி தேர்தல் பார்வையாளர் பிரவீண்குமார் கூறுகையில்: இது தேர்தல் விதிமுறை மீறலாகும். இது குறித்து சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடியில் இருந்து சி.சி.ரி.வி கமரா பதிவை கோரியுள்ளோம். அது வந்தவுடன் அதை ஆராய்ந்து பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். (கு)

## லிபியாக் கடலில் படகு விபத்து குடியேற்றவாசிகள் 40 பேர் சாவு

திரிபோலி,மே 13
லிபியா கடற்பகுதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 57 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.
லிபியாவின் தலைநகர் திரிபோலியிலிருந்து 37 மைல் கிழக்கே உள்ள ரமிகால் என்ற பகுதியில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.
லிபியாவின் பாதுகாப்பற்ற கடல் எல்லைகளும், மத்தியதரைக் கடலைத் தாண்டி இத்தாலி, மால்டா போன்ற நாடுகளை எளிதில் அணுகும் வண்ணம் அமைந்துள்ள அந்நாட்டின் நிலப்பரப்பும் ஐரோப்பாவை அடைய முயற்சி செய்யும் வடக்கு ஆபிரிக்க மக்களுக்கு லிபியாவை பொது வழித்தடமாக மாற்றியுள்ளது.
இந்தப் பயணத்துக்காக அவர்கள் ஒவ்வொருவரும் தலா 1000 டொலருக்கு மேல் சட்ட விரோதக் குழுக்களிடம் பணம் செலுத்துவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள லிபியா தனது நாட்டின் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்த உலக நாடுகளின் உதவியை எதிர்நோக்கியுள்ளது.
இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சட்ட விரோத குழுக்கள் ஐரோப்பாவில் குடியேற விரும்பும் மக்களை முறையற்ற வழியில் அனுப்ப இந்தத் தடத்தைப் பயன்படுத்துகின்றன.



*தாய்லாந்துப் பிரதமருக்கு எதிரான போராட்டங்கள் உக்கிரம் அடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான அரச எதிர்ப்பாளர்கள் நேற்று பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்டு பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். (த)*


## கொங்கோ மைதானத்தில் நெரிசலால் 15 பேர் சாவு

கின்ஷாசா,மே 13
கொங்கோவில் உதைபந்தாட்ட மைதானமொன்றில் இடம்பெற்ற சன நெரிசலில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். ஆபிரிக்க நாடான கொங் கோவில் உதைபந்தாட்ட மைதானமொன்றில் திடீரென ஏற்பட்ட அதிக சன நெருக்கடி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதில் மேலும் 10 பேர் வரை காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
மைதானத்தில் இடம்பெற்ற போட்டியொன்று தொடர்பில் போட்டியாளர்களிடையே மோதல் இடம்பெற்றுள்ளது.
இதன்போது, பார்வையாளர்களிடையே குழப்ப நிலை தோன்றியதை அடுத்து பொலிஸார் கண்ணீர் புகையைப் பிரயோகித்துள்ளனர். (த)

## கொரியாக்கள் இடையே வார்த்தைப் போர் உச்சம்

சியோல்,மே 13
'வடகொரியா உண்மையில் ஒரு நாடே அல்ல, அது கூடிய விரைவில் காணாமல்போக வேண்டும்' என்று தென்கொரிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.
இரு நாடுகளுக்கும் இடையே நடந்துவரும் வார்த்தைப் போரின் தொடர்ச்சியாக இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.
வடகொரியாவில் மனித உரிமைகளோ சுதந்திரமோ இல்லை என்று கூறியுள்ள தென்கொரியப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர், கிம் ஜோங் ஊன் என்ற (வடகொரியாவின் தலைவர்) தனியொரு மனிதரின் நன்மைக்காக மட்டுமே வடகொரியா இருப்பதாகவும் கூறியுள்ளார்.
வடகொரியா அண்மையில், தென்கொரியாவின் அதிபர் பக் குன் ஹேயி ஒரு பாலியல் தொழிலாளி என்றும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஒரு கெட்ட குரங்கு என்றும் ஒப்பிட்டுக் கருத்து வெளியிட்டிருந்தது.
அவ்வப்போது முறுகல்நிலையில் இருந்துவரும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இப்போது மோசமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## அமெ. தாயின் கர்ப்பப் பையில் கை கோர்த்தவாறு குழந்தைகள்



நியூயோர்க்,மே 13
அமெரிக்காவில் தாயின் கர்ப்பப் பையில் இருந்து இரட்டைப் பிறவிகள் கைகளை கோர்த்தபடி பிறந்துள்ளனர்.
அமெரிக்காவைச் சேர்ந்த தம்பதிகள் பில் போத் (வயது-35) மற்றும் சாரா டிஸ்டில்தவெயிட் (வயது-32).
இவர்களுக்கு அன்னையர் தினத்தன்று இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன.
அதிசயம் என்னவென்றால் இரண்டு குழந்தைகளும் தங்களது கைகளைக் கோர்த்தபடி பிறந்து உள்ளன.
குழந்தைகளுக்கு ஜில்லியன் மற்றும் ஜின்னா எனப் பெயரிட்டு உள்ளனர். இது குறித்து சாரா கூறும்போது, இது அன்னையர் தினத்தில் எனக்குக் கிடைத்த நல்ல பரிசுப்பொருள். நான் இதை நம்பவில்லை.
மேலும், இது அதிசயமானது. இருவரும் கைகோர்த்தபடி பிறந்து உள்ளனர் என்றும் இருவரும் நல்ல நண்பர்களாக இருப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.
இது குறித்து மருத்துவர்கள் கூறுகையில், இதுபோல் குழந்தை பிறப்பிற்கு மோனோம்னியோடிக் (monoamniotic) என பெயர். 10 ஆயிரம் கருவுற்றலில் ஏதாவது ஒன்றில் இவ்வாறு ஏற்படலாம் என தெரிவித்துள்ளனர். (த)

# கடத்தப்பட்ட நைஜீரிய மாணவிகளை காட்டும் புதிய வீடியோ வெளியானது

அபுஜா,மே 13
நைஜீரியாவில் கடத்தப்பட்ட நூற்றுக்கும் அதிகமான பெண் பிள்ளைகளைக் காட்டும் புதிய வீடியோ ஒன்றை அந்நாட்டின் இஸ்லாமியவாத ஆயுதக் குழுவான போக்கோ ஹறாம் வெளியிட்டுள்ளது.
நான்கு வாரங்களுக்கு முன் கடத்தப்பட்டிருந்த பள்ளிக்கூட மாணவிகள் இவர்கள் என்று நம்பப்படுகிறது.
பள்ளிக்கூடத்திலிருந்து காணாமல்போன பெண் பிள்ளைகள் இவர்கள் என்றும், தடுத்து வைக்கப்பட்டுள்ள போக்கோ ஹறாம் உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டால் தான் இப்பிள்ளைகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் வெளியிடப்பட்டுள்ள வீடியோவில் போக்கோ ஹறாம் தலைவரான அபூபக்கர் ஷெகாவு நிபந்தனை விதித்துள்ளார்.
தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் இந்த மாணவிகள் இஸ்லாத்துக்கு மாறிவிட்டனர் என்று அவர் கூறினார். இந்தப் பெண்கள் தலைத் துண்டும் மேலங்கியும் அணிந்து இந்த வீடியோவில் காணப்பட்டனர்.
நாட்டின் வடகிழக்கில் சிபொக் என்ற ஊரிலுள்ள தங்கிப் படிக்கும் பள்ளி ஒன்றிலிருந்து இவர்கள் கடத்திக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.
போக்கோ ஹறாமை எதிர்ப்பதற்கான வழிகள் குறித்து ஆராய்வதற்காக, வரும் சனிக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்த பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலண்டே அழைப்பு விடுத்துள்ளார். (த)



இஸ்லாமிய முறைப்படி உடை அணிந்துள்ள கடத்தப்பட்ட மாணவியர்

# உக்ரைன் கிழக்கு வாக்கெடுப்பை நிராகரித்தார் இடைக்கால அதிபர்

கிவி,மே 13
உக்ரைனின் கிழக்கிலே சில பகுதிகளில் ரஷ்ய ஆதரவுக் குழுக்கள் நடத்தியுள்ள உத்தியோகபூர்வமற்ற கருத்து வாக்கெடுப்பைப் 'போலித்தனம்' என்று கூறி உக் ரைன் இடைக்கால அதிபர் ஒலெக்ஸாந்தர் துர்ச்சினொவ் நிராகரித்துள்ளார்.
இந்த வாக்கெடுப்பு சட்டப்படி செல்லுபடியாகாது என்று அவர் கூறினார்.
ஆனால் ரஷ்யாவோ, இந்த கருத்து வாக்கெடுப்பின் முடிவு மதிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.
ஆயுததாரிகளுக்கும், கியெவ்வில் உள்ள உக்ரைனிய அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் எனவும் ரஷ்யா மீண்டும் தெரிவித்துள்ளது.
சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக 75 சதவீதமான வாக்காளர்கள் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தி யுள்ளனர் என இந்தக் கருத்து வாக்கெடுப்பை ஏற்பாடு செய்து நடத்தியவர்கள் கூறுகின்றனர்.
குழப்பகரமானது, முறைகேடாக நடத்தப்பட்டது என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றது.
இந்தக் கருத்து வாக்கெடுப்பில் பெரும்பான்மையான வாக்காளர்கள் பங்கேற்றார்கள் என்பதற்கு வாய்ப்பு இல்லை என்று பிபிசி செய்தியாளர் ஒருவர் கூறுகிறார். (த)



# வளங்கள் சுரண்டப்படுவதால் பாதிக்கப்படுகிறது சூழல் சமநிலை

## தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 13

பகற்கொள்ளை போல் முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு சூழல் சமநிலை பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்ற போதும், அதனை தடுப்பதற்கு எந்தவொரு நடவடிக்கைகளையும் அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் இயற்கை வளமான தட்டயமலை இருந்த தடயமே இல்லாமல் அழிக்கப்பட்டு வருகிறது.

கருங்கல் அகழ்வு நடைபெறும் பகுதிகளில் அந்தப் பிரதேசத்துக்கு ஏற்றால் போல், குறிப்பிட்ட ஆழம் வரை மட்டுமே அகழ்வு செய்ய முடியும். ஆனாலும் அவற்றைக் கணக்கிலெடுக்காது அதிக ஆழம் வரை கருங்கல் அகழப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

முல்லைத்தீவில், குறிப்பாக ஒட்டுசுட்டான் பகுதியின் இயற்கை ஒழுங்கமைப்பில் கருங்கல் பாறைகளும் மலைகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறான இயற்கை ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வகையில் அங்குள்ள கருங்கற் பாறைகள் அகழப்பட்டு வருகின்றன.

> தட்டயமலைப்பகுதியின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் அதற்கு கீழ் அகழக் கூடாது என்ற அடையாளமும் காணப்படுகின்றது.

எமது பகுதி குறித்த அக்கறையே இல்லாத அரசியல்வாதிகளின் பின்னணி கொண்ட நிறுவனங்களுக்கு இவற்றை அகழ்வதற்கான அனுமதி கொடுக்கப்படுகின்றது. அனுமதி கொடுக்கப்பட்ட பின்னர் அவற்றை உரிய அதிகாரிகள் கண்காணிப்பதில்லை. இதனாலேயே மோசமான வகையில் பாறைகள் அகழப்பட்டு இயற்கைச் சமநிலை சீர்குலைக்கப்படுகின்றது.

குறிப்பாக, தட்டயமலைப்பகுதியின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் அதற்கு கீழ் அகழக்கூடாது என்ற அடையாளமும் காணப்படுகின்றது. எனினும் அந்த இடத்துக்கு எதிர்ப்புறத்தில் அதனை விட கூடுதல் ஆழத்துக்கு ஆழப்படுத்தப்பட்டு கற்கள் எடுக்கப்பட்டுள்ளன.

எமது மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல மலைகள் இவ்வாறு உடைக்கப்பட்டு வளங்களை சூறையாடி இயற்கை சமநிலையை கேள்விக்குறியாக்கி நாசகார செயல்களை அத்துமீறி செய்பவர்களும் இதற்கு துணை போகின்றவர்களும் மன்னிக்கப்பட முடியாதவர்கள்.

மக்கள் அன்றாட வாழ்வுக்கு அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பட்டப்பகல் கொள்ளை போல இந்தச் சுரண்டல் நடைபெறுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியவர்கள் மனச்சாட்சியுடன் நடந்து அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வேண்டும் - என்றார். (ச-5-402)

## குருஜி ரவிசங்கரின் பிறந்த தினம்

வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் பூஜ்ய ஸ்ரீ.ஸ்ரீ.ரவிசங்கர் அவர்களின் ஜனனதினம் இன்றாகும். பூஜ்ய ஸ்ரீ.ஸ்ரீ.ரவிசங்கர் குருஜி கும்பகோண மாவட்டத்தில் பாவநாசம் என்ற ஊரிலே அவதரித்தார்.

வன்முறையற்ற, மன அழுத்தமற்ற அமைதியான உலகத்தை உருவாக்குவோம் என்ற தொனிப் பொருளிலேயே குருஜியின் சகல செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் வாழும் கலை அமைப்பு பிறவுண் வீதியில் (கலட்டிச்சந்திக்கு அருகாமையில்) நிலையம் ஒன்றை அமைத்துள்ளது.

இன்றைய தினம் வாழும் கலை அமைப்பின் யாழ்ப்பாண நிலையத்தில் மாலை 5 மணிக்கு குருஜியின் பிறந்த தின நிகழ்வு ஆன்மிக எழுச்சி விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது. ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு வாழும் கலை அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (ஒ)

## பாடத் தெரிவு தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 13

க.பொ.த. (2016 பிரிவு) உயர்தரத்துக்கு தெரிவான மாணவர்களுக்கான பாடத்தெரிவு தொடர் பான செயலமர்வு யாழ். கல்வி வலயத்தால் வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. இந்தச் செய லமர் வுக்கு சகல மாணவிகளையும் பெற்றோர்களுடன் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## செயலமர்வு

தென்மராட்சி, மே 13

மீசாலை உயர் கலைக் கல்லூரி நடத்தும் பௌர்ணமி தினக் கருத்தரங்கில் நாளை புதன்கிழமை க.பொ.த.உயர் கலைப் பிரிவில் அரசியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வு இடம்பெறவுள்ளது.

கலைக் கல்லூரியில் மாதாந்தம் ஜி.சீ.ஈ. உயர்தர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பௌர்ணமி தினத்தன்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் பிரகாரம் ஒன்பதாவது கருத்தரங்கு நாளை நடத்தப்படவுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த கருத்தரங்கில் இலவசமாகப் பங்குபற்றலாமென கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-9)


# மணிவிழா நாயகனைப் பாராட்டுகின்றோம்




உயர்திரு.
**அழகரத்தினம் பத்மநாதன்** (SLTS-I)
(பிரதி அதிபர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

| சேவை விவரம் | தொடக்கம் வரை |
| --- | --- |
| 01.யா/வரணி ம.வி.வரணி | 04.12.1972- 07.01.1975 |
| 02.யா/பலாலி ஆசிரிய கலாசாலை | 08.01.1975-31.12.1976 |
| 03.குளி/மதீனா ம.வி பஹமுனே | 01.01.1977-28.02.1977 |
| 04.குளி/கெக்குண கொல்ல முஸ்லிம் ம.வி கட்டுபொத்த | 01.03.1977-31.12.1981 |
| 05.யா/வரணி ம.வி வரணி | 01.01.1982-14.05.1989 |
| 06.யா/மட்டுவில் கமலாசனி வித். சாவகச்சேரி | 15.05.1989-10.05.1992 |
| 07.யா/அச்செழு வைசப்பிரகாச வித். நீர்வேலி | 11.05.1992-12.05.2014 |

சேவைக்காலம் 41 வருடங்கள் 5 மாதம் 9 நாள் ஓய்வு பெறுகின்ற பிரதி அதிபர் அவர்கள் நீண்ட ஆயுளும் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம், (48005)(3.64)
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.


## வானொலி, தொலைக்காட்சி பழுதுபார்த்தல் கற்கைநெறி

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி, அவை சார்ந்த சாதனங்களைப் பழுது பார்த்தல் தொடர்பான கற்கை நெறியொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்களுக்கான நேர் முகத்தேர்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் கல்வித் தகைமை சான்றிதழ்களுடன் இல.12, கே.கே.எஸ் வீதியிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தின் முதலாம் மாடியில் இயங்கும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு இன்று சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

## வெசாக் தினங்களில் மதுபானம், இறைச்சி விற்பனைக்குத் தடை

வெசாக் தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் அனைத்து மதுபானக் கடைகளை மூடுவதற்கும், சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும், இறைச்சி வெட்டும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்டக்கூடங்கள், இறைச்சிக்கடைகள் மற்றும் கழகங்கள் அனைத்தையும் மூடுவதற்கும் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ)

## ஒன்றுகூடலும் கலந்துரையாடலும்

மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலக்கியப் படைப்பாளிகள் மற்றும் கலைஞர்கள் இடையேயான ஒன்றுகூடலும், கலந்துரையாடலும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இதில் மன்னார் தமிழ் இலக்கியம் பற்றி தமிழ் நேசன் அடிகளாரும், மன்னார் நாட்டுக் கூத்துக்கள் பற்றி எஸ்.ஏ.உதயனும், யாழ்ப்பாண இலக்கியம் பற்றி சி.ரமேஷும், அண்மைக்கால யாழ்ப்பாண இலக்கியச் செயற்பாடுகள் பற்றி வேலணையூர் தாசும் உரை நிகழ்த்தவுள்ளனர். (க)


# சேவைநலன் பாராட்டு




**சிற்றம்பலம் தவராசா**
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்- கிளிநொச்சி)

சேவை விவரம்
16.05.1977- கூட்டுறவு பரிசோதகர்
10.02.2003- மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்
12.02.2007- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி)

கூட்டுறவுத்துறைக்கு 37 வருடங்கள் சேவையாற்றி எதிர்வரும் 15.05.2014 சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்கள் நீண்ட ஆயுளும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், கிளிநொச்சி.
(46538)(3.64)

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, புலோலி மேற்கு, தம்பசிட்டியில் வீட்டுடன் 4.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
மேலதிக விபரங்களுக்கு: (48013) (7.6.3)
077 773 9261, 077 362 0979

## காணி விற்பனைக்கு

துணுக்காய் கரைச்சிப் பகுதி குஞ்சுப் பரந்தன் (9ஆம் வாய்க்கால்) பகுதியில் 137 பரப்பு தண்ணீர்ப் பங்குள்ள உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 349 1812,
077 662 1824, 077 923 7797 (48017) (7.6.3)

## பெயர் மாற்றம்

கல்விளான் துணுக்காயைச் சேர்ந்த செல்லத்துரை அன்னலட்சுமி ஆகிய நான் 13.05.2014 இன்றிலிருந்து செல்லத்துரை இராசலட்சுமி எனப் பெயர் மாற்றம் செய்கிறேன் என அறியத் தருகின்றேன்.
செ. இராசலட்சுமி (43646) (7.6.3)

## காணி விற்பனைக்கு

கம்பர்மலை நெற்கொழு வைரவர் கோயிலுக்கு அண்மையில் வீதியை முகப்பாகக் கொண்ட 11½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(கட்டி அப்பா காணிக்கு பக்கத்தில்)
தொ.பே. 077 925 1048 (48008) (7.6.3)


## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்
## பகிரங்க அறிவித்தல்

**வழக்கு இல: காசு - 42**

மேற்படி வழக்குத் தொடர்பான நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் இரு கடைகளுடன் கூடிய (தற்போது வெற்றுக் காணியாக உள்ள) அப்பாவத்தை வளவு யாழ்ப்பாண காணிப் பதிவகத்தின் காணிப் பதிவு இலக்கம் B 05/24 என்ற ஆதனமானது நீதிமன் றத்தினால் கைப்பற்றப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது என்பது இத்தால் சகலருக்கும் அறியத் தரப்படுகின்றது.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், நல்லூர் கோயிற்பற்று, திருநெல்வேலி இறை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, கிராம சேவகர் ஜே/114, அப்பாவத்தை வளவு நில.பர.01 குழி 08.75, எல்லை கிழக்கு துண்டு 2உம், பாதையும், வடக்கு சண்முகத்துக்கும் பெண் நவநீதபுஸ்பத்திற்குமுரிய ஆதனம், மேற்கு பலாலி வீதி,தெற்கு துண்டு 2உம், துண்டு 3உம் இதடங்கலும் (யாழ் காணிப் பதிவு B 05/24)

காணியின் அமைவிடம்

பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதி, இராமநாதன் வீதி சந்தியின் கிழக்கு பக்கமாக முன்னர் இரு கடைகள் அமைந்திருந்து தற்போது வெற்றுக்காணியாக உள்ள ஆதனம்.

நீதிமன்றின் கட்டளைப்படி

திருமதி மீரா வடிவேற்கரசன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 3671
(48016)(7.6.3)

# இடரிலிருந்து பாதுகாப்பு பெற மாணவர்களுக்கு விளக்கம்


மன்னார், மே 13
மன்னார் நகரத்தை திடீர் இடர்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இடர் அபாய குறைப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கு மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண ஆங்கில உதவி மையத்தில் இடம் பெற்றது.
மன்னார் வலயக் கல்வி அலுவலகம், இடர் முகாமைத்துவ நிலையம் ஆகியவை இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தியுள்ளன.


கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள்.

இந்தக் கருத்தரங்கில் இயற்கை இடர்களின்போது தயார் படுத்துதல் குறித்து தெளிவு படுத்தப்பட்டது.
இந்தக் கருத்தரங்கில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ், மன்னார் வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டயஸ், வட மாகாண ஆங்கில பயிற்சி மையத்தின் நிலைய முகாமையாளர் எஸ்.ஏ.ராஜா உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-56)

# வவுனியா நகரில் 'ஓட' மறுக்கும் மணிக்கூடு

*வவுனியா, மே 13*
*வவுனியா நகரில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள மணிக்கூடு இயங்காததால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.*
*வவுனியா பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பயணிகள், வர்த்தகர்கள் உட்பட பலருக்கு நேரத்தைத் தெரிந்து கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பெருமளவில் உதவியாக அமைந்திருந்தது.*
*கடந்த இரண்டு வாரங்களாக மணிக்கூடு இயங்காததால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.*
*இதேவேளை ஏற்கெனவே மூன்று தடவைகள் இந்த மணிக்கூடு இயங்காதிருந்து பின்னர் சீர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*
*எனவே இந்த மணிக்கூடு சீராக இயங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-402)*




## குளவிக் கூடு அழிப்பு

வவுனியா, மே 13
வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் மாணவ மாணவியருக்கும், ஏனையோருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருந்த குளவிக் கூடு அழிக்கப்பட்டுள்ளது.
பாடசாலை வளாக கட்டடத்தில் இருந்த குளவிக் கூட்டை கண்ட பாடசாலை நிர்வாகம் வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு இந்த விடயத்தை எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளது. அதனையடுத்து வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரா குளவிக் கூட்டை அழிக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.
சுகாதாரப் பிரிவினரின் உதவியுடன் குளவிக் கூடு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-421)

# நிரந்தர நியமனம் இதுவரை இல்லை

## புறக்கணிக்கப்படும் வன்னிப் பகுதி தொண்டர் ஆசிரியர்கள்

முல்லைத்தீவு, மே 13
வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றி வரும் ஆசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.
இவ்வாறு வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.
இது குறித்து ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தொடர்ச்சியாக நிரந்தர நியமனம் குறித்து கூறப்பட்டு வந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
வடமாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட அதேவேளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார் - மடு, வடமராட்சி கிழக்கு ஆகிய ஆறு கல்வி வலயங்களையும் சேர்ந்த வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.
கடந்த 2009 ஆம் ஆண்டு வடமாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனத்தில் கூட வன்னிப் பகுதி தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.
வன்னிப் பகுதி தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடமாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக பல தடவைகள் கவன வீர்ப்பு, உணவுதவிர்ப்பு போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். அதனையடுத்து கடந்த 2013.07.01 முதல் கடமையேற்கும் படியாக ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டு மாதாந்தச் சம்பளமாக பத்தாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.
ஏனைய ஆசிரியர்களைப் போல முழுநேரம் பணியாற்றுகின்ற அவர்களுக்கு பத்தாயிரம் ரூபா மட்டுமே மாதாந்தச்சம்பளம் வழங்கப்படுகிறது.
வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இக்கால கட்டத்தில் பத்தாயிரம் ரூபாவை மட்டும் மாத வருமானமாக அவர்கள் பெற்றுக் கொள்வதால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
எனவே, கல்வித் தகைமைகளையும், சேவைக் காலத்தையும் கணக்கில் கொண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, மே 13
வவுனியா வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை வவுனியா, மன்னார் வீதியில் இருந்து வவுனியா வைத்தியசாலை வீதிப் பக்கமாக ஓட்டோவொன்று திரும்ப முற்பட்டபோது, அதே வீதியால் வந்த வாகனத்துடன் மோதுண்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்தவர் காயமடைந்துள்ளார்.
இந்த விபத்தில் வவுனியா செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வைரவ நாதன் திலீபன் (வயது-34) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றார். (ச-421)

## ரூ.8 மில்லியன் செலவில் ஆய்வு கூடம் அமைப்பு

### வவுனியா பொது வைத்தியசாலையில்

வவுனியா, மே 13
வவுனியா பொது வைத்தியசாலையில் 8 மில்லியன் ரூபா செலவில் ஆய்வு கூட கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது என்று வைத்தியசாலை அத்தியட்சகர் கே.அகிலேந்திரன் தெரிவித்தார்.
இந்தக் கட்டடம் அடுத்த மாதமளவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார். வவுனியா பொது வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளிகள் தாங்கள் செல்ல வேண்டிய பகுதிக்கு இலகுவாகச் செல்வதற்கு வழிகாட்டல் பலகைகள் நட்டு வைக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு வழிகாட்டல் பலகைகள் நட்டு வைப்பதால் வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளிகள் சிரமமின்றி உரிய இடத்தில் தமது தேவைகளை நிறைவேற்ற வாய்ப்புக் கிட்டுகிறது.
இதுவரை காலமும் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாததால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்துள்ளது- என்றார். (ச-421)


உலக செஞ்சிலுவைச் சங்க தின நிகழ்வு ஒட்டுசுட்டான், கருவேலன்கண்டல் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றது. (ச)

## பஸ் சேவை சீரில்லை

வவுனியா, கிடாச்சூரி பகுதிக்கான பஸ் சேவை சீரில்லாததால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
வவுனியா நகரில் இருந்து 14 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிடாச்சூரி பகுதியில் உள்ள ஈஸ்வரபுரம், மறவன்குளம், தரணிக்குளம் ஆகிய கிராமங்களில் சுமார் 1000 வரையான மக்கள் வசித்து வருகின்றனர்.
இந்தப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் பஸ் சேவை சீரில்லாததால் குறித்த நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
எனவே ஒழுங்கான பஸ் சேவையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-402)

## பழுதடைந்த மீன்கள் சந்தையில் விற்பனை

### கிளிநொச்சி மக்கள் விசனம்


கிளிநொச்சி, மே 13
கிளிநொச்சி சந்தையில் ஐஸ் இடப்பட்டு மூன்று நாள்கள் வரை வைத்திருக்கப்பட்ட மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.
இந்த விடயம் குறித்து சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

**" நீண்ட நாள்களுக்கு ஐஸ் இட்டுப் பதப்படுத்தும் மீன்கள் பழுதடைவதால் பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.**

இவ்வாறு நீண்ட நாள்களுக்கு ஐஸ் இட்டுப் பதப்படுத்தும் மீன்கள் பழுதடைவதால் பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது என்றும் மக்கள் தெரிவித்தனர்.
எனவே, இந்த விடயத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

# நீதிமன்றில் அரசதரப்பு முன்வைத்த தீர்வால் சம்பூர் மக்களுக்குச் சந்தேகம், ஏமாற்றம்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கவலை



குமாரசாமி நாகேஸ்வரன்

திருகோணமலை,மே 13

எட்டு வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் சம்பூர் மக்கள் சார்பாக உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் சம்பூர் மக்களது காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் அல்லது அதற்கான நட்டஈடு வழங்கப்படவுள்ளது என்று அரச தரப்பு சட்டத்தரணிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதி மன்றத்தில் சம்பூர் மக்களுக்கான தீர்வாக அரச தரப்பில் இத் தகைய யோசனை முன்வைக்கப்பட்டமை சம்பூர் மக்கள் மத்தியில் தமது மீள் குடியேற்றம், இயல்புவாழ்வுமற்றும் எதிர்காலம் தொடர்பான அச்சத்தையும் சந்தேகத்தையும் அதிகரித்துள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாற்றிடத் தெரிவு என்பது கடந்த ஆறுவருடங்களுக்கு முன்னரே அரசால் முன்வைக்கப்பட்டு இதுவரை மக்களால் நிராகரிக்கப்பட்டு வருகின்ற விடயமாகும்.

நட்டஈடு வழங்க விண்ணப்பிக்க முடியும் என்று அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை சம்பூர் மக்கள் எவரும் அதற்காக விண்ணப்பிக்கவில்லை.

இன்றைய சூழலில் அவசரகாலச் சட்ட விதிகள் நீக்கப்பட்ட பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்கள் சட்ட ரீதியாகச் செயலிழந்து விட்ட நிலையிலும் கூட, பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலேயே சம்பூர் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பேணப்பட்டு வருகிறது. அந்தப் பகுதிக்குள் அமைந்த கூனித்தீவு, நவரட்ணபுரம், சூடைக்குடா ஆகிய கிராமங்கள் மீள் குடியேற்றத்துக்கு உட்படுத்தப்பட்டும் உள்ளன.

உயர் பாதுகாப்பு வலயமென முன்னர் அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் அனல்மின் நிலையத்துக்கும், மின்சார சபைக்குமென 540ஏக்கர் நிலமும், முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கென 818 ஏக்கர் நிலமுமாக மொத்தமாக 1,358 ஏக்கர் நிலமும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் கிராமத்தின் 231 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் முற்றாக கடற்படையினரின் பயன்பாட்டிலேயே உள்ளது.

எஞ்சிய மேட்டு நிலங்களும், வயல் நிலங்களும் இதுவரை மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் வேறுதேவைகளுக்காகப் கையகப்படுத்தப்படவுமில்லை.

இந்த நிலையில் மாற்றிடம் அல்லது நட்டஈடு என்ற அடிப்படையில் அரச தரப்பால் முன்வைக்கப்படும் கருத்து பல்வேறு குழப்பங்களையும் சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

நட்ட ஈட்டைப் பெற்றுக்கொண்டால் தமது காணிகளில் தமக்குள்ள உரிமை அற்றுப் போய்விடும். சொந்த மண்ணில் குடியேறு வதற்கான கோரிக்கை வலுவற்றதாகி அதற்காக போராடும் தார்மீக உரிமையும் கை நழுவி விடும் என்று சம்பூர் மக்கள் நம்புகின்றனர்.

சம்பூர் மக்களை அவர்களது சொந்த மண்ணில் வாழும் அடிப்படை உரிமையை மறுத்து அவர்களை அகதி முகாம்களில் தங்க வைத்து வேடிக்கை பார்க்கும் அரசு, எந்தவித நியாயமும் அற்ற முறையில் அவர்களது சொந்த நிலத்தைச் சுவீகரித்துள்ளது. அதற் கான மாற்றுத் தீர்வைக் கூட மனிதாபிமானத்துடன் நியாயபூர்வமானதாக முன்வைக்காமல் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் முன்வைத்திருப்பதை சம்பூர் மக்கள் உணர்ந்துள்ளனர்.

சம்பூர் மக்களின் எதிர்காலம் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# காணாமற் போனவர்கள் குறித்து காத்தான்குடியில் விசாரணை

## ஜூன் மாதம் ஆரம்பம்

கொழும்பு,மே 13

காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு கிழக்கு மாகாணத்தில் விசாரணைகளை நடத்தி வருகின்றது. அதன் ஒரு கட்டமாக எதிர்வரும்ஜூன்மாதம்6ஆம்,7ஆம், 8 ஆம் திகதிகளில் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளன.

விசாரணைகள் இடம்பெறும் குறிப்பிட்ட நாள்களில் புதிதாக முறைப்பாடு செய்ய முடியும். ஏற்கெனவேசெய்யப்பட்டமுறைப்பாடுகள் தொடர்பில் சாட்சியங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பில் இதுவரை 200 வரையிலான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 13ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
04 . 04 . 1970



ஆண்டவன் திருவடியில்
13 . 05 . 2001

அமரர் சுப்பிரமணியம் சதீஸ்குமார்

திதி: சஷ்டி



ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும், ஓயுமோ உம் நினைவு - எம்
ஊனோடும், உணர்வோடும் ஒன்றாய் கலந்த எம் சதீஸ்குமாரே!
மென்மையான உன் சிரிப்பும், அர்த்தமான உன்பேச்சும்
எம் கண்கள் முன்னால் என்றும் நிழலாடுகின்றதே!
நீ விரைவில் எம்முன் வருவாய் எனக் காத்திருந்தோம்
எம் கனவை கானல் நீராக்கி விட்டாயே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும், எங்கள் உள்ளக் கமலத்தில்
என்றும் கலங்கரை விளக்கமாய் ஒளிவீசிக் கொண்டிருப்பாய்.
உன் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வங்களை வேண்டுகின்றோம்.

உன் அப்பா: சுப்பிரமணியம் அம்மா: சித்திரா
தங்கைமார்: த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா (சுவிஸ்)
சு. சதீஸ்குமாரி
தம்பி: சு.சதீஸ்வரன் (லண்டன்)
அத்தான்மார்: ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன் (சுவிஸ்)
த.சுகுணன்
மருமக்கள்: த.சபிதா, த.சதீஸ்குமார்,அக்சரா,
அச்சரன், சு.சாஜித்தியா, ஈ.அம்பிறித்தா, த.சாகித்தியன்
மைத்துனி: ச.யாழினி (கண்... பல்கலைக்கழக விரிவுரையாளர்)
பேறாமக்கள்: அ...வா, ஆதிறா

(45534)(7.6.3)

# முறையற்ற விதத்தில் அதிபர் நியமனங்கள்

மட்டக்களப்பு,மே 13

கிழக்கு மாகாணத்தில் முறையற்ற விதத்தில் அதிபர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மாகாணத்தில் அதிபர் நியமனங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் உரிய கல்வித் தரத்தைக் கொண்டுள்ளவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இவ்வாறான முறையற்ற நியமனங்களால் அதிபர் பதவி வகிக்கத் தகுதியுள்ள பலர் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

**கிழக்கு மாகாணத்தில் அதிபர் நியமனங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் உரிய கல்வி தரத்தைக் கொண்டுள்ளவர்கள் புறக்கணிக்கப் படுகின்றனர்.**

எனவே பக்கச்சார்பற்ற விதத்தில் அதிபர் நியமனங்கள் வ... கப்பட வேண்டும்என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வேலைத் திட்டம் குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு,மே 13

மட்டக்களப்பு மாவட்டச் செயலக வளாகம் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டைப் பிரதேசத்தைத் தேசிய மரபுரிமை கலாசார நிலையமாக மாற்றும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராயும் கூட்டம் மாவட்ட அரசஅதிபரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில்அமெரிக்க நிதியுதவித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும்இந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டனஎன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார். (ச)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
19 - 07 - 1947



மறைவு
13 - 04 - 2014

கடந்த 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி கனகாம்பிகை தியாகராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.05.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ம...றவுச செய்திகேட்டு துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

குடும்பத்தினர்.

# பால் மாவின் விலையை உடன் குறையுங்கள்

## விமல் வீரவன்ச வேண்டுகோள்

கொழும்பு,மே 13

பால் மா விலையைக் குறைக்க வேண்டும் என்று வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக சந்தையில் பால் மா விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த விலை வீழ்ச்சியின் பயன்களை நுகர்வோர் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



விமல் வீரவன்ச

கடந்த ஆறாம் திகதி ஒரு தொன் பால் மாவின் விலை 5200 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. தற்போது ஒரு தொன் பால்மாவின் விலை 3873 அமெரிக்க டொலர்களாகும்.

உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டபோது விலையை உயர்த்தியதைப் போன்றே தற்போது விலை குறைந்துள்ள நிலையில் அதன் பலாபலனை நுகர்வோர் அனுபவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உலக சந்தையில் பால் மா விலை உயர்வடைந்துள்ளதாக தவறான தகவல் தெரிவித்து அரசின் அனுமதியுடன் ஒரு கிலோ பால் மாவின் விலை 152 ரூபாவால் உயர்த்தப்பட்டது - என்றார். (ச)

## எதிர்கால செயற்பாடு குறித்து 23 இல் கலந்துரையாடல்

### தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானம்

கொழும்பு,மே 13

தேர்தல்கள் திணைக்களத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து தேர்தல்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் மாவட்டப் பிரதி தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர் வரும் 23ஆம் திகதி இடம்பெற வுள்ளது. இதேவேளை எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் இடம் பெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தல் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது. (ச)



மஹிந்த தேசப்பிரிய

## மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

சட்டவிரோதமான முறையில் மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் அம்பலாந்தொட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குட்டிகல, பதலங்கல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ச)

## பொலிஸ்காரர் கொலைச் சம்பவ சந்தேகநபரின் மாதிரி உருவப்படம் மக்கள் பார்வைக்கு வெளியீடு

### தகவல் தருவோருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம்

கொழும்பு,மே 13

இரு பொலிஸாரைக் கடத்திச் சென்று அவர்களில் ஒருவரைக் கொலை செய்த குழுவைச் சேர்ந்தவர்களில் ஒருவர் எனச் சந்தேகப்படுபவரின் மாதிரிப் படத்தை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ளனர்.

குருநாகலில் இடம்பெற்ற இரண்டு பொலிஸார் கடத்திச் செல்லப்பட்டு அவர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குறிப்பிட்ட வாகனத்தில் முகத்தை மறைக்காது பயணித்த சந்தேகநபரொருவரின் மாதிரி உருவப்படத்தையே பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர் ஏற்கெனவே வெவல்தெனியவில் இடம்பெற்ற ஆயுதக் கொள்ளையில் ஈடுபட்டவர் என்றும் தெரியவந்துள்ளது.

கடந்த 5 ஆம் திகதி வீதிப் போக்கு வரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்தப்பட்டனர்.

அவர்களுள் சம்பத் என்பவர் படகமுவ காட்டுக்குள் வைத்து அவர்களைக் கடத்திச் சென்ற ஆயுததாரிகளினால் சுட்டுகொல்லப்பட்டார். மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் விஜேயசூரிய அவர்களிடமிருந்து தப்பியோடி உயிர்பிழைத்தமை குறிப் பிடத்தக்கது.

குறிப்பிட்ட சந்தேகநபரைக் கைது செய்ய பொது மக்கள் உதவ வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோகண அறிவித்திருக்கிறார்.

சந்தேக நபரைக் கைது செய்ய உதவுவோருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் தெரிவித்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்ட தினத்தன்று. சம்பவம் நடைபெறுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் ஒரு தம்பதியர் உணவகம் ஒன்றுக்குச் சென்றிருந்தனர். அங்கு உணவருந்திய பின்னர் தமது வாகனத்தில் ஏறியபோது கணவருடன் முரண்பட்டுக் கொண்டார் மனைவி. அதை அடுத்து வாகனத்திலிருந்து இறங்கி குறிப்பிட்ட இந்த இரு பொலிஸார் நின்றிருந்த இடத்துக்கு வந்து. தனது கணவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். பின்னர் சமாதானமாகி அவர்கள் (தம்பதியர்) வாகனத்தில் ஏறிச் சென்றனர். அவ்வேளை சந்தேக நபர்களின் வாகமெனச் சந்தேகிக்கப்படும் வாகனம் பாதை ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்ததை அந்தத் தம்பதியர் கண்டதாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது (ஞ - ச)

## மனித உரிமைகளை மீறுகிறது அரசு

### முன்னணி சோச லிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,மே 13

அரசு மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டு வருகிறது என்று முன்னணி சோச லிசக் கட்சி குற்றஞ் சுமத்தியுள்ளது.

வடக்கில் போரால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதியளிக்காது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மூடியமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று முன்னணி சோச லிசக் கட்சி தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இடம் பெற்ற போர் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த சிங்கள, தமிழ் முஸ்லிம்களுக்கு உரிமை இருக்கிறது என்று அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

அஞ்சலி செலுத்த அனுமதியளித்தால் விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடும் என்ற அரசின் நிலைப்பாடு தவறானது என்று அந்தக் கட்சி கூறியுள்ளது.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே அரசு முயற்சிக்க வேண்டுமே தவிர, முரண்பாடுகளை வளர்க்கும் வகையிலான கொள்கைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (ச)

5ஆம் ஆண்டு நினைவு நாளினிலே.....

தாய் மடியில் 06.07.1980

மண் மடியில் 13.05.2009



அமரர்

செல்வச்சந்திரன் சசிகுமாரி (கானப்பிரியா)

ஐந்தாண்டுகள் உருண்டோடி விட்டன
அன்புச் செல்வமே! நீ எங்கு சென்றாய்?
பஞ்சவர்ணக் கிளி போல் -நீ
பாரினில் பண்போடு பழகிய
பசுமையான நாள்கள் எத்தனை?
அத்தனையும் போது மென்று
கானக்குயிலாக மாறிக்
காவியம் படைத்தாயோ?
பிரியா என்ற சொல்லுக்கு
பிரிவென்று பொருள் தந்தாயோ?
அவை தனிலே உன் அடுக்குமொழி கண்டு
கடுகாய்ப் போனவர்கள் எத்தனை பேர்
மிடுக்கான தோற்றத்தோடு நீ
மீண்டும் எம் மடி மீது
புலரும் புதுப் பொழுதினில்
புதுமணம் பரப்பிட நீ வருவாயென
ஏக்கத்துடன் தவிக்கும் உன் உறவுகள்.

42, நமணங்குளம்,
புகழேந்தி நகர், மல்லாவி.

குடும்பத்தினர்.

(41262)(5.6.3.)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 31.03.1991



விண்ணில் 31.03.2014

அமரர்

நவரத்தினம் நிருபன்

ஊட்டி வளர்த்து உயர்வுநிலை காணமுன்பு
ஊர்தி வந்துன்னை அழைத்துச் சென்றதுவோ
காய்த்துக் குலுங்கி கலகலக்கும் வேளையில்
காலனவன் உன்னை கவர்ந்து சென்றானோ
கற்றுத் தேறி பட்டங்கள் பெறமுன்பு
கடுகதி விமானம் வந்து கடிதென பறந்தாயோ
நாற்பத்தைந்து நாளானாலும் உந்தன்
கனி பார்வை பேச்சு மறக்க முடியவில்லையே

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (14.05.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்வுகளில் பங்குகொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(47980)(5.6.3.) (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொது வேட்பாளரின் பொதுக் கொள்கை என்ன?

வரப்போகும்- எப்போது வரப்போகிறது என்பது தெரியாது போனாலும், நாட்டின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக எதிர்க்கட்சிகள் பலவும் தங்கள் மண்டைகளைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கின்றன. தமிழர் ஒருவரை, அதுவும் வடக்கு மாகாண முதல் அமைச்சராக இருக்கும் க.வி.விக்னேஸ்வரனை நிறுத்தலாம் என்று சிலர் யோசனை கூறியிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறான யோசனை எதுவும் தமக்கு கிடையாது என்று அவர் அறிவித்ததன் பின்னரும் அவரைப் பற்றி சிந்திப்பதில் பயனில்லை. அதுவுமின்றி, தென்னிலங்கையில் சிங்கள பொதுமக்கள் மத்தியில் தமிழர் தொடர்பாக விதைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டு விட்ட இனரீதியிலான வெறுப்புணர்வுகளின் மத்தியில் தமிழர் ஒருவர் போட்டிக்கு நின்று வெற்றி பெறுவது துர்லபம். அவ்வாறு நிறுத்தப்பட்டு அபரிமிதமான தமிழ் மக்களின் ஆதரவு கிடைத்தாலும், சிங்கள மக்கள் ஆதரவு கிடைக்காமல் வெற்றியைப் பற்றி யோசிக்க முடியாது. பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றி எதிர்க்கட்சிகள் சிந்திக்க தலைப்பட்டதிலிருந்தே அவர்களுக்கு மத்தியிலேயே அதற்குத் தகுதியான ஒருவரைக் கண்டு பிடிப்பது குதிரைக்கொம்பாக இருப்பது தெரிகின்றது. இந்தியாவைப் போன்று தேசியக் கட்சிகள் என்று கூறிக் கொள்ளும் அளவுக்கு இங்கு எந்தக் கட்சியும் இல்லை. பெரிய கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானால் என்ன ஐக்கிய தேசியக் கட்சியானால் என்ன, ஏன் ஜனதா விமுக்தி பெரமுனவும் கூட தமிழ் மக்களை அரவணைத்துக் கொண்டு செல்லும் போக்கினை கடந்த காலத்தில் துல்லியமாக வெளிப்படுத்தவில்லை.

இந்த நாட்டின் அரசமைப்புகளை உருவாக்கியவர்கள் நாட்டிலுள்ள இனப்பிரச்சினையைப் பெரிதாகக் கருதியதாகத் தெரியவில்லை. அதனால் எதிர்காலத்தில் எழக்கூடிய சிக்கல்களை இராணுவத்தைக் கொண்டும் இதர படையணிகளைக் கொண்டும் சமாளித்து விடலாம் என்று நினைத்திருக்கிறார்கள். அந்த நினைப்பில் இப்போதும் கூட சிலபல காரியங்கள் இடம்பெறுவதைக் காண்கின்றோம். அதனால் சர்வதேசத்தின் கண் காணிப்புக்கு மட்டுமல்ல விசாரணைக்கும்கூட இந்த நாட்டு ஆட்சியாளர்கள் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுவேட்பாளர் ஒருவரைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் அப்படியான வேட்பாளர் முன்வைக்கக் கூடிய கொள்கைகளையும் இப்போதே வெளியிடுவது நன்றாக இருக்கும். அந்தக் கொள்கைகளின் மீதே பல கட்சிகளும் பொதுநோக்கமொன்றில் ஒன்றுபட முடியும். அதன்போதே பொது வேட்பாளரையும் தீர்மானிக்கலாம். அவ்வாறான கொள்கைகளாவன இப்போதைய ஜனாதிபதி ஏற்கனவே வெளியிட்டுள்ள அல்லது வெளியிட்டும் செயற்படுத்தாத அல்லது வெளியிட்ட கொள்கைகளில் மாற்றிக் கொண்டுள்ளவைகளை துலாம்பரப்படுத்துவனவாக இருக்கலாம்.

குறிப்பாக சொல்வதானால் ஐ.தே.கவின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதியுமான ஜே.ஆர்.ஜயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பிலுள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதைக் கூறலாம். அரசமைப்பிலுள்ள அந்த அம்சத்தை நீக்குவதாகக் கூறி பதவிக்கு வந்தவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அந்தப் பதவியை பயன்படுத்திக் கொண்டு அதை நீக்குவது பற்றிய சிந்தனையே இல்லாமல் ஆட்சி புரிந்துவிட்டு சென்றார். இப்பொழுது அவர் மீண்டும் அந்தப் பதவியில் கண் வைப்பது போல் செய்திகள் வருகின்றன. அவருக்குப் பின் பதவிக்கு வந்தவரான மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார முறையை நீக்குவார் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதனை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் 18 ஆவது திருத்தம் ஒன்றை நிறைவேற்றி இரண்டு முறையல்ல எத்தனை முறை வேண்டுமானாலும் பதவிக்காகப் போட்டியிடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அவர் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளார்.

காலமும், உலக அரசியல் நடைமுறைகளும் மாறிக் கொண்டு வருகையில், அரசுகள் மேலும் மேலும் ஜனநாயக அம்சங்களைத் தமக்குள் இணைத்துக் கொள்வதில் ஈடுபட்டிருக்கையில், இங்கு ஜனநாயகத்துக்கு மாறான காரியங்களே அதிகரித்துப் போவதைப் பார்க்கிறோம். போர் முடிவுற்ற 5 ஆண்டுகள் ஆன பிறகும்கூட பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. குறைந்தது அதனை இலகுபடுத்தும் முயற்சியும் கூட நடக்கவில்லை. பொதுமக்களது அன்றாட செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடுகள் குறையவில்லை. பல்கலைக்கழக செயற்பாடுகளில் இராணுவம் தலையிடுகின்றது. முறை தவறிய வழியில் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கப்படுகிறது. இவைகளை முன்வைத்து பொதுவேட்பாளர் ஒருவரால் சிங்கள மக்கள் முன் வாக்கு கேட்டுப் போகும் வாய்ப்பு இருக்குமா என்றால் இல்லை என்றுதான் பதில் கிடைக்கும்.காரணம்-

முப்பது ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர், பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்தவர், அன்றாடம் உயிரைப் பிடித்துக் கொண்டு உயிர் வாழ்ந்த நிலையிலிருந்து சிங்கள கிராமவாசிகளை மீட்டெடுத்தவர் என்ற சுலோகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றி பதிந்துபோயுள்ளன. அது விடுபடுவதற்கு இன்னமும் வெகுகாலம் எடுக்கும்.

# பத்திரிகையாளர்களுக்கு
# ஆபத்தான நாடாகவே இ

## சிவராம் நினைவுப் பேருரையில் சரவண

சுவிற்சர்லாந்து சிவராம் நினைவு மன்றம் நடத்திய சிவராம் நினைவுக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை மாலை சூரிச் நகரில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் "சிறி லங்காவில் தமிழ் ஊடகங்களும் ஊடகர்களும் எதிர்நோக்கும் சவால்கள் - சர்வதேச பங்களிப்பு" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர் வின்செண்ட் ஜெயன் தலைமை வகித்தார். மூத்த ஊடகவியலாளர் ஞா. குகநாதன் வரவேற்புரை நிகழ்த்த சண். தவராஜா நன்றியுரை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் ஆற்றிய உரையின் முழு வடிவம் கீழே தரப்படுகின்றது.

அமரர் தராகி சிவராமின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காகத் தாங்கள் என்னை அழைத்தமையையிட்டு நான் பெருமைப்படுகிறேன். அதேநேரம், வருத்தமும் அடைகிறேன்.

வயதில் என்னைவிட இளையவரான சிவராமின் நினைவுரையை ஆற்றும்படி என்னை நிர்ப்பந்தித்திருக்கும் இலங்கையின் காலச் சூழல் குறித்தும், குறிப்பாகத் தமிழ் ஊடகத்துறையின் கள நிலை குறித்தும் நான் கவலையும் வருத்தமும் அடைகின்றேன். சிவராமைப் பலியெடுத்த சூழல் இன்றுவரையில் இலங்கையில் மாற்றமில்லாமல் தொடர்வது குறித்தும் சிவராமைக் கொலை செய்தவர்கள் மட்டுமன்றி ஏனைய பத்திரிகையாளர்களைக் கொலை செய்தவர்களும் ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களும் இன்னும் சுதந்திரமாக நடமாடுவதற்கு இலங்கையில் இடமளிக்கப்பட்டுள்ளமை குறித்தும் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் நாங்கள் இருப்பது வருத்தமளிக்கிறது.

அச்சுறுத்தலை எதிர்கொண்ட பத்திரிகையாளர்கள் பலர் இலங்கையை விட்டு உயிர் காக்க வெளியேறி வேறு நாடுகளுக்கு ஓடவேண்டியிருந்தது. அப்படி 50 பத்திரிகையாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இருந்தார்கள் என்று இரண்டு வருடங்களின் முன்னர் சுனந்த தேசப்பிரிய இதே மன்றத்தில் கூறியிருக்கிறார். இந்த எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டில் 80 ஆக அதிகரித்துவிட்டது என்று தெற்காசிய சுதந்திர ஊடகச் சங்கம் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் ஊடக சுதந்திரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வரையில் விவாதப் பொருளாக மாறிவிட்டபோதும் நிலைமையில் மாற்றமோ முன்னேற்றமோ ஏற்படவில்லை என்பதைத்தான் இன்றும் தொடரும் தாக்குதல்கள் உணர்த்துகின்றன.

2013 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி வாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இரு வாரங்களில் உதயன் பத்திரிகை அலுவலகத்தின் முதன்மை அச்சு இயந்திரம் முற்றாக எரித்து அழிக்கப்பட்டது. சரியாக ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் அந்த அச்சு இயந்திரத்தை திருத்தி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர எம்மால் முடியாதுள்ளது. காப்புறுதி நிறுவனத்தினர் அதற்குரிய பணத்தை இன்னும் தருகிறார்கள் இல்லை.

முதலில் காவல்துறையினரின் விசாரணை அறிக்கை வேண்டும் என்றார்கள். உங்களுக்கே தெரியும் இத்தகைய தாக்குதல்களில் காவல்துறையினர் என்றாவது விசாரணைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்களா என்பது. தமது விசாரணை இன்னும் பூர்த்தி அடையவில்லை என்றுதான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பலத்த போராட்டத்தின் பின்னர் ஒருவாறு அந்தத் தடையைத் தாண்டிச் சென்றாலும் தரவேண்டிய காப்புறுதித் தொகையை முழுமையாகத் தராமல் இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள் காப்புறுதி நிறுவனத்தினர்.

இதன் பின்னால் அரசின் அழுத்தம் இருக்கும் என்று நான் திடமாகச் சந்தேகப்படுகிறேன். நாங்கள் (உதயன்) மீண்டும் முழு வீச்சில் பிரதிகளை அச்சிடக்கூடாது என்பதே அவர்களது நோக்கம். எம்மை முடக்காமல் வடக்கில் தேசியக் கட்சிகள் காலூன்ற முடியாது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

எனவேதான் எமது அச்சிடும் வல்லமையை முடக்கும் நோக்கத்துடன் மிகத் திறம்படத் திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அச்சு இயந்திரத்தின் முக்கிய இயக்கு கருவி எங்கிருக்கிறது. அச்சு இயந்திரத்துக்கான மின் விநியோக மார்க்கம் எங்கிருக்கிறது போன்ற விவரங்கள் தாக்குதலாளிகளுக்குத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டே தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்குப் பத்து நாள்களுக்கு முன்னர்தான் உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் தாக்கி நொருக்கப்பட்டது. பத்திரிகைகளை விநியோகிக்க ஊழியர்கள் வரும்வரை காத்திருந்து அந்தத் தாக்குதலை நடத்தியிருந்தார்கள். மூன்று ஊழியர்கள் அந்தத் தாக்குதலில் காயமடைந்திருந்தார்கள். அதன் பின்னர் நடந்த விசித்திரமான சம்பவம் உங்கள் எல்லோருக்கும் தெரியும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் அன்று போலி உதயன் பத்திரிகை ஒன்றை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

தேர்தலைக் கண்காணிக்க வந்திருந்த இந்தியத் தேர்தல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் சேஷன், இந்தியாவிலேகூட இப்படித் தேர்தல் மோசடி இடம்பெற்றதில்லை, இவர்கள் இந்தியாவையும் மிஞ்சி விட்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.

அந்தப் போலிப் பத்திரிகையை இராணுவத்தினர்தான் வீடுவீடாகக் கொண்டு சென்று விநியோகித்தார்கள். பொலிஸாரிடம் முறையிட்டும் அதற்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

ஐ.நா. தீர்மானத்தின் பின்னர் மட்டுமல்ல அதற்கு முன்னரும் - 2013 ஜனவரி முதல்- யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஊடகவியலாளர்கள் மட்டும் இலக்கல்ல. ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் எல்லோருமே இலக்காக்கப்படுகிறார்கள். இதனால் ஊடக நிறுவனங்களில் பணியாற்ற இளைஞர்கள் பின்னடிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமையை அதிகம் அவதானிக்கலாம். அங்கு தொழில் வாய்ப்புக்கள் ஏதுமின்றி பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருக்கின்றனர் என்றபோதும் அவர்களை ஊடக நிறுவனங்களில் வேலைக்கு சேர்க்கப் பெற்றோர் பயப்படுகிறார்கள்.

இதையும் தாண்டி ஒரு சில இளைஞர்கள் முன்வந்தால் அவர்களது குடும்பத்தினர் அதனை விரும்புவதில்லை. தமிழ்ப் பரப்பில் இது மிக அதிகமாக இருக்கிறது. ஓர் இளைஞன் ஊடகத்தில் இணைந்து கொண்டால் அவனை எப்படி அங்கிருந்து பாதுகாப்பாக - சேதங்கள் ஏதுமின்றி -



# இன்றும்கூட
# லங்கை

## னபவன் எம்.பி.




வெளியேற்றுவது என்றே பெற்றோரும் குடும்பத்தினரும் நினைக்கிறார்கள்.

இளம் பெண்கள் திருமணம் செய்தால் அதன் பின்னர் ஊடகங்களில் பணியாற்றுவதைத் தொடர்வது என்பதை அவர்களால் நினைத்தும் பார்க்க முடிவதில்லை. இளம் ஆண்களாக இருந்தால் அவர்களது வாழ்க்கைத் துணைகள் இந்தத் தொழிலில் தொடர்வதை அனுமதிக்க விரும்புவதில்லை. ஊடகப் பணியில் இருந்து ஒதுங்கி வேறு வேலைகளுக்குச் செல்லுமாறு வாழ்க்கைத் துணைகளால் இளைஞர்கள் தொடர்ச்சியான நெருக்குவாரங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்தப் பணியில் இன்றும் தொடர்ந்து இருக்கும் உயிர் ஆபத்துத்தான் இதற்கான காரணம்.

இளைஞர்களுக்கு மட்டும்தான் என்றில்லை. எல்லோருடைய நிலையும் கிட்டத்தட்ட இதுதான். அரச வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள்கூட எமக்கேன் வம்பு என்ற ரீதியில் ஒதுங்கிச் செல்லும் நிலைமைதான் இருக்கிறது.

அந்தளவுக்கு ஊடகத்துறையை ஏதோ பயங்கரவாத அமைப்புக்கள் போன்று இலங்கை அரசும் அதன் சட்டம் ஒழுங்குக் காவலர்களும் உருவகப்படுத்துகிறார்கள். உதயன் இந்தத் தாக்குதலில் நேரடியாகப் பாதிக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகையான டெய்லி நியூஸ் அதனது மூன்றாம் பக்கத்தில் உதயனுக்கு எதிரான செய்திகளைத் தினசரி பிரசுரித்தது. வடக்கில் பணியில் இருந்த அத்தனை இராணுவ ஜெனரல்களும் உதயன் பத்திரிகைக்கு எதிராக டெய்லி நியூஸில் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். முன்னாள் இராணுவ ஜெனரலும் தற்போதைய ஆளுநருமான ஜி.ஏ.சந்திரசிறியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தார்.

உதயன் வெளியிடும் ஒவ்வொரு செய்தியும் தவறானவை இராணுவத்துக்கும் அரசுக்கும் எதிரானவை. இன நல்லிணக்கத்துக்கு விரோதமானவை. பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிப்பவை, பயங்கரவாதத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கங்கொண்டவை என்று இவர்கள் ஒவ்வொருவரும் விசத்தைக் கக்கினார்கள்.

உதயனுக்கு எதிராக இப்படியான கருத்துருவாக்கம் ஒன்றைச் செய்து அதன் மூலம் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு - காடையர்களை ஒழுங்கமைத்து - உதயன் மீதும் அதன் ஊழியர்கள் மீதும் தாக்குதல்களை நடத்துவதற்கான சதியின் ஓர் அங்கமோ இது என்று நாம் அச்சப்படும் அளவிற்கு நிலைமை இருந்தது.

பயங்கரவாத முத்திரை குத்தப்படும் இந்த நடைமுறையின் பிரதான இலக்காக இணையத் தளங்கள் மாறியிருக்கின்றன. கடந்த சில வருடங்களில் புலத்திலும் தாயகத்திலும் புகழ்பெற்றிருந்த பல இணையத் தமிழ்ச் செய்தித்தளங்கள் கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலுமாகத் தடை செய்யப்பட்டுவிட்டன.

இவை பயங்கரவாத அமைப்புக்களின் முகவர் நிலையங்கள் என்பதுபோன்று அரச சார்பு ஊடகங்கள் கருத்துக்களைப் பரப்புகின்றன. இலங்கை அரசை விமர்சிப்பதும், படையினர் செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதும் பயங்கரவாதமா?

அரசை விமர்சித்த சிங்கள இணையத் தளங்களுக்கும் கடந்த காலங்களில் - போர் முடிந்த பின்னரான காலத்தில் - இதுதான் நடந்தது. லங்கா ஈ-நியூஸ் இணையத்தளத்தின் பத்திரிகையாளர்களை அரசு நடத்திய விதத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அரசை விமர்சித்ததைத் தவிர அந்தப் பத்திரிகையாளர்கள் செய்த தவறு ஒன்றும் இல்லை.

நிலைமைகள் இப்படி இருக்கும்போது எவ்வாறு ஊடக நிறுவனங்களுக்கு ஆள்களைப் பணிக்கு எடுக்க முடியும்? ஊடகத் துறையில் படித்துப் பட்டம் பெறும் மாணவர்களே ஊடகங்களில் பணியாற்றப் பின்னடிக்கும் நிலைமைதான் காணப்படுகிறது. அவர்கள் தாம் படித்ததற்கும் தமது அறிவுக்கும் தொடர்பில்லாத அரச வேலைகளையே நாடிப்போகிறார்கள்.

### சவால்கள் இவை மட்டுமல்ல

இன்று ஊடகத்துறை எதிர்கொள்ளும் சவால்கள் இவை மட்டுமல்ல. ஊடகங்களை - குறிப்பாக அரசை விமர்சிக்கும் ஊடகங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வருவதற்கு அரசு சாம, தான, தண்ட, பேத முறைகள் அனைத்தையும் கையாள்கிறது.

இப்போது வடக்குக்கு வெளியே உதயன் பத்திரிகையை எடுத்துச் செல்லும் திட்டம் அப்படியே தேங்கி நிற்கிறது. நாங்கள் எதிர்பார்த்த அச்சு இயந்திரம் எமக்குக் கிடைக்கவில்லை என்பதும் அதற்கு மற்றுமொரு காரணம். எனினும் எனக்குச் சொல்லப்பட்டிருக்கும் தகவல் மறைமுகமான எச்சரிக்கை என்றே நான் நினைக்கிறேன். நிறுவனத்தை நம்பியுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நலன்களையும் கருத்தில் கொண்டே எந்தவொரு முடிவையும் நான் எடுக்க வேண்டியிருக்கிறது.

இதேவேளை, கொழும்பில் இருந்து வெளிவரும் சுடர்ஒளி பத்திரிகையை என்னிடம் இருந்து வாங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புலத்தில் உள்ள அரசுக்குச் சார்பான தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் மூலம்தான் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எத்தகைய நிலையிலும் பத்திரிகையைக் கைமாற்றத் தயாரில்லை என்ற செய்தியை அவருக்குக் கொடுத்திருக்கிறோம். நிலைமை தலைக்கு மேலே சென்றால் பத்திரிகையை மூடிவிடுவோமே தவிர, தமிழ்த் தேசியத்துக்கு எதிரான எந்தச் சக்திகளுக்கும் அது கொடுக்கப்படமாட்டாது என்ற செய்தி அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த முயற்சியை அவர்கள் கைவிட்டு விட்டார்கள் என்று நான் நினைக்கவில்லை.

> ஐ.நா. தீர்மானத்தின் பின்னர் மட்டுமல்ல அதற்கு முன்னரும் - 2013 ஜனவரி முதல்- யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
> ஊடகவியலாளர்கள் மட்டும் இலக்கல்ல. ஊடக நிறுவனங் களில் பணியாற்றும் எல்லோருமே இலக்காக்கப்படுகிறார்கள்.
> இதனால் ஊடக நிறுவனங்களில் பணியாற்ற இளைஞர்கள் பின்னடிக்கும் நிலைமை ஏற்பட்டி ருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமையை அதிகம் அவதானிக்கலாம். அங்கு தொழில் வாய்ப்புக்கள் ஏதுமின்றி பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருக்கின்ற னர் என்றபோதும் அவர்களை ஊடக நிறுவனங்களில் வேலைக்கு சேர்க்கப் பெற்றோர் பயப்படுகிறார்கள்.

போர் முடிந்த பின்னர் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு வழிவகையாக நீதிமன்றங்களிலே வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. உதயன் பத்திரிகைக்கு எதிராகக் கடந்த மூன்று ஆண்டுகளில் 7 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

### குற்றவாளிகளைத் தண்டிக்காமல் தப்ப விடும் போக்கு

ஊடகத்துறைக்கு எதிரான அடக்குமுறைகளைத் தடுக்க வேண்டும் என்றால், நிறுத்த வேண்டும் என்றால் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இலங்கையில் அது நடப்பதே இல்லை. ஏனெனில் ஊடகங்கள் மீதான அடக்குமுறைக்கு காரணமானவர்களாக அரச சார்புக் குழுவினர் அல்லது படையினரே இருக்கின்றனர் என்பதுதான். அதிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களில் இராணுவம் உள்ளிட்ட படையினரின் பங்களிப்பு அதிகமாக இருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க காவல்துறையினர் தயங்குகிறார்கள். இப்படிப்பட்ட தருணங்களில் அவர்கள் இனரீதியாகச் செயற்படுகிறார்களே தவிர நீதியின்பாற்பட்டு அல்ல.

ஓர் உதாரணத்தை இங்கு முன்வைக்கலாம். 2012 நவம்பர் 26 ஆம் நாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் விடுதிப் பகுதியில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவர் உதயன் ஆசிரியரைத் தாக்குகிறார். அந்த இடத்தில் யாழ். பொலிஸ் நிலையத் தலைமையக இன்ஸ்பெக்டர் சமன் சிகேராவும் இருந்தார். சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழ்ப் பத்திரிகையாளர்களைத் தாக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடுவதன் அர்த்தம் அவ்வாறான தாக்குதல்களை ஊக்குவிப்பது தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

இத்தகைய நிலைமையினால்தான் ஊடக சுதந்திரம் குறித்த 179 நாடுகள் கொண்ட பட்டியலில் இலங்கையை 162 ஆவது இடத்தில் தரப்படுத்தியுள்ளது எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு. கடந்த ஆண்டு இந்த அமைப்பே, ஊடக சுதந்திரத்துக்காகத் தொடர்ந்து போராடியமைக்கான சர்வதேச விருதையும் உதயன் பத்திரிகைக்கு வழங்கியிருந்தது.

இப்படிப்பட்ட நிலையில் இலங்கையில் ஊடக சுதந்திரம் மேம்படும் என்ற நம்பிக்கை எதுவும் எனக்கில்லை.

### தமிழர்களின் போராட்டமும் ஊடக சுதந்திரமும்

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இருக்கும் வரையில் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை அனுமதிக்க இலங்கை அரசுகள் தயாராகும் என்று நான் நம்பவில்லை. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கையில் ஊடகங்கள் நசுக்கப்பட ஆரம்பித்த காலத்துக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு உண்டு என்று. நான் நினைக்கின்றேன். இரண்டுமே 1981 ஆம் ஆண்டளவில் தான் தீவிரம்பெற ஆரம்பித்தன. எனவே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் நிலைமை மேம்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்படும் என்று நான் கருதவில்லை.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் நடந்த காலப்பகுதி முழுவதும் இலங்கை அரசுகள் ஊடகங்களை நசுக்குவதில் ஊடகவியலாளர்களை அடிபணிய வைப்பதில் முழுக் குறியோடு செயற்ப்ட்டிருக்கின்றன.

எல்லாப் போர்களிலும் முதலில் சாகடிக்கப்படுவது உண்மை என்பதைப்போலவே உண்மையைச் சொல்லும் ஊடகவியலாளர்களைச் சாகடிப்பதன் மூலம் உண்மையைச் சாகடிக்க முயன்றிருக்கின்றன இலங்கை அரசாங்கங்கள். குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் இந்தத் தாக்குதல்களின் முதற் குறியாகவும் முழுக் குறியாகவும் இருந்து வந்திருக்கிறார்கள்.

அரசியலுக்கும் ஊடக அடக்குமுறைக்கும் இடையிலான இந்தத் தொடர்பு மிக முக்கியமான விடயத்தைச் சொல்கிறது. அதாவது இலங்கையில் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படாத வரையில் ஊடக சுதந்திரம் அங்கு மேம்படுவதற்கோ மனித உரிமைகள் மேம்படுவதற்கோ சாத்தியங்கள் ஏதுமில்லை. ஏனெனில் ஊடகங்களை அடக்கி ஒடுக்காமல் இலங்கை அரசுகளால் தமிழ் மக்களை வெற்றிகரமாக அடக்கி ஒடுக்க முடியாது.

ஊடகங்கள் அனைத்திடம் இருந்தும் மறைக்கப்பட்ட வன்னியின் இறுதிப் போர் எப்படி நடத்தப்பட்டது? எவ்வளவு கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன? எவ்வளவு தூரத்துக்கு மனித உரிமைகள் மீறப்பட்டன? மனித குலத்துக்கே எதிரான குற்றங்கள் எவ்வளவு புரியப்பட்டன என்பதெல்லாம் இப்போது சர்வதேச அரங்கில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உண்மையான விசாரணை அறிக்கை வெளிவரும்போது இன்னும் கூடுதலான உண்மைகள் வெளிவரும்.

சுதந்திரமான ஊடகங்கள் போர் முனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் இத்தனை கொடிய போர் ஒன்றை இவ்வளவு துணிச்சலாக மேற்கொண்டிருக்க முடியுமா? இன்று மனித உரிமைகள் குறித்து பெருமெடுப்பில் குரல் கொடுக்கும் நாடுகள் அன்று இலங்கைக்கு ஆதரவாக இந்தப் போரில் பங்காளிகளாக வெட்கம்கெட்ட தனமாக இருந்திருக்க முடியுமா?

### சர்வதேசப் பங்களிப்பு

அதேசமயத்தில் புலம்பெயர் தமிழ் சமூகத்தினர் இலங்கையில் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் இருப்புக்கு முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் நான் கருதுகின்றேன். தொழில் நுட்ப ரீதியிலும் அறிவு ரீதியிலும் அங்குள்ள பத்திரிகையாளர்களை மேம்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. அதற்கு புலம்பெயர் சமூகம் உதவவேண்டும். தொழில் ரீதியிலான பட்டறிவை மேற்குலக நாடுகளில் பெற்றுக்கொள்வதற்கு சிவராம் நினைவு மன்றம் போன்ற அமைப்புகள் உதவவேண்டும். அதேபோன்று இங்கு பத்திரிகைத் துறையில் படித்துப் பட்டம் பெற்ற தமிழ் இளையவர்கள் இலங்கைக்கு வந்து பணியாற்றுவதற்கும் முன்வரவேண்டும். அது இரு தரப்பினரையும் வளப்படுத்துவதுடன் அங்குள்ள உண்மை நிலவரத்தைத் தமிழ் இளையோர்கள் அறிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். சர்வதேச பங்களிப்பு என்ற விடயத்தில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்பையும் சேர்த்தேதான் நான் நோக்குகிறேன்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு வேலை மாற்றம் உண்டாகும். குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். தெய்வ நம்பிக்கை கூடும்.



**இடபம்**: உறவினர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். இழுபறியாக இருந்த காரியங்களில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு தேர்வுகள் பற்றிய பயம் நீங்கும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.



**மிதுனம்**: எல்லா காரியங்களிலும் நன்மை உண்டாகும் செய் தொழில் சிறக்கும். நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணங்களால் வீண் அலைச்சலும் செலவும் ஏற்படலாம்.



**கடகம்**: மேலதிகாரிகளின் ஆதரவை உத்தியோகத்தர்கள் பெறுவார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். வியாபாரம் தொடர்பான பயணங்களால் அலைச்சல் உண்டாகலாம். எதிர்பார்த்த பயன் தாமதப்படும்.



**சிங்கம்**: பெண்களுக்கு வீண் அலைச்சலும், செலவும் ஏற்பட்டாலும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.



**கன்னி**:போட்டி நீங்கும். எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். எல்லா கஷ்டங்களும் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும்.



**துலாம்**: நண்பர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.



**விருச்சிகம்**: எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். மனச் சஞ்சலம் உண்டாகலாம். அதனால் எந்த ஒரு வேலைபற்றியும் அதிகம் யோசிப்பதைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பணதேவை உண்டாகலாம்.



**தனுசு**: வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும்.



**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்பட்டாலும்,சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும்.



**கும்பம்**: கடன் விவகாரங்களில் யோசித்துச் செயற்படுவது நல்லது. பெண்கள் எதிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. வீண் மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். கல்வியில் ஏற்பட்ட தடை நீங்கும்.



**மீனம்**: எதிர்ப்புகள் அகலும், மனதில் தைரியம் உண்டாகும். எதிர்பாராத திருப்பம் உண்டாகலாம். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும்.

## நாளை

**சித்திரை-31 புதன்கிழமை | 14.05.2014**

திதி: பூரணை பி.இ.01.05 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.ப.07.33 வரை

சுபநேரம்: 04.23-05.53 வரை
இராகுகாலம்: 11.53-01.23 வரை
சித்திரா பூரணை விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### ஆன்மா

மாக்ஸ் முல்லருடைய (Max Muller) வேதாந்த தத்துவம் பற்றிய மூன்று சொற்பொழிவுகள் (Three Lectures on the Vedanta Philosophy) என்ற சிறந்த புத்தகத்தை உங்களில் பலர் படித்திருப்பீர்கள். அதே விடயத்தைப் பற்றிப் பேராசிரியர் டியூசன் (Deusssn) ஜேர்மனிய மொழியில் எழுதிய புத்தகத்தையும் உங்களில் சிலர் படித்திருக்கலாம். இந்திய மதச் சிந்தனையைப் பற்றி மேலை நாடுகளில் எழுதியும் கற்பித்தும் வருகிறார்கள். அவற்றுள் ஒரு குறிப்பிட்ட கொள்கையை முக்கியமாகக் கையாள்கிறார்கள். அதுதான் அத்வைதம். அதாவது, இந்திய மதத்தின் ஏகான்மவாதம். அந்த ஒரே கொள்கையில், வேதங்களின் போதனைகள் முழுவதும் அடங்கியிருக்கின்றன என்று கூட நினைக்கிறார்கள். ஆனாலும், இந்தியச் சிந்தனையில், பல நிலைகள் இருக்கின்றன. அவற்றுள் மற்ற நிலைகளோடு ஒப்பிட்டால் அத்வைதத் தத்துவத்தை, மிகச் சிறுபான்மையினர் மட்டுமே கடைப்பிடிக்கிறார்கள். மிகப் பழங்காலத்திலிருந்தே , இந்தியாவின் மத சிந்தனையில் பல பிரிவுகள் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு பிரிவினரும் நம்பிக் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை உருவாக்குவதற்கு எந்த மதக் குழுவும் இல்லாததால், மக்கள் தங்களுக்குப் பிடித்த மதப் பிரிவைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், தங்களுக்கென்று சொந்தமாக ஒரு தத்துவத்தையும், மதப் பிரிவையும் ஏற்படுத்திக் கொள்வதற்கும் சுதந்திரம் இருந்தது. ஆகவே, மிகப் பழங்காலத்திலிருந்தே, இந்தியாவில் பல மதப் பிரிவுகள் இருந்திருக்கின்றன என்பது தெரிய வருகிறது. இப்போது எவ்வளவு நூற்றுக்கணக்கான மதப் பிரிவுகள் இந்தியாவில் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. அத்துடன், பல புதிய பிரிவுகளும் ஒவ்வோர் ஆண்டும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இந்தியாவின் மத இயக்கம் எல்லையற்றதாக இருப்பதாகத் தோன்றுகிறது.

இந்தப் பல பிரிவுகளையும் இரண்டு தலைப்புகளின் கீழே கொண்டு வந்து விடலாம். ஒன்று வைதிகமானது; மற்றொன்று வைதிகம் அல்லாதது. இந்து மத வேத சாஸ்திரங்களே நிலையான உண்மையை விளக்குவனவாகும், என்று நம்பும் பிரிவுகள் வைதிகமானவை. வேதங்களை மறுத்து, வேறு கருத்துகளைக் கொண்ட பிரிவுகள், வைதிகத்துக்கு மாறானவை. தற்காலத்தில், வைதிகத்துக்கு மாறான மதப் பிரிவுகளில் முக்கியமானவை, சமண மதமும், புத்த மதமுமே. அறிவுபூர்வமாக ஆராய்வதை விட, வேதங்கள் கூறும் கொள்கைகளே உயர்ந்தவை என்று வைதிக மதப் பிரிவைச் சேர்ந்தவர்களில் சிலர் திடமாகக் கூறுகிறார்கள். அவர்களிலேயே வேறு சிலர், வேத சாஸ்திரங்களில், அறிவுபூர்வமாக இருப்பவற்றை மட்டுமே ஒப்புக் கொள்கிறார்கள்.

## கடலுக்கு அடியில் கிளியோபாட்ராவின் அரண்மனை



கடலுக்கு அடியில், 1,600 ஆண்டுகளுக்கு முன் புதையுண்டதாகக் கருதப்பட்ட கிளியோபாட்ரா வாழ்ந்த அரண்மனை தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால், இந்த அரண்மனைக் கடலுக்குள் புதைந்து விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பலவித சிலைகளும், சிவப்பு கிரானைட் தூண்களும், அரிய பொருள்களும் இதில் அடங்குகின்றன. கிளியோபாட்ராவின் மகனின் சிலையும், கடவுள்களின் சிலைகளும் காணப் படுகின்றனவாம்.

இங்கு புதையல்களும் இருக்க வாய்ப்புள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அரண்மனையில் வைக்கப்பட்ட பல பொருள்கள், வைத்தது வைத்தவை போன்றே இருப்பது ஆராய்ச்சியாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சுடோக்கு


### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 8 | 9 | | | | | 3 |
| | 4 | | 8 | | 2 | | | 7 |
| | | 6 | 5 | | 4 | | | |
| | | | | | | 9 | 7 | 2 |
| 2 | | 9 | 3 | | 7 | 4 | | 6 |
| 7 | 6 | 5 | | | | | | |
| | | | 4 | | 3 | 7 | | |
| 3 | | | 7 | | 5 | | 2 | |
| 4 | | | | | 8 | 6 | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 8 | 1 | 4 | 3 | 7 | 2 |
| 4 | 2 | 8 | 3 | 6 | 7 | 1 | 5 | 9 |
| 7 | 1 | 3 | 5 | 2 | 9 | 8 | 6 | 4 |
| 8 | 7 | 4 | 6 | 5 | 3 | 2 | 9 | 1 |
| 2 | 9 | 5 | 7 | 8 | 1 | 4 | 3 | 6 |
| 1 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 2 | 1 | 7 | 8 | 9 | 4 | 3 |
| 3 | 8 | 1 | 9 | 4 | 6 | 7 | 2 | 5 |
| 9 | 4 | 7 | 2 | 3 | 5 | 6 | 1 | 8 |



அட்சய திருதியை கடந்த முதலாம் திகதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்தில் தங்க நகைகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். யாழ்ப்பாணம் லலிதா ஜுவல்லறியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தங்க நகைகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். (த)

# மடு யாத்திரிகர்களுக்கு விரைவில் கொமர்ஷல் வங்கி ஏ.ரி.எம். வசதி

COMMERCIAL BANK

இம்மாதம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை மடு புனிதப் பிரதேசத்தில் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் நலன் கருதி மடு புனித பிரதேசத்தில் கொமர்ஷல் வங்கி நடமாடும் ஏ.ரி.எம். வங்கிச் சேவையை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

கத்தோலிக்கர்களுக்கும் அதேபோல் மற்றவர்களுக்கும் புனிதப் பிரதேசமாக அமைந்துள்ள மடு பிரதேசத்தில் இவ்வாறான ஏ.ரி.எம். சேவை வழங்கப்படவுள்ளமை இதுவே முதற் தடவையாகும் என வங்கி தெரிவித்துள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்று தினங்களிலும் காலை 7 மணிமுதல் இரவு 9 மணிவரை புனித ஆலய பிரதேசத்தில் பக்தர்கள் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் ஏனைய வங்கிகளால் வழங்கப்பட்ட கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்டுகள் உள்ளவர்களும் அவற்றைப் பயன்படுத்தி இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். கொமர்ஷல் வங்கியின் மன்னார் கிளை இந்தச் சேவைகளுக்குப் பொறுப்பாக இருக்கும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கியே உலகில் உள்ள தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து மூன்றாண்டுகளாக இடம் பிடித்துள்ள ஒரேயொரு உள்ளூர் வங்கியுமாகும். இது 235 கிளைகள் மற்றும் 585 ஏ.ரி.எம். இயந்திர வலையமைப்புகளுடன் செயற்படுகின்றது. (த)

# காப்புறுதியாளர்களின் குடும்பங்களை குதூகலத்தில் ஆழ்த்திய செலிங்கோ






செலிங்கோ லைப் நிறுவனம் தனது வாடிக்கையாளர் குடும்பங்களை இரண்டு சுற்றுலாக்கள் மூலம் எல்லையற்ற ஆனந்தத்திலும் மறக்க முடியாத குதூகலத்திலும் ஆழ்த்தியுள்ளது. இதில் ஒன்று உள்ளூரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா மற்றது வெளிநாட்டு சுற்றுலா. கம்பனியின் குடும்பச் சவாரி7 ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலமே இந்த சுற்றுலாக்கள் இடம்பெற்றன.

செலிங்கோ லைப்பின் அனுசரணையுடன் பத்து காப்புறுதிதாரர் குடும்பங்களைச் சேர்ந்த நாற்பது பேர் சீனாவுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். 500 காப்புறுதிதாரர் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பேர் அவிஸ்ஸாவலையில் உள்ள லெஷர் வேர்ள்டில் ஒரு தினத்தை உல்லாசமாகக் கழித்தனர்.

லெஷர் வேர்ள்டில் ஒரு தினத்தைக் கழிப்பதற்காக நாட்டின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த சகல சமயங்களையும் இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் வந்திருந்தனர். இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து வந்து செல்வதற்கான போக்குவரத்து, உணவு வசதி, சிற்றுண்டிகள் என்பனவும் வழங்கப் பட்டன. லெஷர் வேர்ள்டில் உள்ள நீர் விளையாட்டுக்கள் உட்பட எல்லா விளையாட்டுக்களிலும் பங்கேற்கும் வாய்ப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டது. அத்தோடு பாரம்பரிய புத்தாண்டு வரவேற்பு மற்றும் நிகழ்வு களிலும் இவர்கள் பங்கேற்றனர். இவர்களுள் ஐந்து அதிர்ஷ்டசாலி குடும்பங்களுக்கு ஹெலிகொப்டர் சவாரிக்கான வாய்ப்பும் கிட்டியது.

செலிங்கோ லைப்பின் புவியியல் பன்முகத் தன்மையை குறிக்கும் வகையில் யாழ்ப்பாணம், தெஹியத்தகண்டிய, மாத்தளை, மாஸ்பொத்த, மற்றும் எல்லங்கல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பத்தவர்களுக்கே ஹெலிகொப்டர் சவாரிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

குடும்ப சவாரி7ன் கீழ் சீனாவுக்கு விஜயம் செய்தவர்கள் தியான்மென் சதுக்கம், தடைசெய்யப்பட்ட நகரம், சீனப் பெரும் சுவர், பேர்ட்ஸ் நெட்ஸ் மைதானம், முத்து தொழிற்சாலை, மிங் ராஜவம்ச கோபுரம், பட்டுச் சந்தை, யஷோ சந்தை, சீன சர்க்கஸ் காட்சி என்பனவற்றைக் கண்டு களித்தனர்.

லெஷர் வேர்ள்ட் சுற்றுலாவில் பங்கேற்றவர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய செலிங்கோ லைஃப்பின் பணிப்பாளரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துஷார ரணசிங்க, செலிங்கோ லைஃப் குடும்ப சவாரி திட்டம் ஒரு உன்னதமான திட்டமாகும். இலங்கையில் கூட்டாண்மை நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்கின்ற மிகப் பெரிய ஒரு நிகழ்வாக அது இருப்பதோடு மட்டுமன்றி அது பல்வேறு சமயங்களையும் இனங்களையும் சேர்ந்த மக்களை ஒரே இடத்தின் கீழ் கொண்டு வரும் ஒரு நிகழ்வாகவும் அமைந்துள்ளது. அத்தோடு அது அவர்களுக்கு ஒரே குடும்பமாக கலந்து மகிழ்வுறுவதற்கான வாய்ப்பையும் அளிக்கின்றது. இதுவே அது உன்னதமான நிகழ்வாக அமையக் காரணமாகின்றது என்றார்.

மே மாதத்தில் மேலும் ஐந்து காப்புறுதிதாரர்களின் குடும்பத்தவர்கள் சகல செலவுகளுடனும் கூடிய ஜப்பான் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர். இம்முறை குடும்ப சவாரி திட்டத்தின் கீழ் இதுவே மிக உயர்ந்த பரிசாக அமைகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக மேலும் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் சிங்கப்பூருக்கும் செல்லவுள்ளனர்.

குடும்ப சவாரி7 க்கான ஊக்குவிப்புக் காலம் 2013 செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரையாகும். இந்தக் காலப்பகுதியில் செலிங்கோ லைப்பின் ஆயுள் காப்புறுதி வாடிக்கையாளர்களும் ஓய்வூதியக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களும் பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதன் ஊடாக இந்த சுற்றுலாக்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (த)

# குறோ யூனிவேர்சல் மார்க்கட்டிங்கின் சொவ்ற் லவ் பிராண்ட் பொருள்கள்

Softlove®
Extra Comfort . Encore Plus Comfortable

குறோ யூனிவேர்சல் மார்க்கட்டிங் நிறுவனமானது இலங்கையின் மிகப் பிரபலமான சொவ்ற் லவ் பிராண்ட் பொருள்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனமாகும்.

தர முதல்வனாகத் திகழ்வதை நோக்காகக் கொண்டு செயற்படும் நிறுவனமாகும். 15 வருடங்களாகத் தங்களது முதல் தர பம்பஸ்களை தொடர்ச்சியாக விநியோகித்து வருகின்றது. இந்நிறுவனத்தின் தாரக மந்திரமே தரமான பொருள்களை நியாயமான விலையில் வழங்குவதாகும். இதற்காக இலங்கையின் வெப்ப தட்ப சூழ்நிலைகள் , பாரம்பரிய பண்பாடுகள் உடல் வளர்ச்சி என்பவற்றை ஆராய்ந்து இலங்கை மக்களுக்காகவே விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் இவ் சொவ்ற் லவ் பிராண்ட் பொருள்களை தரமானதாகவும் இலங்கை மக்களுக்கு ஏற்றதாகவும், சிறந்ததாகவும் உள்ளன. சந்தைப்படுத்தப்படும் பொருள்கள் யாவும் தரமானதாக காணப்படுவதினால் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் நன்மதிப்பையும் பெற்றுள்ளது. அத்துடன் சுகாதார அமைச்சின் அங்கீகாரம் இதற்கு உண்டு.

இலங்கையின் முதல்தர பம்பஸ் சொவ்ற் லவ் பிராண்ட் பம்பஸ்கள் பக்கவிளைவுகள் அற்றவையும் மிகநம்பிக்கையானவையும் மட்டுமல்லாமல் இலங்கைக் குழந்தைகளின் ஆரோக்கியத்தை முக்கியமாகக் கொண்டு மென்மையான துணிபோன்ற உட்சுவர்களையும் அதிக கனவளவு உறிஞ்சும் தன்மையையும் விரைவில் உலரக்கூடியதாகக் காணப்படுவதால் குழந்தைகள் சௌகரியமாக இருப்பதற்கும் நிம்மதியாக உறங்குவதற்கும் இது உதவுகிறது. அது மாத்திரமன்றி நிறைக்கேற்றவாறு சொவ்ற் லவ் தயாரிக்கப்பட்டுள்ளதால் குழந்தைகளின் நிறை அதிகரிக்கும்போது அதற்கேற்ற அளவைத் தெரிவு செய்ய முடிகிறது. மேலும் இதே சொவ்ற் லவ் பிராண்ட்டைச் சந்தைப் படுத்தும் குறோ யூனிவேர்சல் மார்க்கட்டிங் தங்களின் சந்தைப்படுத்தல் அனுபவத்தைக் கொண்டு அண்மையில் நவீன தொழில்நுட்பத்தில் உருவான சொவ்ற் லவ் சிமாட் பான்ஸை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இது குழந்தைகளுக்கு மேலும் சௌகரியத்தையும் அழகையும் தருகிறது. குழந்தைகளுக்கு கச்சிதமாக பொருந்தக்கூடியதும் , கசிவுத் தடுப்பு சுவர்கள் கொண்டதும் சிரமமற்ற முறையில் அணியக் கூடியதாகவும் உள்ளது. இதுவும் நிறையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது. (த)

# முதுமாணி கற்கைகளுக்கு மாணவர்கள் இணைப்பு

மாணவர்களுக்கு பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதுமாணி தகைமைகளை பெற்றுக் கொடுப்பதற்கு, உயர்தர கற்கைநெறிகளை வழங்கும் கல்வியகமான எஸ்.எல்.ஐ.ஐ.ரி . தற்போது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. MSc in IT (Specialising in Cyber Security) மற்றும் MSc Degree in Enterprise Applications Development ஆகிய கற்கைகளுக்கு இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மேற்படி கற்கைநெறிகள் தொடர்பிலான திறந்த தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்று எதிர்வரும் மே 20 ஆம் திகதி எஸ்.எல்.ஐ.ஐ.ரி. மெட்ரோ கம்பஸ் வளாகத்தில் பி.ப. 6 மணி முதல் பி.ப. 8 மணிவரை இடம்பெறும். மேலும், ஒவ்வொரு கற்கைகளுக்கும் அவசியமான தேவைப்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்படும். அத்துடன், பங்குபற்றுநர்களுக்கான தெரிவு, தெரிவு பரீட்சை, நேர்காணல் பெறுபேறுகளின் மூலம் மற்றும் பரிந்துரைகளின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எஸ்.எல்.ஐ.ஐ.ரி., தகவல் தொழில்நுட்ப முதுமாணி கற்கைகளுக்காக தற்போது 11ஆவது தடவையாக விண்ணப்பங்களை கோரியுள்ளது. இந்த கற்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், கணினி பொறியியல் கற்கைகள் அல்லது ஏனைய எந்தவொரு கற்கையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது SLIIT இனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த கல்வியகமொன்றில் அங்கத்துவத்தை பெற்றிருப்பதுடன் தொழில் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

எஸ்.எல்.ஐ.ஐ.ரி. தகவல் முகாமைத்துவ முதுமாணி கற்கைகள் பட்டதாரிகள் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த அமைப்புகளில் அங்கத்துவம் பெற்றுள்ளதுடன், நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த தரப்பினருக்கு விசேடமானதாக அமைந்த கற்கைநெறியாகும். பங்குபற்றுநர்களுக்கு, தகவல் முகாமைத்துவம் மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றில் நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆப்ளிகேஷன்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும். இந்த கற்கையைத் தொடர விரும்பும் மாணவர்கள் எந்தவொரு பிரிவிலும் இளமாணிப் பட்டத்தை எந்தவொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றிருக்க வேண்டும் அல்லது அங்கீகாரம் பெற்ற நிபுணத்துவம் வாய்ந்த கல்வியகத்தில் அங்கத்துவம் பெற்றிருப்பது அல்லது முகாமைத்துவப் பிரிவில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டு காலம் பணியாற்றிய அனுபவத்தை பெற்றிருப்பது அவசியமாகும்.

பல்கலைக்கழகங்கள் சட்ட விதிமுறைக்கு அமைய, பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியை பெற்றுள்ளதன் மூலம் SLIIT இனால் Bachelor's மற்றும் Master's Degrees in Computing, Business மற்றும் Engineering போன்றன வழங்கப்படுகின்றன.

மாணவர்கள் விண்ணப்பங்களை கல்வியகத்தின் இணையத்தளமான www.sliit.lk அல்லது இல. 28, சென். மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03 எனும் முகவரியைச் சேர்ந்த BOC மேர்ச்சன்ட் டவரில் அமைந்துள்ள எஸ்.எல்.ஐ.ஐ.ரி. கம்பஸிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விவரங்களை www.sliit.lk அல்லது mscinfosliit.lk எனும் மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். (த)



சுழிபுரம் பண்டவட்டை பகுதியிலுள்ள முரளிகிருஷ்ணா சனசமூக நிலையத்தில் சிறுவர் மகிழ்வகம் நிகழ்வு. சனசமூக நிலையத் தலைவர் எஸ். கிருஷ்ணா தலைமையில் இடம்பெற்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வை வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆரம்பித்து வைத்தார். சிறுவர்களது நடத்தைகளை எப்படி பெற்றோர் அறிந்து கொள்வது. சிறுவர்கள் எப்படி போதைப்பொருள் பாவனையில் இருந்து தப்பிக் கொள்வது. பெற்றோருடனான வீண் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வது எவ்வாறு. பாலியல் பலாத்காரத்தில் இருந்து தப்பிக் கொள்வது எப்படி. நன்னடத்தைகள். தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. (ஒ-21)

## வேகம் வினையானது; இளைஞர் படுகாயம்

தென்மராட்சி, மே 13

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இளைஞர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிறு இரவு மட்டுவிலில் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தவக்குமார் சுதாகரன் (வயது-26) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-9)

## சமய சந்நிதிகளில்

நவாலி, மே 13

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (வ-100)

◆◆◆


அராலி மத்தி உலோலைசிட்டி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் இந்த ஆண்டுக்கான உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

25 ஆம் திகதி மாலை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. உற்சவ குருவாக சிவஸ்ரீ ச.மு.ரவிக் குருக்கள் தலைமை தாங்குவார். (க)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சுபாஷினி சண்முகராஜா
அவர்களின் அன்புத் தந்தை

### நாராணபிள்ளை மயில்வாகனம்



அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை சமூகம். (சி/14253) (7.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி றமேஸ் (லண்டன்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி றமேஸ் கடந்த 24.04.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி-லிங்கேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், றாயேஸ் கண்ணா, காண்டீபன், கலைச்செல்வன், அசோவனன், யானகி (கொக்குவில்), காயத்திரி (மன்னார்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரெலின்றாஜ், றஞ்யன், தர்சினி, சயிலா ஆகியோரின் மைத்துனரும், யஸ்வின், கவின்சன் ஆகியோரின் பெரிய மாமாவும், திபிசா, தகிரா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2014) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய். (48007) (10.6.3)


தகவல்:
கந்தசாமி குடும்பத்தினர்.
077 476 6921

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1980.10.14

ஆண்டவன் அடியில்
2013.04.24

திதி - பிரதமை
13.05.2014



### அமரர் சுப்பிரமணியம்-ரவிக்குமார்

(தாங்கி கணிப்பீட்டாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கே.கே.எஸ்.)

ஆண்டு ஒன்று ஆனதுவோ அப்பா
ஆறவில்லை உங்கள் நினைவுகள் பாசத்துடன்
வாழ்ந்த என் அன்புக் கணவரே எங்கள்
உறவில் மீண்டும் கலந்திட உருவெடுத்து
வருவீரா என் பாசமிகு - கணவரே

காலத்தின் கோலமோ கொடிய நோய்
ஒன்று உங்களின் உயிரைப் பலி எடுத்ததுவோ
உம் பிரிவால் ஏங்கித் தவிக்கின்றோம்
அப்பா என்ற மூன்றெழுத்தை மறவோம் அப்பா !

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

லவ் லேன், உடுவில்,சுன்னாகம். (48010)(5.6.3) குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவேந்தல்

13.05.2014



| த.தமிழவள் | சொ.சுருதியன் | த.நளாயினி |
|---|---|---|
| மலர்வு - 28.07.1997 | மலர்வு - 13.03.2005 | மலர்வு - 26.09.1994 |
| உதிர்வு - 14.05.2009 | உதிர்வு - 13.05.2009 | உதிர்வு - 13.05.2009 |

ஆண்டுகள் பறந்தோடுகின்றன ஆனால் உங்கள் நினைவுகள் - எம்
நெஞ்சில் அப்படியே நின்றாடுகின்றன நீரினுள் மறைந்து சுழலும் சுனையாய்
உங்கள் பிரிவின் வேதனை நம்முள் சுற்றிச் சுழல்கின்றது
ஆறாத துயரத்தை என்றும் சுமந்தழுகின்றோம்
எம் இனிய செல்வங்களே.

(C/14242)(7.6.3)

துவாரகை, வதிரி, கரவெட்டி.

உங்கள் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அக்கா, தம்பி

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேரவில் பூநகரி, குருசோ வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை 10.05.2014 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற அக்னேஸ் அம்மா மற்றும் கெலன் எலிசபெத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிர்மலன் (ஜேர்மனி) மற்றும் சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், தேவராசா மற்றும் நாகராசா,மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருமதி அன்னம்மா தம்பிராசா, காலஞ்சென்ற அருட்சகோதரி டிலசலேற் மற்றும் சின்னத்தம்பி ஞானம்மா, திருமதி ராணி கணபதிப்பிள்ளை, மத்தியூஸ் மரியதாஸ், அன்ரன் ஜெயராஜ், காலஞ்சென்றவர்களான இரத்தினம்(Chairman), இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சவுந்திரம், யூலியன் புஸ்பராஜா, ஜூஜின்(லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், பாக்கியலீலா, ராசவதி, சுரேந்தினி (ஜேர்மனி), சாந்தினி (நோர்வே), குமார்(லண்டன்) ஆகியோரின் மாமனும்,கிறிஸ்ரின் நோமன் ஜெனிபர் (ஜேர்மனி), கிறிஸ்ரின் நோமன் றோய் (ஜேர்மனி) கிறிஸ்ரின் நோமன் சௌமி (ஜேர்மனி), சுதன் சதுசன்(நோர்வே),சுதன் துஜிதா (நோர்வே), குமார் சயன் (லண்டன்), குமார் சயினி (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று(13.05.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இல183, குருசோ வீதியில் அமைந்திருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தூய மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினா,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

183, குருசோ வீதி,
சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.
021 222 0477
077 608 7474
(48011)(5.6.3)

தகவல்:
கெலன் எலிசபெத் (மனைவி),
சுதன்(சுதாகர்-மகன்),
இராசலிங்கம் (ராசா-மருமகன்).

# நியமனக் கடிதங்களைக் கையளித்தனர் தூதுவர்கள்



வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியபோது...

கொழும்பு.மே 13
இலங்கையில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆறு வெளிநாட்டுத் தூதுவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.
கொங்கோ, ஆர்ஜன்ரீனா, கொரியா, பிலிப்பைன்ஸ், பலஸ்தீன், எல்சல்வடோர் ஆகிய நாடுகளின் தூதுவர்களே நேற்று ஜனாதிபதியைச் சந்தித்தனர்.
இவர்களுடன் ஜனாதிபதி நடத்திய கலந்துரையாடலின் போது அவர்கள் தமது நாட்டுத் தலைவர்களின் வாழ்த்துச் செய்திகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.
இலங்கையுடனான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் சேவை செய்ய உறுதிகொள்வதாகவும் தெரிவித்தனர்.
இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, வெளி விவகார பிரதி அமைச்சர் நியுமால் பெரேரா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ச)

## தவறான வர்ணத்தில் பௌத்த கொடிகள்

### புறக்கோட்டையில் சிக்கின

கொழும்பு,மே 13
சரியான வர்ணத்தில் அல்லாது மாற்று வர்ணங்களில் தயாரிக்கப்பட்ட 60,000 பௌத்த கொடிகள் கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

> " புறக்கோட்டை பீபல்ஸ் பார்க் கட்டடத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து இந்த பௌத்த கொடிகள் மீட்கப்பட்டன

புறக்கோட்டை பீபல்ஸ் பார்க் கட்டடத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து இந்த பௌத்த கொடிகள் மீட்கப்பட்டன என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.
யார் இந்த தவறான நிறத்தில் கொடிகளை தயாரித்தனர் என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## தொழில் வாய்ப்பில் ஈடுபடுவதற்கு பட்டதாரிகளுக்குத் தகுதி குறைவு

### அடுத்தவருடம் அதிகரிக்க நடவடிக்கை என்கிறது உயர்கல்வி அமைச்சு

கொழும்பு,மே 13
இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்ற மாணவர்கள், தொழில் வாய்ப்புகளில் ஈடுபட 55 வீதமான தகுதியை மாத்திரமே கொண்டிருக்கின்றனர் என்று உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இதனை அடுத்த வருடத்தில் 70 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கலைத்துறையில் பட்டம் பெற்றவர்கள் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட 28 வீத தகுதியையே பெற்றுள்ளனர்.
விஞ்ஞானத்துறையில் பட்டதாரிகள் 68 வீதத் தகுதியையும் முகாமைத்துவப் பட்டதாரிகள் 63 வீதமான தகுதியையும் கொண்டுள்ளனர்.
பொறியியல்துறை பட்டதாரிகள் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கான 93 வீதமான உயர்ந்த சதவீத தகுதியையும் கொண்டுள்ளனர்.
மருத்துவப் பட்டதாரிகள் 90 வீதமான தகுதியை கொண்டுள்ளனர் - என்றார்.
இதேவேளை - அடுத்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கு 25 ஆயிரத்து 500 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் உயர்கல்வி அமைச்சு கூறியுள்ளது. (ச)

## மானிப்பாய் மத்திய சந்தையில் சைக்கிள் தரிப்பிடம் அமைக்குக

### பிரதேச சபையிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு. மே 13
மானிப்பாய் மத்திய சந்தையில் சைக்கிள் பாதுகாப்புக்கு பணம் அறவிடப்படும் அதே நேரம் தரிப்பிடம் அமைக்கப்படாததால் சைக்கிள்களை வெயிலில் தரித்து நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த நிலை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள பொதுமக்கள் சைக்கிள்களைப் பாதுகாப்பாகத் தரித்து விடுவதற்கு வசதியாகத் தரிப்பிடத்தை அமைக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையைக் கோரியுள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள ஏழு சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை பல துறைகளிலும் முன்னணி வகிப்பதுடன் கூடிய வருமானத்தையும் பிரதேச சபைக்குப் பெற்றுக் கொடுக்கின்றது.
அயல் கிராமங்களிலிருந்து தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்காக மேற்படி சந்தைக்கு சைக்கிள் களில் வருவது வழக்கம்.
ஏற்கெனவே அந்தச் சந்தையில் வசதியீனங்கள் மத்தியில் இருந்த சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் கடந்த சில மாதங்களுக்கு முன் சரிந்து விழுந்து விட்டது. அதையடுத்து இன்று வரை சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை.
சைக்கிள் பாதுகாப்புக்குப் பணம் அறவிடப்படும் அதேநேரம் தரிப்பிடம் இல்லாததால் சைக்கிள்களை வெயிலில் நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்புத் தரிப்பிடத்தை விரைவாக அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். (வ-115)

## அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளுங்கள்

### மட்டு. மாவட்ட கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து மீன்பிடி படகுகளுக்குமான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.
அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத மீனவர்கள் மற்றும் படகுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டொமினிக்கோ ஜோர்ஜ் தெரிவித்தார். (ச)


## மரண அறிவித்தல்

**திருமதி செம்பற்சோதி (குருக்கள் அம்மா)**
**சுப்பிரமணியகுருக்கள்** (இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி)



காரைநகரைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செம்பற் சோதி சுப்பிரமணிய குருக்கள் 11.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார்காலஞ்சென்ற சுப்பிரமணியக் குருக்களின் பாசமிகு மனைவியும், மனோன்மணி, காலஞ்சென்ற சுவாமிநாதன் மற்றும் செல்வமுத்துக் குமரன் குருக்கள் (சிங்கப்பூர்), வைத்திய நாதகுருக்கள் (கனடா), நளாயினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பஞ்சாட்சரகுருக்கள், விநாயகமூர்த்தி குருக்கள் (P.V.M குருக்கள்- மானிப்பாய்), சிவாஜினி, அமுதினி (கனடா), சற்குணநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜானந்த குருக்கள், மதிமுககுருக்கள், வாமநேசன்ஐயா, ஆதித்தியன், ஆரூரன் (கனடா), வினோதினி, வித்தியா, யோகினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை நாளை(14.05.2014) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

P.V.M குருக்கள், (மானிப்பாய்ஐயா)
மஞ்சத்தடி, மானிப்பாய்.
T.P:077 711 1482

தகவல்:
குடும்பத்தினர். (48021)(5.6.3)


## பொலிஸாரைத் தாக்கிய சந்தேக நபர் கைது

கொழும்பு,மே 13
பாணந்துறை,பிங்வத்த பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைப் போத்தலால் தாக்கிக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாணந்துறை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை காலை குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.
மதுபோதையில் இருந்த இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலைத் தடுக்கச் சென்ற பொலிஸ் குழுவில் இருந்த ஒருவர் மீதே நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)


## வீடு வாடகைக்கு உண்டு

இல.4, சந்தனமாதா கோயில் லேன், பாண்டியன் தாழ்வில் (ஜீவா வெதுப்பகத்திற்கு அருகில்) 4 அறைகள் (பாதுகாப்பான முறையில் அமைக்கப் பட்ட ஒரு பெரிய கோல், வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள், காரியாலயங்கள் அமைப்பதற்கு உகந்தது)
தொடர்பு : 077 845 4715, 077 257 1253 (48018)(7.6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு : 12.08.1928 உதிர்வு : 13.04.2014



அமரர் அன்னை
திருமதி
**சிவாம்பிகை தியாகராஜா**

பத்து மாதம் சுமந்து பகலிரவாய் விழித்திருந்து
எம்மையெல்லாம் பெற்று வளர்த்து
தலைநிமிர்ந்து வாழவைத்த தெய்வமே!
உம்மை நினைக்க நினைக்க கண்களெல்லாம்
நீர் சொரிந்து குளமாக மாறுகிறதே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை மன்றாடுகின்றோம்.

இன்று (13.05.2014) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி அருகில்,
கந்தரோடை, சுன்னாகம். (48019)(10.6.3)
குடும்பத்தினர்.



திருகோணமலை, கந்தளாய் பகுதியில் உள்ள கித்துல்லுத்த கிராமத்தில் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த சோலர் சக்தி மூலம் இயங்கும் மின்சார வேலி சுமார் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயால் திறந்து வைக்கப்பட்டது. (ச-40)

## முழந்தாளிட வைத்தவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறை

**பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு மூன்று லட்சம் ரூபா நட்ட ஈட்டை வழங்க உத்தரவு.**

கொழும்பு.மே 13

நவகத்தேகம தேசிய பாடசாலையில் ஒழுக்கத்துக்குப் பொறுப்பான துசிதா ஹேரத் என்ற ஆசிரியையை முழந்தாளிட வைத்த வடமேல் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத் குமாரவுக்கு ஏழு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டுவருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை நேற்று திங்கட்கிழமை விதித்தது நீதிமன்று.

புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோவே இவ்வாறு தண்டனை விதித்துள்ளார்.

சந்தேக நபரைக் குற்றவாளியாக இனம் கண்ட நீதிபதி, பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு மூன்று லட்சம் ரூபா நட்ட ஈடு செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழ் மொழியையும் உள்ளடக்க வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ உத்தரவு

கொழும்பு.மே 13

பெயர்ப் பலகையில் தமிழ் மொழியும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உத்தரவிட்டுள்ளார்.



வாசுதேவ நாணயக்கார

பொரளை, பத்தரமுல்ல ஆகிய பிரதேசங்களில் பாதை திருத்த வேலைகள் தொடர்பிலான பெயர்ப் பலகைகள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் மாத்திரமே எழுதப்பட்டுள்ளன.

இவ்வாறான பெயர்ப் பலகைகளில் மூன்று மொழிகளிலும் விவரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வீதிகள், பாலங்கள் திருத்தப்படும் போது அது குறித்து அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது.

எனினும், இந்த அறிவிப்பு அனைத்து தரப்பினராலும் வாசித்து விளங்கப்படத்தக்கதாக அமைய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## 'சிகரெட்' பெட்டிகளில் எச்சரிக்கைக்கு அனுமதி

கொழும்பு.மே 13

சிகரெட் பெட்டிகளில் 50 தொடக்கம் 60 வீதமான எச்சரிக்கை படங்களை பிரசுரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் சுகாதார அமைச்சுக்கு நேற்று திங்கட்கிழமை அனுமதியளித்துள்ளது.

புகைத்தலால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

சிகரெட் பெட்டிகளில் நூற்றுக்கு 80 சதவீதம் எச்சரிக்கை படங்கள் பிரசுரிக்கப்படவேண்டும் என்று சுகாதார அமைச்சு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, லங்கா புகைபொருள் நிறுவனம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல்செய்திருந்தது.

இந்த மனுமீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான அனில் குணரத்ன மற்றும் மாலினி குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது. (ச)

## ரூ.7,50,000 கொள்ளை



கோப்புப்படம்

கொழும்பு.மே 13

அங்குனுகொலபெலஸ்ஸ, அளுத்வெவ பகுதி எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் மகன் வீட்டுக்கு பணத்தை எடுத்துச் செல்லும் வழியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கொள்ளை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் வீட்டுக்கு முன் காரை நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே சென்றபோது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காருக்குள் வைக்கப்பட்டிருந்த அந்தப் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கொள்ளையர்களின் தாக்குதலுக்கு உள்ளான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் மகன் அங்குனுகொல பெலஸ்ஸ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இந்தமுறை வாக்காளர் இடாப்பு திருத்தப் பணி 16 இல் ஆரம்பம்

### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு.மே 13

வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் வாக்காளர் இடாப்பு திருத்தம் டிசெம்பர் 31 ஆம் திகதியே நிறைவு செய்யப்படுகின்ற போதும் இந்த முறை இரண்டு மாதங்களுக்கு முன்னரே அதனை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடம் வாக்காளர் இடாப்பு திருத்தம் 5 மாதங்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஒக்ரோபர் 31ஆம் திகதி அப்பணி நிறைவு செய்யப்படவுள்ளது.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் களத்தில் பேசப்பட்டு வரும் நிலையில் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அரசுக்குள் பேச்சு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## அமைச்சர் விமல் வீரவன்சவுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு



மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு.மே 13

கடந்த சில தினங்களாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவை தொலைபேசியில் தொடர்பு கொள்ளத் தாம் முயற்சித்த போதிலும் தமது அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அநுராதபுரம் செல்லும் வழியில் தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்கவிடம் இவ்வாறு தெரிவித்தார்.

உங்கள் தலைவர் எங்கு இருக்கிறார்? மூன்று நாள்களாக நான் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லையே என்று ஜனாதிபதி வீரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டுள்ளார். (ச)

## கடற்புலிகளின் போர்ப் படகுகளை பார்வையிட்டார் மிச்சேல் நூனன்



படகுகளைப் பார்வையிட்டார் ஆஸி. எல்லைப் பாதுகாப்புப் படையின் தளபதி

கொழும்பு.மே 13

ஆஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்பு படையின் தளபதி, றியர் அட்மிரல் மிச்சேல் நூனன் கடந்த வாரம் இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் படகுகளில் அகதிகள் செல்வதைத் தடுப்பது தொடர்பாக, இலங்கைக்கு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இலங்கை வந்த அவர், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் பயன்படுத்தப்பட்ட படகுகளையும் பார்வையிட்டுள்ளார்.

திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்குச் சென்ற றியர் அட்மிரல் மிச்சேலர் நூனன், திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், கடற்படைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல் படகுகளையும், போர்ப் படகுகளையும் பார்வையிட்டுள்ளார். திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்குப் பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு பாதுகாப்பு அதிகாரிகள், கடற்புலிகளால் பயன்படுத்தப்பட்ட படகுகளைத் தவறாமல் பார்வையிட்டு வருகின்றனர்.

ஏற்கெனவே சீன பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட பலரும் அவற்றைப் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆவணங்களை அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13
வடக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக் களங்கள் மற்றும் அமைச்சுகளில் 2013 ஆம் ஆண்டில் திறந்த போட் டிப் பரீட்சை மூலம் ஆட் சேர்ப்புச் செய்யப்பட்ட முகாமைத்துவ உதவி யாளர்கள் மற் றும் 2014 ஆம் ஆண்டில் சாரதி சேவைக்கு ஆட்சேர்ப் புச் செய்யப்பட்டவர் களின் கோவைகளைப் பூரணப்படுத்தும் முகமாக தேவையான ஆவணங்களை எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பிர தம செயலாளர் வடக்கு மாகா ணத்திலுள்ள அரச திணைக் களங்கள் மற்றும் அமைச்சுக் களின் திணைக்களத் தலை வர்கள், செயலாளர்கள் ஆகி யோரைக் கேட்டுள்ளார்.

(க-288)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாண மாவட்டம், கரவெட்டி, வதிரி குறிச்சியிறை கன்பொல்லை வீதியில் உள்ள ஒன்றரை (1 ½) பரப்பு காணியும், வீடும் விற் பனைக்கு உண்டு. (சயன் சென்ரர் கல்வி நிலையத்துக்கு அண்மையில்).

(48031) தொடர்புகளுக்கு: 0776016105

**விற்பனைக்கு**

ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :-
0774504620, 0778177012

(48029)

**பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்**




சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நூறாவது ஆண்டு காலப்பகுதியில் (2016/2017) சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநராக பதவி வகிக்க 2ஆவது உப ஆளுநராக பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள

லயன் டாக்டர் **வி. தியாகராசா** MJF-JP

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். எமது கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் உறுப் பினராகி பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு கடந்த (10.15.2014) சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்காக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பெரும் பான்மை ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டதற்கும், லயன்ஸ் கழக நூற்றாண்டு காலப்பகுதியில் நாட்டின் நலன் கருதி சிறந்த சேவைகளை வழங்கி பெருமை சேர்க்கவும் தாய்க் கழகமான நாம் பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.**

(C 7689)(10)

**இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும்**
**இயல், இசை, நாடக விழா - 2014**

**63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**




தலைவர்:
செந்தமிழ்ச்சொல்லருவி
**ச. லலீசன்**

**இன்று (13.05.2014)**
**முதலாம் நாள்**

பிரதம விருந்தினர்
**திரு. சீ.வி.கே. சிவஞானம்**
(அவைத்தலைவர் வடமாகாணம்)

★ நாச்சிமார் கோயிலடி "இராஜேஸ்வரி" குழுவினர் வழங்கும் மங்கல இசை

நாதஸ்வரம்
திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
திருமதி நையல்நாயகி சுப்பிரமணியம்

தவில்
திருமதி புஸ்பராணி திருச்செல்வம்
திருமதி செல்வநாயகி உ தயகுமார்

★ மங்கல விளக்கேற்றல்
★ தேவாரம் : செல்வன் வசந்தகுமார் கஜானன்
★ ஆசியுரை : ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் [சின்மயா மிஷன்-யாழ்ப்பாணம்]
★ வாழ்த்துரை : புலவர் முத்து இராசரத்தினம்
★ சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவச் சிறுவர் இல்ல மாணவிகள்" வழங்கும்

வரவேற்பு நடனம்

நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரவீந்திரன் — பாட்டு : திருமதி பா. சியாமளா
மிருதங்கம் : திரு. K.சிவகுமார்

'யோகர் சுவாமி நற்சிந்தனை' இசைப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதற் பரிசு பெற்ற **இசை அரங்கம்**

பாட்டு : செல்வி பவனுஜா தெய்வேந்திரன் — மிருதங்கம் : திரு. கந்தசாமி நந்தகுமார்
வயலின் : திரு. அம்பலவாணர் ஜெயராமன் — கடம் : திரு.கு. ரவிசங்கர்
முகர்சிங் : திரு.பொ.ஜெயகாந்

★ நா.மதியழகன் குழுவினர் வழங்கும் [வில்லிசைப் புலவர் சின்னமணியின் மாணவர்கள்] "இசையும் மனிதனும்" வில்லிசை
★ "ஏழிசை" மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும் நாட்டிய அர்ப்பணம்
நட்டுவாங்கம் : திருமதி பாலினி கண்ணதாஸ் — வயலின் : திரு. அ. ஜெயராமன்
பாட்டு : திரு. தவநாதன் றொபேட் — மிருதங்கம் : திரு. G.கண்ணதாஸ்
★ கலைஞர்கள் கௌரவிப்பு
★ பிரதம விருந்தினர் உரை
★ நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் "பூதத்தம்பி" இசை நாடகம்
★ நன்றியுரை

(48022)(10)

**அனுசரணை: அன்பொளி கல்வியகம்**

# ஒளிராத நிலையில் வீதி விளக்குகள்; அறிவித்தால் உடன் மாற்றப்படும்

## சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் தெரிவிப்பு

தென்மராட்சி, மே 13
சாவகச்சேரி நகர சபை எல் லைக்குள் பொருத் தப்பட்டுள்ள வீதி விளக்குகள் ஒளிராமல் பழு தடைந்து காணப்படின் அது குறித்து உடனடி யாக பொதுமக்கள் நகர சபைக்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிக்கப்பட்டின் பழுதடைந்த வீதி விளக்குக்குப் பதிலாக உடனுக்குடன் புதிய விளக்குகள் பொருத்தப் படும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய் யப்பட் டது.

சபையால் பொருத்தப்பட் டுள்ள 456 வீதி விளக் குகளில் சில பழுதடைந்து ஒளிர்வதில்லை என்று பொது மக்கள் முறைப் பாடு செய்துள்ளனர் என்று உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விளக்க மளித்த தலைவர், மக்களின் பயன்பாட் டுக்கென பொருத்தப் பட் டுள்ள வீதி விளக் குகள் தொடர்பாகப் பொது மக்கள், எந்த வொரு முறைப்பா டும் சபைக் குத் தெரி விப்பதில்லை.

சபை உறுப்பினர் கள், உத்தி யோகத் தர்கள் இதனை அவ தானித்து சபைக்கு தெரிவிப் பதை அடுத்தே அவை சீர் செய்யப்படுகிறது.

சில இடங்களில் வீதி விளக் குகள் இரவு, பகலாக ஒளிர்ந்த வண்ணம் உள் ளன. நகர சபையின் செயற்பாடுகளுக்கு மக்களின் பங்களிப்பு அவசிய மாகின்றது. இந்த நிலையில் மக் கள் தமது பகுதி சந்தி யில், வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குத் தொடர் பாக நகர சபைக்கு அறிவிப்பின் உடன் நட வடிக்கை எடுக்கப் படும்.

மேலும், மக்கள் பங் களிப்புடன் வீதி விளக்குப் பொருத் திய பலர் இரவு வேளைகளில் 9 மணியுடன் அதனை ஒளிர விடாமல் அணைத்து விடுவ தால் சிர மங்களை எதிர்நோக்குவதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓர் ஒழுங்கையில், பல இடங் களில் மக்கள் பங்களிப்புட னான வீதி விளக்குப் பொருத்த முடியாது என்பதால், இரவு அதனை அணைப் பவர்கள், வேறொருவருக்கு மாற்றிக் கொடுப் பது நல்லது என்று நினைக்கிறேன்.

பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிப்பதற்கு வசதியாக அடுத்த வாரம் மின் விளக் குகள் பொருத்தப்பட்டுள்ள மின் கம்பங்களுக்கும் அதில் பொருத்தப்படும் விளக்கு களுக்கும் இலக் கமிடும் பணி கள் இடம்பெறவுள்ளன. சபை யின் உறுப்பினர்கள் தமது வட்டாரத்தில் உள்ள வீதி விளக்குகள் தொடர்பான பிரச் சினைகளை அறிந்து ஒவ்வொரு கூட்டத்திலும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரி வித்தார்.

(வ-9)

**விசேட அறிவித்தல்**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குச் சொந்தமான 179 ஆம் இலக்க பி.ச -01 பற்றுச்சீட்டு புத்தகம் (8901-8950) தொலைந்து விட்டது. இப் பற்றுச்சீட்டு புத்தகத்தில் 8939 தொடக்கம் 8950 வரையான 12 பற்றுச் சீட்டுகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்வது இரத்துச் செய்யப்பட் டுள்ளதுடன் 12 பற்றுச்சீட்டுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்க ளுக்கு எமது சபை பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் அறியத் தருகின் றேன்.

சி.சிவப்பிரகாசம்
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(சி/7690) (10)

**பதவி வெற்றிடங்கள்**

எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங் களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன

1. Trainee English teachers (Female)
2. Receptionist (Female)
3. Marketing officers (Trainees)
4. Project officers (Male / Female)

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு:

**LCBT City Campus**
120/6, Palaly Road, Jaffna.
077 024 9071

(48030) (10)

**31ஆம் நாள் நினைவலைகள்**

திருமதி
**ஜெயலக்சுமி தவலிங்கம்**



யூனியன் கல்லூரியில் 15 ஆண்டு கால சேவைதனில் எம் சகோதரியாய், சிநேகிதி யாய் உறவாடி மகிழ்ந்து மாணவர்களுக்கு குருவாய், அன்னையாய் அறிவுரை வழங்கி யது போதுமென்று நினைத்து ஆண்டவன் அடி சென்றீரோ.

உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில் 03.04.1967 — ஆண்டவன் திருவடியில் 13.04.2014

இயற்றத்தால் பிரிவில்
யூனியன் கல்லூரி ஆசிரிய சகோதரர்கள்

(48023)(7.6.3)

**துயர் பகிர்தல்**

**நாராணபிள்ளை மயில்வாகனம்**



(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

யாழ். மானிப்பாய் வீதியைச் சேர்ந் தவரும், எமது கல்லூரியின் பழைய மாணவ மன்ற முன்னாள் செயலர், பொருளாளராக அருஞ்சேவையாற்றிய வரும், கல்லூரியின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து அரும்பாடு பட்டவரின் மறைவையொட்டி துயர் அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் மன்றம்,
வைத்தீஸ்வரா கல்லூரி.

(48027) (10)

## விவசாய ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளலாம்

"விவசாயிகளுக்கான ஏப்ரல் மாத ஓய்வூ தியக் கொடுப்பனவு கள் தபால் அலுவல கங்கள் ஊடாக விவ சாய ஓய்வூதியர் களுக்கு வழங்கப் பட்டு வருகின்றன. விவசாய ஓய்வூதி யம் பெறுவோர் தமது கொடுப்பனவுகளை தாம் வழமையாகப் பெற்றுக் கொள்ளும் தபால் அலுவலகங் களில் பெற்றுக் கொள் ளலாம்" என்று கமத் தொழில் காப்புறுதிச் சபையின் யாழ்ப்பா ணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் உத விப் பணிப்பாளர் எஸ். கிரிதரன் அறி வித்துள்ளார். (வ-11)

## கனடாவில் இலங்கைப் பெண் நாடு கடத்தப்படும் அபாயத்தில்

இலங்கைக் கடவுச் சீட்டை காணாமற் செய்தமைக்காக, கனடாவில் கடந்த 14 வருடங்களாக வசித்து வந்த பெண் ஒருவர் நாடுகடத்தப் படவுள்ளார்.

தமது 15 ஆவது வயதில் கனடாவுக்கு அகதியாகச் சென்ற குறித்த பெண், அங்கு கனேடியர் ஒருவரைத் திருமணம் செய்து, இரண்டு பிள்ளைகளையும் பெற்றுள்ளார். எனினும் அவருக்கு கனேடிய குடியுரிமையைப் பெறுவதற்கு இலங்கையில் அவருக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு தேவைப் பட்டது. ஆனால்அவர்அதனைகனேடியகுடிவரவுத்திணைக்களத்தில் அல்லது கனடாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் தவற விட்டுள்ளார். இந்தநிலையில் குறித்த பெண் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளார்.

கனடாவில் தமது குடும்பம் வசிக்கின்ற நிலையில் அவர் மாத்திரம் இலங்கைக்கு நாடு கடத்தப்படுகின்றமை, கனேடிய அரசின் கொடூரமான செயல் என்று ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (வ)



லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடாளுமன்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். அதன்போது உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ், சபாநாயகரை வரவேற்றதுடன் ஊழியர்களையும் அறிமுகம் செய்து வைத்தார். பொதுநலவாயத்தின் தலைவர் பதவி இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானி கராலயம், அதுகுறித்த பணிகள் தொடர்பில் முக்கிய பங்காற்றி வருகின்றது. அந்த பணிகள் மற்றும் தூதரக சேவையில் மேற்கொண்டு வரும் சிறப்பான பணிகளுக்காக சபாநாயகர், உயர்ஸ்தானிகர் மற்றும் ஏனைய தூதரக ஊழியர்களைப் பாராட்டினார் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. (ற)

## மேலும் 5 மீனவர் கைது

சென்னை, மே 13

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மேலும் ஐந்து இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காக்கினாடா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அவர்களிடம் இருந்து ஒரு மீன்பிடிப் படகும் மீட்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை அவர்கள் கைது செய்யப்பட்டதாக கடலோரக் காவல் படை உதவி பொறுப்பாளர் ஜெகநாத ராவ் தெரிவித்துள்ளார்.

# படகுகளில் வருவோரைத் தடுக்க புதிய எல்லைப் பாதுகாப்பு நிலையம்

## ஆஸ்திரேலியா நிறுவவுள்ளது

ஆஸ்திரேலியாவுக்கு படகுகளில் வரும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைத் தடுத்து நிறுத்தும் முகமாக சுங்க மற்றும் குடிவரவுத் திணைக்களங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற் திறன்மிக்கபுதியமுன்னரங்கு எல்லைப் பாதுகாப்பு முகவர் நிலையம் ஒன்றை நிறுவவுள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இந்தப் புதிய எல்லைப் பாதுகாப்புமுகவர்நிலையம்உயர் அதிகாரத்துவம் பொருந்திய சிவிலிய ஆணையாளர் தலைமையில் செயற்படும் எனத் தெரிவித்த ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிஸன், அந்த ஆணையாளர் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் கையாளப்படும் மாதிரிகளின் அடிப்படையில் படகுகளில் வரும் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் குறித்து தனக்கு நேரடியாக அறிக்கையிடவுள்ளதாகத் தெரிவித் தார்.

ஆஸ்திரேலியாவானது அங்கீகரிக்கப்படாத படகுகளில் வரும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிரான தனது கடும்போக்கு நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே இந்த புதிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிலையத்தை நிறுவநடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார். எதிர்வரும் வாரம் தனது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை பழைமைவாத அரசாங்கம் முன்வைக்கவுள்ளதையொட்டி ஸ்கொட் மொரி ஸன் தொடர்ந்து உரையாற்றுகையில், "படகுகளில் வருபவர்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் 2.5 பில்லியன் ஆஸ்திரே லிய டொலரைச் சேமிக்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

அத்துடன் ஏற்கெனவே அறி விக்கப்பட்ட 4 புகலிடக் கோரிக் கையாளர்களுக்கான தடுப்பு நிலையங்களுடன் மேலும் 6 தடுப்பு நிலையங்களைமூடக் கூடியதாக இருக் கும் என்று அவர் கூறினார்.


ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு கொள்கையின் கீழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்தோனேசியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர். அந்த நாட்டிலிருந்தே பெருமளவான புகலிடக் கோரிக்கையாளர்கள் படகுகளில் ஆஸ்திரேலியாவை வந்தடைவது வழமையாகவுள்ளது.

புதிய எல்லை முகவர் நிலை யத்தை ஸ்தாபிக்கின்றமை எமது எல்லைகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதாக அமை யும் என்று மொரிஸன் மேலும் தெரிவித்தார். (வ)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள
வீடு ஒன்றில் பணிபுரிய
பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0766973470


## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி அரசடி,
சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில்
உதவியாளராக தொண்டாற்றிவந்த

**சிவக்கொழுந்து**
**கனகசபாபதி**

அவர்கள் இறைபதமெய்திய செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிவகாமி சுந்தரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அரசடி,*
*திருநெல்வேலி.*

**பரிபாலனசபை,**
**சிவகாமி சுந்தரி அம்மன் ஆலயம்.**

## 'யானையை மறைக்கும் இலங்கை' நூல் அறிமுகக் கூட்டம்



சென்னை, மே.13

பேராசிரியர். இராமு மணிவண்ணன் எழுதிய 'யானையை மறைக்கும் இலங்கை' என்ற நூலின் அறிமுகக் கூட்டமும், முள்ளிவாய்க்கால் பேரழிவின் ஐந்தாம் ஆண்டு நினைவு கூட்டமும் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு பெங்களூர் தமிழ் சங்கத்தில் போர்க்குற்றம் இனப்படு கொலைக்கு எதிரான மன்றத்தின் கர்நாடகப் பிரிவின் சார்பாக நடத் தப்பட் டது. யானையை மறைக்கும் இலங்கை நூலை சண்முகம் வெளி யிட மனிதஉரிமைச்செயற்பாட்டாளரான ரமேஷ் பெற்றுக் கொண்டார்.


**புவியியல் கருத்தரங்கு**

BA, பேராதனை மாணவர்களுக்கு
காலம்: 14,15,17,18/5/2014
(9.00 - 4.00 மணிவரை)
இடம்: ரூபன், பஸ்நிலையம் அருகாமை,
அச்சுவேலி தெற்கு.

**By: K. கிரிதரன் - MA**

(அனைத்துப் பகுதிகளும் பூர்த்திசெய்யப்படும்)
தொடர்பு: 0770339365


## மரண அறிவித்தல்



### சிங்கராசா அமலதாஸ் (ராசா)

குடாரப்பைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி கிழக்கு முடக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா அமலதாஸ் நேற்று (12.05.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராசா- சிசிலியம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிமியோன் - திரேசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், அரியமலரின் அன்பு கணவரும் அலன்ரா, அலெக்ஸ், அமல் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மேரி மெக்டலின்,ஜெயசீலன், றூபி, ஞானசீலன், கிறேஸ், அல்வின், மெலானி, பேபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொன்ராசா, பேபிராசா, சுதாகரன், சந்திரகுமார், குமார், சகாயநாயகி, றெக்சலா, பிறின்சியா ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (13.05.2014) காலை மு.ப 10.45 மணிக்கு கரவை தூய அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கீரிப்பல்லிசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியடி கிழக்கு,
முடக்காடு, கரவெட்டி

(c\14258)

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் - திருநாவுக்கரசு

வல்வெட்டியை பிறப்பிடமாகவும், அறிவாலயம் இமையாணனை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் - திருநாவுக்கரசு (12.05.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜானகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரன் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜனகன் (சட்டத்தரணி - கொழும்பு) திலீபன், காயத்திரி (ஆசிரியை - கிளி/ பிரமந்தனாறு ம.வி, துவாரகா ஆகியோரின் தந்தையும் தாமரை வருணி, ரதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.05.2014) இன்று மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'அறிவாலயம்'
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி

தகவல்:-
குடும்பத்தினர்
(c\14257) 0777881561, 0776668912

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ்.பல்கலைக்

கழக மாணவர் பேரவை.

இதுதொடர்பாக குறித்த மாணவர் பேரவை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"இந்த மாதம் 12 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை மூடுவது என அரசு முடிவெடுத்துள்ளது. அது குறித்து அரச அதிகாரிகளிடமும், பாதுகாப்பு பிரிவினிடமும் கேட்டபோது, 'இந்த முடிவு பல்கலைக்கழக நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட சுயாதீன முடிவாகும்' என்று கூறப்பட்டது. ஆயினும் அது பாதுகாப்பு பிரிவினரால் எடுக்கப்பட்ட முடிவேயாகும் என்பது தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் பல்கலைக் கழகம் மூடப்பட்டது முதற் தடவையல்ல. அத்துடன் இதற்கு முன்னரும் அவர்களின் அவசியமான வேளைகளில் பல்கலைக் கழகங்கள் மூடப்படுவதற்கு பாதுகாப்பு பிரிவினரின் தலையீடு இருந்தது என்பதும் எமக்கு விளங்காத இரகசியம் அல்ல.

இந்த முடிவிற்கு காரணமான இனவாத சக்தியானது, உயிர் கொல்லும் போர் நிறைவுபெற்று 5 வருட பூர்த்தியாகும் வைகாசி 18 ஆம் திகதியன்று தமிழ் மாணவர்கள் போரில் காவு கொடுத்த தம் உறவினர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்வினை தடுப்பதற்கேயாகும். இது முழுவதுமாக இனவாதத்தினை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுப் பிழை என்பதோடு மனிதாபிமானமுள்ள பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தொன்றாகும். ஒருபுறம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் காரணமாகவும் அத்துடன் மறுபுறம் மீண்டும் மீண்டும் இனவாத அடிப்படையில் சிங்கள, தமிழ் மக்களிடையில் எதிரிகளாக மாற்றும் காரணத்தினாலும் ஆகும்.

போர் என்பதை எந்த அடிப்படையில் பார்த்தாலும் அது போரேயாகும். அது பெறுமதியான மனித வாழ்வினை பல்லாயிரக்கணக்காக அழித்தொழிப்பதாகும். இந்த உயிர்கொல்லும் போருக்கு பொறுப்பேற்க வேண்டியது இறுதியில் ஆயுதமேந்தி ஒருவரையொருவர் கொன்ற அப்பாவி மக்களல்ல. போருக்கு வழி வகுத்த இனவாத ஆகம வாத மற்றும் தம் பலம் கொண்டு பலாத்காரமாக செயற்படும் முதலாளித்துவ நிர்வாகிகளேயாகும். போரின் பெரும் குழிக்குள் வீழ்ந்த சகல தமிழ் மற்றும் சிங்கள மக்களும் தள்ளப்பட்டது இந்த நிர்வாகிகளாலும் அவர்களது நிர்வகிக்கும் முறைமையினாலுமாகும். அதனால் தவறு புரிந்தவர்கள் மக்களல்ல, அவர்களை அவ்விடத்தில் தள்ளிவிட்ட நிர்வாகிகளேயாகும். அதனால் கொல்லப்பட்ட அனைத்து உயிர்களும் பெறுமதியானவை. அவர்களுக்காக அழுவதற்கும் வருந்துவதற்கும் எந்தவொரு இதயத்திற்கும் இவ்வுலகில் உரிமையுள்ளதென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் அதற்காக அழுவதற்கும், வேதனைப் படுவதற்கும் அவர்களை நினைவு கூருவதற்கும் அந்த எல்லோருக்கும் உரிமை உண்டு. அந்த உரிமை சிங்கள மக்களைப்போல தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது.

போர் இரு பிரிவினருக்கிடையில் அல்லது பற்பல பிரிவினருக்கிடையில் நிகழும். அந்த அனைத்து பிரிவுகளிலும் தமது பக்கம் நின்று கொலை செய்பவன் வீரனென்றும் மற்றவன் துரோகியென்றும் கொள்ளப்படுகின்றது. சிங்கள மக்களுக்கு கொலை செய்யும் ஒரு தமிழ் போராளி துரோகியாகும் வேளை, சிங்கள போராளி வீரனாகின்றான். தமிழர்களுக்கு தமிழ் போராளி வீரனாகும் வேளை சிங்கள போராளி துரோகியாகின்றான். உண்மையான துரோகிகள் இவர்கள் யாருமல்ல, அனைத்து மக்களிடமும் கொள்ளையடித்து உண்ணும், தன்னுடன் உள்ளவர்களுக்காக இனவாத, ஆகமவாத அத்துடன் எந்தவொரு வர்க்கவாதிகளும் பொதுமக்களுக்கு உரிமையானவற்றை கொள்ளையடித்து அவர்களைப் போருக்குள் தள்ளுகின்ற அவர்களே ஆகும். போருக்குள் தள்ளப்படுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் புரிந்துகொள்ளாமல் இருந்தால் நிர்வாகிகள் செயற்படும் இந் நிலைமைகள் மாறப்போவதில்லை. இந் நிலைமை மாற வேண்டின் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு எல்லோரும் சமமாக ஒன்றாக செயற்பட வேண்டும். அதனால் நாம் மனிதாபிமானமாக செயற்படுகின்றோமானால் நாம் அமைதியாக மனப்பூர்வமாக வைகாசி 18 அன்று சிங்கள மக்களுக்கு தம் உறவுகளை நினைவு கூருவதற்குள்ள உரிமை தமிழ் மக்களுக்கும் உள்ள தென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் கிழக்கு பல்கலைக் கழகமானது தற்பொழுது கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. கிழக்கு பல்கலைக்கழகத்தினுள் தொடர்ச்சியாக இனவாத அடிப்படையிலான சிந்தனைகளை செயற்பாடுகளை மாணவர்களிடையே பரவச்செய்து வேறுபடுத்துவதற்கான வேலைப்பாடுகளை செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் அரசுடன் இணைந்து இம்முடிவை எடுத்துள்ளது.

மாணவர்களை இனவாத அடிப்படையில் வெவ்வேறாக பிரிப்பதற்கு முயற்சித்த போதிலும் மாணவர்கள் அதற்கு பதிலாக 'விடுதி வசதி பெற்றுக் கொள்ளல்' போன்ற உண்மையான தேவைகளுக்காக போராட்டம் செய்தமை அதற்கு காரணமாகும். இதனால் மாணவர்கள் மீது அடக்குமுறையை பிரயோகிப்பதற்காக கிழக்கு பல்கலைக்கழகமானது மூடப்பட்டது. அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமான நாங்கள் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக பலம்சேர்க்க கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு எமது சகோதரத்துவத்தினையும் பங்களிப்பினையும் வழங்குகின்றோம்.

அதனால் அரசு எடுக்கின்ற முட்டாள்தனமனான முடிவுகளுக்கு எதிராக நாம் ஒரு சமூகமாக குரலெழுப்ப வேண்டும். மறுபுறம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நிமித்தம் இந்த அசாதாரண நிலைமைக்கு எதிராக நாம் போராடுவோம், கைகோர்ப்போம் என்று வலியுறுத்திக் கூறுகின்றோம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

### பயன்

பினர்களும், 10 அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதே போன்று இந்திய தரப்பில் தமிழக மீனவ சங்கத்தின் 17 பிரதிநிதிகளும் 9 அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இப் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு மீனவர்களினதும் நலன் கருதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தில் இலங்கைக் கடற் பரப்பினுள் இந்திய மீனவர்கள் தொழிலில் ஈடுபட முடியாது என்றும் றோலர், இழுவை வலைகள் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என இந்திய தரப்பு மீனவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துவிட்டனர். இழுவலை பயன்படுத்துவதை நிறுத்தினால் தங்களின் வாழ் வாதாரம் பாதிக்கப்படும் என் றும் இந்தியாவில் இழுவலை தடை செய்யப்படவில்லை என்றும் தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற பேச்சில் பெப்ரவரி 10 முதல் மார்ச் 10 வரை இந்திய மீனவர்கள் இழுவை வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதை நிறுத்த வேண்டும் என்று இலங்கை மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் அதன்படி இந்திய மீனவர்கள் நடந்து கொள்ளாதது ஏன் என்று இலங்கை சார்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அத்தோடு இந்திய மீனவர்கள் றோலரைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதை நிறுத்துவதற்கு மூன்று வருட கால அவகாசம் வழங்குமாறும் அவர்கள் இலங்கை தரப்பிடம் கோரிக்கை விடுத்தனர். எனினும் இந்தக் கோரிக்கையை இலங்கை மீனவ பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ள வில்லை.

இதனால் சுமார் 11 மணித்தியாலயங்கள் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தை எவ்விதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான முதற் கட்ட பேச்சு சென்னையில் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெற்று இருந்தது.

இதன்போதும், தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. இரண்டாம் கட்டப் பேச்சை மார்ச் மாதம் 13 ஆம் திகதி நடத்துவது என அறிவிக்கப்பட்டிருந்த போதும் மீனவர் கைது தொடர்பான நெருக்கடிகளால் அது 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்தால் மட்டுமே பேச்சில் கலந்து கொள்ள முடியும் என தமிழக அரசு அறிவித்த நிலையில் பிற்போடப்பட்ட திகதியிலும் பேச்சு நடைபெறவில்லை.

இந்த நிலையில் இந்திய மத்திய அரசின் கோரிக்கைக்கு இணங்க இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு இரண்டாம் கட்ட பேச்சை நடத்துவதற்கு இணங்கியிருந்தது. இதன்படி நேற்று அந்தப் பேச்சு கொழும்பில் நடைபெற்றது. எனினும் இந்தப் பேச்சின் போதும் இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை. (ஜ-5-400)

### கஞ்சாவுடன்

விட்டுள்ளது.

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரம் கிராம அலுவலர் பிரிவு 14'ஐச் சேர்ந்த ஜீவானந்த சிவம் முகுந்தினி என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார். ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்றுமுன்தினம் அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்ததோடு கஞ்சாவையும் மீட்டனர்.

அது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ற-4)

### இலங்கை வரும்

விடுத்த வேண்டுகோளுக்கு அமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு வரவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

பாப்பரசரின் இலங்கைப் பயணத்தின்போது அவர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அவர் சந்திக்கவுள்ளார் என்று தெரியவருகின்றது. அத்துடன் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களையும் அவர் சந்திக்கும் நிகழ்ச்சி நிரலும் அவரது பயணத்தில் உள்ளடக்கப்படும் என்றும் தெரிகின்றது.

அத்துடன் அவர் மடுத் தேவாலயத்துக்கும் செல்லவுள்ளார்.

அதேவேளை, வத்திக்கான் சென்ற இலங்கைப் பேராயர் குழு, அங்கு பாப்பரசரைச் சந்தித்து, தற்போது நாடு திரும்பியுள்ள நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைத் தீவில் உள்நாட்டு போர் 25க்கும் மேற்பட்ட ஆண்டுகளாகத் தொடர்ந்த நிலையில் அது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பேராயர்கள் பங்காற்ற வேண்டும் என்று பாப்பரசர் வலியுறுத்தியிருந்த நிலையிலேயே ஜனாதிபதியின் இந்த அவசர சந்திப்பு நடைபெற்றுள்ளது. (ற-5)

### கட்டுத் துவக்கு

கிளிநொச்சி, சுண்டிக்குளம் குகேனி பயிற்சி முகாமுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட சிப்பாய், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.(ற-104)

### தென்னிலங்கை

யாடினர். இதன்போதே மேற்படி விடயம் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இடம் பெறுகின்ற மனித உரிமை மீறல்கள், இராணுவ அடக்குமுறைகள், ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக வடக்கு - கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களும் தென்னிலங்கை அமைப்புக்களும் இணைந்து செயற்படுவது பற்றியும் அதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியல் ரீதியான ஒத்துழைப்பை வழங்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக இவற்றுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுப்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நாடு முழுவதும் மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், மதத் தலங்கள் தாக்கப்படுவது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மற்றும் சி.சிறீதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கெடுத்திருந்தனர். (ற-5)

### விடுதலைப்

முல்லைத்தீவின் முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம் அமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணசபையின் கடந்த பெப்ரவரி மாத அமர்வில் து.ரவிகரன் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார். அந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கில் பொது இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். மீறி நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்துபவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர் என்றும் இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் பொது இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை கடைப்பிடிக்க முற்படுபவர்களை புலனாய்வாளர்கள் என்று தங்களை இனங்காட்டிக் கொள்ளும் சிலர் அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக முற்றம் அமைக்க வேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் து.ரவிகரன் தெரிவிக்கையில், "எனது வீட்டுக்கு நான்கு பேர் வந்தனர். அவர்கள் தம்மை பயங்கரவாத தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி) இருந்து வருவதாகத் தெரிவித்தனர். அவர்களது அடையாள அட்டையைக் கோரினேன். அவர்கள் கிளிநொச்சியிலுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவிலிருந்து வந்தவர்கள் என்பதை அடையாளப்படுத்தினார்கள்.

என்னிடம் முதலாவதாக 'நீ விடுதலைப் புலியா' என்றுதான் கேட்டார்கள். நான் இல்லை வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்று பதிலளித்தேன். 'ஏன் இவ்வாறு கேட்கின்றீர்கள்?' என்று கேட்ட போது, கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்தனர். அத்துடன் எனது அடையாள அட்டை மற்றும் குடும்ப விவரங்களைப் பதிவு செய்தனர். சுமார் அரை மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்கள் வெளியேறினர்"- என்று குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நெருங்கும் நிலையில், அதனை கடைப்பிடிக்க விடாது தடுப்பதற்காக வடக்கில் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் புலனாய்வாளர்களால் முடுக்கி விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### ஆளும் கட்சியின்

முகம் மூடிய தலைக்கவசம் அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே நகரசபை உறுப்பினர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது. புதுக்கடை நீதிமன்றில் இருந்த வழக்கு தொடர்பில் திரும்பிச் செல்லும் வழியிலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தையடுத்து, பேலியகொடை பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. பிரதேச வாசிகள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரால் சாமில சந்தருவானின் சடலத்தை மீட்கக்கூடியதாக இருந்தது.

அத்துடன், சம்பவ இடத்துக்கு வந்த நகர சபை உறுப்பினரின் உறவினர்கள் கதறி அழுததால் குறித்த பிரதேசத்தில் சில நிமிடங்களுக்கு சோகம் நிலை கொண்டது. பிரதேச வாசிகளும் அவர்களைச் சூழ்ந்து கொண்டதால் அவ்வீதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டது. எனினும், பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பேலியகொடை நகரசபையில் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் நெருக்கடி ஏற்பட்டிருந்தபோது, சுட்டுக் கொல்லப்பட்ட நகரசபை உறுப்பினர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

அதேவேளை, "தனது சகோதரர் அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் இணைந்தே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வார். அவருடன் கலந்துரையாடிவிட்டே முடிவுகளை எடுப்பார்" என்று கூறியுள்ளார். சாமில சந்தருவான் அமைச்சர் மேர்வினின் விசுவாசியென்பது அதன் மூலம் நிரூபணமாகிறது.

கொலை காரர்களின் கூடாரம் என எதிரணி உறுப்பினர்களால் குற்றஞ்சாட்டப்படும் களனித் தேர்தல் தொகுதியில் இதற்கு முன்னரும், அசித்த மடவல என்ற களனிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பதும், இந்த சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளர்கள் என கூறப்படும் இருவர் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-சி)

### வலி.வடக்கு

விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மாத ஆரம்பத்தில், கீரிமலை நகுலேஸ்வரம் கிராமசேவையாளர் பிரிவில் 3 ஏக்கர் மற்றும் 183 ஏக்கர் காணியை சுவீகரிப்பது தொடர்பான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அதில் காணி உரிமையாளர்கள் இனங்காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் குறித்த காணி உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்திலேயே வசித்து வருகின்றனர். அவர்களே தமது காணி சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக நாளை புதன் கிழமை நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் கலந்துரையாடல் நடத்தவுள்ளனர். (ற-5-86)

# பல்கலைக்கழகத் தடகளப்போட்டியில் முகாமைத்துவ வணிக பீடம் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பீடங்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் முகாமைத்துவ வணிக பீடம் சம்பியனானது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் உட்பட கலைப் பீடம், சித்த மருத்துவத் துறை, சுகாதார விஞ்ஞான அலகு, மருத்துவ பீடம் பொறியியல் பீடம், விவசாய விஞ்ஞான பீடம் . முகாமைத்துவ வணிக



முகாமைத்துவ வணிகபீடத் தலைவர் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றவேளை..

பீடம், விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய துறைகளின் மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.

முதலாம் இடத்தை முகாமைத்துவ வணிக பீடமும், இரண்டாம் இடத்தை கலைப் பீடமும், மூன்றாம் இடத்தை விஞ்ஞான பீடமும் பெற்றுக் கொண்டன.

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களைப் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீடத் தலைவர் கலாநிதி ஏ.புஸ்பநாதன் வழங்கிக் கௌரவித்தார். (கு-86)

## கூடைப்பந்தாட்டம் நாளை

வலி.வடக்கு. மே 13

யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர்கள் சேவை மன்றங்களுக்கு இடையேயான மாவட்ட மட்டத்திலான ஆண்கள், பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் அணிகளை உரிய நேரத்துக்கு மைதானத்துக்குச் சமுகம் அளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு-86)

# மூன்று புதிய சாதனைகள்



சாதனைபுரிந்த தாரணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கல்



சாதனைபுரிந்த துஸ்யந்திக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கல்

வலி.வடக்கு மே 13

யாழ்.பல்கலைக்கழகப் பீடங்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் மூன்று புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

ஏற்கெனவே பெண்களினால் பதிவு செய்யப்பட்ட இந்தச் சாதனைகளை இருவர் இம்முறை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் தடகளப் போட்டிகள் நடைபெற்றன. இதன் போது ஏற்படுத்தப்பட்ட புதிய சாதனைகளின் விவரம் வருமாறு:-

பெண்களுக்கான உயரம் பாய்தலில் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் எ.சந்திரிகா 1.36 மீற்றர் உயரம் பாய்ந்து பதிவு செய்த சாதனையை 9 வருட கால இடைவெளியின் பின்னர் சி.துஷ்யந்தி 1.42 மீற்றர் உயரம் பாய்ந்து முறியடித்துப் புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

பெண்களுக்கான தட்டெறிதலில் 2002, 2003 ஆம் ஆண்டுகளில் ரி.கலைமகள் 24.29 மீற்றர் தூரம் எறிந்து பதிவு செய்த சாதனையை 14 வருடத்தின் பின்னர் 25.57 மீற்றர் தூரம் எறிந்தும், ஈட்டியெறிதலில் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் எ.நித்தியா 27.93 மீற்றர் தூரம் எறிந்து பதிவு செய்த சாதனையை 9 வருட கால இடைவெளியின் பின்னர் 31.65 மீற்றர் தூரம் எறிந்தும் புதிய இரண்டு சாதனைகளை எஸ்.தாரணி பதிவு செய்துள்ளார். (கு-86-23)

## புத்தூரில் கரப்பந்தாட்டம்

வலி.வடக்கு. மே 13

யாழ். மாவட்ட பிரதேச இளைஞர்கள் சேவை மன்றங்களுக்கு இடையேயான மாவட்ட மட்டத்திலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் அணி களை உரிய நேரத்துக்கு மைதானத்துக்குச் சமுகம் அளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு-86)

## மாகாணப் பூப்பந்தாட்டம்; 2 பிரிவிலும் வவுனியா வெற்றி

யாழ்ப்பாணம், மே 13

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபிரிவுகளிலும் வவுனியா மாவட்டம் வடமாகாணச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாண மட்டப் போட்டிகள் மன்னார் பொது விளையாட்டரங்கின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதின. மூன்று ஒற்றையர், இரண்டு இரட்டையர் ஆட்டங்களைக் கொண்ட போட்டியில் 3:1 என்ற அடிப்படையில் வவுனியா மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுகன்யாவும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்சிகாவும் மோதினர். இதில் 21:10 , 21:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுகன்யா யாழ்.மாவட்டம் சார்பாக முதலாவது வெற்றியைப்பதிவு செய்தார்.

அடுத்து இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டங்களில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜெனனி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மதுரந்தியை 21:10, 21:10 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துவாரகா, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மயூரிக்காவை 21:10, 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்று தமது அணியை முன்னிலைப்படுத்தினர்.

இதனை அடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துவாரகா - ஜெனனி ஜோடியும், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த டென்சிகா-குயின்ஸிகா ஜோடியும் மோதின. 3 செற்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலாவது செற்றை யாழ்.மாவட்ட அணி 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. இதனை அடுத்து தம்மை சுதாகரித்துக் கொண்ட வவுனியா மாவட்ட வீராங்கனைகள் பலத்த எதிர்ப்பின் மத்தியில் 21:19, 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தமதாக்கியது.

அடுத்து இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் அபாரமாக ஆடியதால் போட்டி 5 ஆம் செற் வரை சென்றது. இதில் 3:2 என்ற அடிப்படையில் வவுனியா மாவட்ட அணி சம்பியனானது.

முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்ஷானந்தன்னை எதிர்த்து விளையாடிய யாழ்.மாவட்ட அணி வீரர் துஷானந்தை கடுமையான போராட்டத்தின் பின் 18:21, 21:18, 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டார்.

அடுத்து இடம்பெற்ற மற்றைய ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த றெமிசன், வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த பிரணவனை 21:9, 21:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றி கொண்டார்.

அடுத்து இடம்பெற்ற மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கோபிநாத் யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த கனிஸ்ரனை 21:8, 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றி கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலாவது இரட்டையர் ஆட்டம் இடம்பெற்றது. இந்தச் சுற்றில் வெற்றி பெற்றால் வவுனியா மாவட்ட அணி சம்பியனாகும் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த றெமிசன், துஷானந் ஜோடி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கோவர்த்தனன், தர்ஷானந் ஜோடியை 21:17, 21:12 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டு வவுனியா மாவட்ட அணியின் சம்பியன் கனவில் தற்காலிக தடைபோட்டனர்.

இதனால் ஆட்டம் மேலும் இறுக்கமடைய வெற்றி தோல்வியைத்தீர்மானிப்பதற்காக 5 ஆவது செற் ஆட்டம் இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த கோபிநாத் - பிரணவன் ஜோடி, யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த செந்தில் குமரன், றம்மிய ராகுலன் ஜோடியை 21:11, 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு இவ்வருட மாகாணச் சம்பியனாகியது. (கு-400)

## வென்றது யாழ்.மாவட்டம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் 2 பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை ம்ன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 55:00 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மாவட்ட அணி 46:36 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (கு-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 13

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல்.விளையாட்டுக்கழகம், அராலி ஏ.எல்.இளைஞர் கழகம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.எல்.விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை கலைநகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)



# பெங்களூர் அணியில் ஒற்றுமை இல்லை

**கோஹ்லி**

பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் பெங்களூர் அணியின் தோல்விக்கு, வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்படாததே காரணம் என அணித்தலைவர் கோஹ்லி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியின் ஆட்டத்தில் பெங்களூர் பஞ்சாப் அணிகள் மோதின. முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணி 20 பந்துப்பரிமாற்றத்தில் 8 இலக்குகள் இழப்புக்கு 198 ஓட்டங்கள் குவித்தது.

அதிரடி ஆட்டக்காரர் மக்ஸ்வெல் விரைவில் ஆட்டமிழந்தாலும், மில்லர் 29 பந்துகளில் 66 ஓட்டங்களும், ஷேவாக் 30 ஓட்டங்களும் எடுத்து அணியின் ஓட்டத்தை உயர்த்தினர்.

பின்னர் விளையாடிய பெங்களூர் அணியால் 9 இலக்குகள் இழப்புக்கு 166 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதனால் பஞ்சாப் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் பெங்களூர் அணி, இதுவரை 8 ஆட்டங்களில் விளையாடி மூன்றில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

இந்த தோல்வி குறித்து பெங்களூர் அணியின் அணித்தலைவர் கோஹ்லி கூறுகையில், பெங்களூர் அணியில் வீரர்கள் ஒருங்கிணைந்து ஆடவில்லை. ஒற்றுமையாக ஒருங்கிணைந்து ஆடாததே தோல்விக்குக் காரணம்.

தொடக்கத்திலேயே இலக்குகள் சரிந்து விட்டதால் ஓட்ட இலக்கை நோக்கி முன்னேற முடியவில்லை. கடந்த சில ஆட்டங்களில் துடுப்பாட்டம் சிறப்பாக அமையாததே மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

எங்களது பந்துவீச்சு நன்றாக இருந்தும் ஒரு சில முடிவுகள் எங்களுக்கு எதிராகவே அமைந்தன என்று கூறியுள்ளார். (கு)

# முஸ்டாக் பதவி நீக்கம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் முஸ்டாக் அஹமட் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். பீற்றர் மூர்ஸ் இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்ற பின்னர் நீக்கப்படும் மூன்றாவது பயிற்றுவிப்பாளர் முஸ்டாக் அஹமட் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் கிரகாம் கூச், களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர் ரிச்சட் ஹல்சால் ஆகியோர் தங்கள் பதவிகளை இழந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்டாக் அஹமட் இங்கிலாந்து அணியுடன் 2008ஆம் ஆண்டு பீற்றர் மூர்ஸ் பயிற்றுவிப்பாளராக இருந்த வேளையில் இணைந்து இருந்தார்.

இதேவேளை இவர்கள் இருவரும் 2003 ஆம் ஆண்டு சசெக்ஸ் பிராந்திய அணியுடன் இணைந்து அவர்களைச் சம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற வைத்திருந்தனர். இருப்பினும் இங்கிலாந்து பயிற்றுவிப்பாளர்கள் பதவிகளில் அதிகமானவர்களை பீற்றர் மூர்ஸ் வைத்திருக்க விரும்பாமையின் காரணமாகவே விசேட பயிற்றுவிப்பாளர்கள் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முஸ்டாக் அஹமட் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாகிஸ் தான் அணியின் சுழல் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் பதவிக்கு முஸ்டாக் அஹமட் விண்ணப்பித்துள்ளார். இதேவேளை பாகிஸ்தான் அணியின் மிகச் சிறந்த சுழல்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்டாக்கும் அதே பதவிக்கு விண்ணப்பித்துள்ளார் என்பது முஸ்டாக் அஹமட்டுக்கு ஒரு போட்டியை ஏற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)



பீற்றர் மூர்ஸ் இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்ற பின்னர் நீக்கப்படும் மூன்றாவது பயிற்றுவிப்பாளர் முஸ்டாக் அஹமட் என்பது குறிப்பி டத்தக்கது.

# பாராட்டாவிடில் விலகிவிடுவேன்

விளையாடும்போது ரசிகர்கள் பாராட்டாமல், தன்னை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டால் பார்சிலோனா அணியிலிருந்து விலகி விடுவேன் என்று டேனி ஆல்வஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். பிரேசில் தேசிய அணியைச் சேர்ந்த ஆல்வஸ், பார்சிலோனா அணிக்காகவும் விளையாடி வருகிறார்.


சமீபத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றின்போது ரசிகர் ஒருவர் அவர் மீது வாழைப்பழம் ஒன்றை வீசினார். இதற்குப் பல தரப்பில் இருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், விளையாட்டின்போது தனது செயற்பாட்டை ரசிகர்கள் பாராட்டத் தவறினால் பார்சிலோனா அணியிலிருந்து விலகி விடுவேன் என்று ஆல்வெஸ் எச்சரித்துள்ளார்.

உதைபந்தாட்ட விளையாட்டுக்குச் சிறப்பான பங்களிப்பை ஆற்றி வரும் வீரர்களை எப்படி ரசிகர்கள் மறக்கின்றனர்? அது சரியானது அல்ல. அதனால், பார்சிலோனாவில் தொடர்ந்து விளையாடுவேன் என்று நான் எண்ணவில்லை. என்னை இரசிகர்கள் ஆதரித்தால் தொடர்ந்து இங்கேயே விளையாடுவேன். அவ்வாறு இல்லையெனில், வேறு அணிக்குச் சென்று விடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆல்வெஸ் மீது வாழைப்பழத்தை வீசிய ரசிகர் தனது வேலையை இழந்தார். இதை அறிந்த ஆல்வெஸ், அவருக்கு மீண்டும் வேலையை அந்த நிறுவனம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த ரசிகர் என் மீது பழத்தை எறிந்தது ஒரு நகைச்சுவைக்காக. அதனால், அவர் வேலையை இழந்தார் என்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. நான் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை. அதனால், மீண்டும் அந்த வேலையை அவருக்கு அளிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)



# ஒதுக்கப்பட்ட வீரர்கள் ஒரே நாளில் ஹீரோக்கள்

ஐ.பி.எல். போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டு ஆட்டங்களிலுமே இந்திய அணியால் ஒதுக்கப்பட்ட வீரர்களே அதிரடி ஹீரோக்களாக விளங்கினர்.

நேற்றுமுன்தினம் நடந்த பஞ்சாப்- கொல்கத்தா அணிகளின் போட்டியின்போது இந்திய அணியின் வீரர்களான கம்பீர் மற்றும் ஷேவாக் தங்களின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்க ஓராண்டுக்கு மேலாக போராடி வரும் பஞ்சாப் அணியில் இடம்பெற்றிருக்கும் ஷேவாக், கொல்கத்தாவுக்கெதிரான ஆட்டத்தில் 50 பந்துகளில் 72 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். அதே போல் கொல்கத்தா அணியின் அணித் தலைவராக விளங்கும் மற்றும் இந்திய அணிக்குள் மறுபடியும் திரும்ப முயற்சித்து வரும் கவுதம் கம்பீர் இதே ஆட்டத்தில் 45 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார். மேலும் 46 ஓட்டங்கள் எடுத்த றொபின் உத்தப்பா , 3 இலக்குகள் வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் பியுஷ் சாவ்லா ஆகியோர்களும் முன்பு இந்திய அணிக்காக விளையாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

இந்திய அணிக்குள் மறுபடியும் திரும்ப முயற்சித்து வரும் கவுதம் கம்பீர் இதே ஆட்டத்தில் 45 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார்

# ராயுடு,சிமன்ஸ் விளாசல் பெரு வெற்றி பெற்றது மும்பை





சிமன்ஸ் - ராயுடு அதிரடி ஆட்டத்தால் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியை 7 இலக்குகளால் பெரு வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம் பெற்ற 36 ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அவ்வணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ஆரோன் பிஞ்ச், ஷிகிர் தவான் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் ஆரம்பத்தில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி வரும்போது ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்தின் நிறைவில் 31 ஓட்டங்களை அணி பெற்றிருந்த போது ஷிகிர் தவான் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களம் புகுந்த லோகேஸ்ராகுல் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறி ஏமாற்றமளித்தார். அடுத்து பிஞ்சுடன் இணைந்தார் டேவிட் வோர்ணர். இருவரும் நிதானமாகவும் அதிரடியாக வும் துடுப்பெடுத்தாடினர்.

இச் சூழ்நிலையில் 18.5 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஹைதராபாத் 133 ஓட்டங்கள் பெற்றிருந்த போது பிஞ்ச் 2 ஆறு ஓட்டங்கள்,7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இதனை அடுத்து வோர்ணருடன் இணைந்த நாமன் ஓஜா நல்ல ஒத்துழைப்பு வழங்க அரைச்சதம் கடந்தார் வோர்ணர். இவரின் அதிரடியான உதவியுடன் 20 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது ஹைதராபாத். இதில் வோர்ணர் 31 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள்,6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 55 ஓட்டங்களையும்,ஓஜா 7 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் லசித் மலிங்க 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 158 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் வீரர்கள் ஆரம்பத்தில் ஓட்டங்கள் பெறுவதற்கு கடும் பிரயத்தனம் செய்தனர். இச் சூழ்நிலையில் 2 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கௌதம் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து சிமன்சுடன் இணைந்தார் அம்பதி ராயுடு இவர்கள் இருவரும் ஹைதராபாத் பந்து வீச்சாளர்களை தமது துடுப்பு மட்டை மூலம் விரட்டினர். சகல பந்து வீச்சாளர்களையும் இருவரும் மாறிமாறிப் பதம் பார்த்தனர். இவர்கள் இருவரும் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தனர். இச் சூழ்நிலையில் இருவரும் 131 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த போது சிமன்ஸ் 50 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களுடன், புவனேஸ்வகுமாரின் பந்து வீச்சில் இலக்கைப் பறிகொடுத்து வெளியேறினார். இவர் ஆட்டமிழந்து சிறிது நேரத்தில் அதிரடியாக விளையாடி கொண்டிருந்த அம்பதி ராயுடுவும் 46 பந்துகளில் 2ஆறு ஓட்டங்கள் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனை அடுத்து இணைந்த றோகித் சர்மா- கெரான் பொலர்ட் ஆகியோர் மேலதிக இலக்குகள் இழப்பின்றி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இறுதியில் 18.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது மும்பை அணி.

பந்து வீச்சில் புவனேஸ்வகுமார் 2 இலக்குகளையும் கைந்தி குயிட்ஸி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அம்பதி ராயுடு தெரிவு செய்யப்பட்டார்.

(400)





பயிலுநருக்கான பதவி வெற்றிடங்கள்

**Vacancies for Trainee Associates – KPMG Jaffna Branch**

**KPMG is a global network of professional firms providing Audit, Tax and Advisory services. We operate in 152 countries and have 145, 000 people working in member firms around the world.**
**The independent member firms of the KPMG network are affiliated with KPMG International Cooperative ("KPMG International") a Swiss entity.**

The local member firm in Sri Lanka was established in 1897 and presently is one of the largest professional service firms. The firm is also an ACCA approved platinum category employer for trainee and professional development.

*The ideal candidate should be:*

- Registered students of CA Sri Lanka, ACCA or CIMA;
- Students with excellent written and spoken English and a Credit for English Language, Mathematics at O/L's;
- Able to demonstrate leadership and networking skills;
- Below 25 years of age as at June 1, 2014.

**Special consideration will be given for participation in sports and extracurricular activities.**

Those who meet the specified criteria should send application letter with CV and e-mail to: mmayuran@kpmg.com on or before May 23, 2014.

**Fascinating, Challenging and Well rewarded Career**

**To work with leading clients including some of the world's biggest**

**To be part of multi-disciplinary teams with deep industrial knowledge**

APPROVED EMPLOYER ACCA PLATINUM


## சென்னையில் ஐ.பி.எல். ஆடாதமை ஏமாற்றம்




சென்னையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஆட்டத்தை காண முடியாமற் போனது தனக்கு ஏமாற்றமளிப்பதாக ஸ்ரிபன் பிளமிங் கூறியுள்ளார்.

மாநகராட்சி தடையில்லாச் சான்றிதழ் வழங்காததால் சென்னையில் ஐ.பி.எல். போட்டி நடத்தப்படவில்லை. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மோதும் 2 ஆட்டமும், பிளே ஓப் சுற்றின் 2 ஆட்டமும் ஆக மொத்தம் 4 ஆட்டங்கள் சேப்பாக்கம் மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டது.

2 ஆட்டம் ராஞ்சிக்கும், பிளே ஓப் ஆட்டம் கொல்கத்தா மற்றும் மும்பைக்கும் மாற்றப்பட்டன. சென்னை அணி சேப்பாக்கம் மைதானத்தில் ஒரு போட்டியில் கூட ஆட முடியாமல் போனது ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

இதேபோல சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளரும், நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவருமான ஸ்டீபன் பிளமிங்கும் ஏமாற்றம் அடைந்துள்ளார்.

இது குறித்து பிளமிங் கூறுகையில், சென்னை சுப்பர் கிங்ஸ்சின் அணியின் நகரமே சென்னை தான் அதனால் நாங்கள் சென்னையில் விளையாட முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

பிற இடங்களில் ஆட்டங்கள் நடந்தாலும், சென்னை ரசிகர்களின் ஆதரவுக்குத் தான் ஆவலுடன் இருந்தோம். ஆனால் அந்த ஆவல் ஏமாற் றத்தில் தான் முடிந்தது. தற்போது எங்கள் அணியின் சொந்த நகரமாக ராஞ்சி உள்ளது என்று கூறியுள்ளார். (த)


**கருத்தரங்கு**

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சைக்கு
புதன்(14/5), வியாழன் (15/5), சனி(17/5), ஞாயிறு(18/5)
காலை 9.30 -12.30
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) (c\14255)


## இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷ் பயணம்

இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளின் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கு கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதன் பிரகாரம் இரண்டு அணிகளுக்கும் இடையில் ஜூன் 15,17 மற்றும் 19 ஆம் திகதிகளில் மூன்று சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தனிப்பட்ட காரணங்களுக்காக மஹேந்திர சிங் டோனியும் ஓய்வளிக்கப்படுவதால் விராட் கோஹ்லியும் இந்த தொடரில் விளையாட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் தலைவராக புதிய ஒருவர் நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் ஷர்மா அல்லது ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரில் ஒருவர் இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்படும் சாத்தியம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)


**அரிய வாய்ப்பு**
**கனடா 10 வாரங்களில்**
**3 படிமுறைகளில் விசா ஆலோசனை**
**4 பேருக்கு மட்டும்**

கனடாவில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை முதல் 30 நாட்களுக்குள்- விண்ணப்பம் சமர்ப்பித்தலும், Skype நேர்முகத்தேர்வும்

அடுத்த 30 நாட்களுக்குள் - சட்ட அனுமதிப் பத்திரம்.

மீதி 12 தினங்களுள் - விசா பற்றிய முடிந்த முடிவு

**விண்ணப்ப முடிவு - 17.05.2014**

திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090



**நாய்க்குட்டி விற்பனைக்கு**

40 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் லயன் செப்பட் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 239 5849 (48004) (7,8,3)

**ஆணையிட்டு யார் தடுத்தாலும்**
**அலைகடல் ஓயப்போவதில்லை**
**ஆயிரம் கை ஓங்கினாலும்**
**சூரியன் மறையப் போவதில்லை**

வணிகக்கல்வி
**S.K.பாலசுபேஷ்**

சித்தங்கேணிப் பகுதியில் நடைபெறுகின்ற எனது அனைத்து வகுப்புக்களும் 14.05.2014 புதன்கிழமை தொடக்கம் றோயல் அக்கடமி சங்கானை எனும் இடத்தில் வழமையான நேர அட்டவணையில் நடைபெறும்.

(47999) (7,8,3)

| A/L 2014 | A/L 2015 | A/L 2016 |
|---|---|---|
| Wed - 3-4pm | Wed - 4-5pm | Wed - 5-6pm |
| மனிதவள முகாமை | பணம் வங்கி | வணிகச் சூழல் |

**KU's London English School**
**Learn British English in the best English School**

- IELTS -Personal and Group Classes
- ESOL-L1/L2/L3 -For School Students
- i-Spoken -Express English Speaking Course
- Business English - for Employees and Job Seekers

(All international English courses are delivered by local lecturers worked overseas)

Visit : http://edu.kugroup.info
**Knowledge Universe®**
College of Professional Studies
**No 626,1/1,K.K.S Rd,Jaffna.**
**Tel: 021-3208342/ 0777302882**
16 years in international education delivery services.

UEC
Lectures by MBA Professionals


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.